மே 2002 www.padippakam.com ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



ஈழம்:
தற்காலிகத் தீர்வைத் தேடி...

## ஜெயாவின் அராஜக அரசியல்



## செய்வதறியாது எதிர்க்கட்சிகள்

படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## காசுமீரில் இராணுவ அட்டூழியங்கள்

கடந்த மார்ச் 30-ஆம் தேதி காசுமீர் பள்ளத்தாக்கிலுள்ள பாரா முல்லா நகரில் காசுமீர் போராளிகளுக்கும், இராணுவத்துக்கும் இடையே நடந்த மோதலில் இரண்டு இராணுவ சிப்பாய்கள் இறந்து போனார்கள். இச்சம்பவத்திற்கு பழிவாங்கும் முகமாக, இராணுவம் பாராமுல்லா நகரிலுள்ள தாவீத் குஞ்ச் பகுதியைச் சுற்றி வளைத்துத் தாக்கியதில் நூற்றுக்கும் அதிகமான அப்பாவி முசுலீம்கள் படுகாய மடைந்தனர். இக்கொலைவெறித் தாக்குதல் நடந்த பத்து நாட்க ளுக்குள் பாராமுல்லா மாவட்டத்திலுள்ள ரஃபியாபாத்தில் இராணு வமும், இந்திய அரசின் கைக்கூலிகளும் வீடு புகுந்து நடத்திய தாக்குதலில் ஐந்து அப்பாவி முசுலீம்கள் கொல்லப்பட்டனர்; அனந்த்நாக் மாவட்டத்திலுள்ள குல்லார் கிராமத்தில் தேடுதல் வேட்டை நடத்திய எல்லை பாதுகாப்பு படை, 17 வயது இளம் பெண்ணைத் துப்பாக்கி முனையில், அவளின் உறவினர்களின் முன்னே நிர்வாணப்படுத்திக் கும்பலாகக் கற்பழித்தது. இந்த இரா ணுவ அட்டூழியங்களுக்கு எதிராக காசுமீர் பள்ளத்தாக்கு எங்கும் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடந்து வருகின்றன. ஆனால், இந்து மத வெறிக் கும்பலோ காசுமீரில் அப்பாவி இந்துக்கள்தான் தாக்கப்படு வதாகப் புளுகி, இந்த உண்மைகளை மூடி மறைத்து வருகிறது.

## காதலுக்கு மரண தண்டனை

ஆந்திரப் பிரதேசத்திலுள்ள எர்ரபள்ளி கிராமத்தைச் சேர்ந்த கோலா நாகர்ஜுனா, தாழ்த்தப்பட்ட இளைஞர். இவரும், அதே கிரா மத்தில் வாழும் ரெட்டி சாதியைச் சேர்ந்த லெட்சுமி தேவியும் ஒரு வரையொருவர் இரகசியமாகக் காதலித்து வந்திருக்கிறார்கள். ஊருக்குத் தெரிந்தால் இந்தக் காதல் நிறைவேறாது எனப் புரிந்து வைத்திருந்த இருவரும், வீட்டை விட்டு வெளியேறி மைசூருக்குச் சென்று திருமணம் செய்து கொண்டு, அங்கேயே வாழத் தொடங்கி யிருக்கிறார்கள். இவர்களைத் தேடியலைந்த ரெட்டி மேல்சாதி வெறியர்கள், மைசூரில் இருந்து இவர்களைக் கிராமத்திற்கு இழுத்து வந்து, கணவன் - மனைவியைப் பிரித்ததோடு, நாகர்ஜு னாவை போலீசில் பிடித்துக் கொடுத்து விட்டனர். மேல்சாதி பெண்ணைக் காதலித்த 'குற்றத்திற்காக' அந்த தாழ்த்தப்பட்ட இளை ஞனை போலீசார் மிருகத்தனமாகத் தாக்கியதில், அவன் இரத்தம் இரத்தமாகக் கக்கி இறந்தே போனான். குவைத் பெண் தலால் ஆஸ்மியின் காதல் மண வாழ்க்கையைச் சூழ்ந்துள்ள அபாயம் பற்றி பக்கம் பக்கமாக எழுதித் தள்ளிய பத்தி ரிகைகள், காதலித்த குற்றத்திற்காக தாழ்த்தப் பட்ட இளைஞனுக்கு மரண தண்டனை கொடுக்கப்பட்டது பற்றிக் கண்டு கொள்ள வேயில்லை.

## நவீன நாஜிகளுக்கு எதிராக பிரான்சில் தெருப்போர்

பிரான்சு நாட்டின் குடியரசுத் தலை வரைத் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெற்ற முதல் சுற்று தேர்தலில் நவீன நாஜிக் கட்சி யான தேசிய முன்னணியின் தலைவர் ழான் மாரி லே பென் இரண்டாம் இடத்தைப் பிடித் திருக்கிறார். மே 5-ஆம் தேதி நடைபெற வுள்ள இரண்டாம் கட்டத் தேர்தலில் தற்போ தைய அதிபர் சிராக்குக்கும், லே பென்னுக்கும் இடையே நேரடி போட்டி நடக்கும். பிரான்சின் சோசலிச கட்சித் தலை வரும், தற்போதைய பிரதமருமான லியோனல் ஜோசபினைப் பின்னுக்குத் தள்ளி விட்டு, லே பென் இரண்டாவது இடத்தைக் கைப்பற்றி விட்ட செய்தி வெளியானவுடனேயே, இந்த நவீன நாஜிக் கட்சித் தலை வரின் வெற்றியை எதிர்த்து பிரான்சு நாடெங்கும் தொழிலாளர்கள் தன்னெழுச்சியாகப் போராடத் தொடங்கிவிட்டனர். பிரெஞ்சு புரட் சியின் மையமான பாஸ்டில் சிறையின் முன்பு நடந்த ஆர்ப்பாட் டத்தில் கிட்டதட்ட 20,000 தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். குடியரசுத் தலைவர் மாளிகை முன்பு நடந்த ஆர்ப்பாட்டம், போலீ சுக்கும், இளைஞர்களுக்கும் இடையேயான மோதலாக மாறியது. பிரான்சு நாடெங்குமே பள்ளி மாணவர்கள், வகுப்பறைகளைப் புறக்கணித்து விட்டு, நவீன நாஜிகளுக்கு எதிரான போராட்டத்தில் குதித்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

**பிரான்சு குடியரசு தலைவர் தேர்தலின் முதல் சுற்றில் இரண்டாம் இடத்தைப் பிடித்த நவீன நாஜிக் கட்சித் தலைவர் லே பென்னை எதிர்த்து பாரிசில் மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.**




## முதலாளித்துவக் கொழுப்பே அமெரிக்க ஜனநாயகம்

அமெரிக்காவைச் சேர்ந்த ''என்ரான்'' என்ற பன்னாட்டு நிறு வனம் திவாலானதையடுத்து, அமெரிக்காவின் ஆயிரக்கணக்கான ஊழியர்களும் தொழிலாளர்களும் வேலை இழந்தனர். அந்நாட்டில் இருந்து வெளிவரும் ''பிளேபாய்'' என்ற ஆபாச பத்தி ரிகை, இந்த அவலத்தை வக்கிரமான முறையில் பயன்படுத்திக் கொள்ள கணக்குப் போடுகிறது. அப்பத்திரிகையின் நடுப்பக்கத்தில் எப்பொழுதும் பெண்களின் நிர்வாணப் படங்கள்தான் வெளியிடப் படும். இப்பொழுது அந்தப் பக்கங்களை 'அலங்கரிக்க' வேலை யிழந்த என்ரானின் பெண் ஊழியர்களுக்கு வாய்ப்பு கொடுப்பதாக அறிவித்துள்ளது பிளேபாய். ''வேறு வேலை கிடைக்கும் வரை நிர்வாணமாக 'போஸ்' கொடுப்பதை அவர்கள் பொழுதுபோக் காகச் செய்யலாம்; இதன் மூலம் அவர்கள் அமெரிக்காவின் புகழ் பெற்ற மாடல்களாகக் கூட மாறிவிட அதிருஷ்டம் அடிக்கலாம்'' என முதலாளித்துவக் கொழுப்பு பொங்கி வழிய, என்ரானின் பெண் ஊழியர்களுக்கு பிளேபாய் தூண்டில் போட்டு வருகிறது.

## குலுங்கியது இத்தாலி

''ஒரு தொழிலாளி தனது வேலையில் மிகவும் மோசமான அபாயகரமான தவறைச் செய்திருந்தாலொழிய, அவரை வேலையில் இருந்து நீக்க முடியாது'' என்பது இத்தாலிய தொழிலா ளர்கள் பெற்றிருக்கும் சட்டபூர்வ உரிமை. இந்தச் சட்டம் இத்தாலிய தொழிலாளர்களுக்கு ஆயுள் முழுக்க வேலை பாதுகாப்புக் கொடுப்பதாக புலம்பும் இத்தாலிய பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி, முதலாளிகள் நினைத்த நேரத்தில் தொழிலாளிகளை வேலையில் இருந்து துரத்தியடிப்பதற்கு ஏற்றவாறு தொழிலாளர் நலச் சட்டத்தைச் சீர்திருத்தப் போவதாக அறிவித்திருக்கிறார். இத்தாலிய பிரதமரே மிகப் பெரும் இத்தாலிய பத்தி ரிகை அதிபர் என்பது இங்கு குறிப்பிடத்தக் கது. இத்தாலிய அரசின் இந்த தொழிலாளர் விரோதப் போக்கைக் கண்டித்து, ஏப்ரல் 16 அன்று தொழிலாளர்கள் நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தினர். கிட்டதட்ட இருபது இலட்சம் தொழிலா ளர்கள் கலந்து கொண்ட இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தால், இத்தாலிய நாடே ஸ்தம்பித்துப் போய் விட்டதாகவும், கடந்த இருபது ஆண்டுகளில் இப்படிப்பட்டதொரு தொழிலாளர் எழுச்சியை இத்தாலி கண்ட தில்லை என்றும் முதலாளித்துவ பத்திரி கைகள் பொருமியுள்ளன.


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 17

**இதழ் 7**

மே 2002

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**மின் அஞ்சல் முகவரி:**
**puthiyajananayagam@hotmail.com**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அஞ்சல் பெட்டி எண். 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**


# பாசிச ஜெயாவின் அதிரடி அரசியல் செய்வதறியாமல் எதிர்க்கட்சிகள்

ஜெயலலிதா தலைமையிலான ஆளும் கட்சியும் அரசும் சட்டமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் கட்டவிழ்த்து விட்டிருக்கும் அதிரடி கிரிமினல், அராஜக அரசியலை எப்படி எதிர்கொள்வது என்கிற வழிவகை அறியாது, தி.மு.க. திண்டாடுகிறது. சமீப காலம் வரை ஜெயலலிதாவின் இத்தகைய அரசியலை இரசித்து, அதன் பலனாக ஆதாயம் அடைந்து வந்த த.மா.கா., இரு போலி கம்யூனிஸ்டுக் கட்சிகள் போன்ற பிற ஓட்டுக் கட்சிகள் இப்போது திகைத்து நிற்கின்றன. கடந்த சட்டமன்றத் தேர்தல்களின்போது வாக்குப்பதிவுகள் முடிந்து, எண்ணிக்கை துவங்குவதற்கு முன்பாகவே அ.தி.மு.க. அணியின் கிரிமினல் தாதா ஜான் பாண்டியன் தலைமையிலான ரௌடிகள், தி.மு.க. தேர்தல் அலுவலகத்துக்குள் புகுந்து பரிதி இளம்வழுதி உட்பட தி.மு.க. பிரமுகர்கள் பலரை வெட்டி வீழ்த்தினர். தயார் நிலையில் இருந்த ஜெயலலிதாவின் விசுவாச போலீசு அதிகாரிகள் தி.மு.க.வினர் மீது பொய் வழக்குகள் போட்டுச் சிறையிலடைத்தனர்.

குருவாயூர் கோயிலுக்கு ஜெயலலிதா யானை தானம் செய்யும் சமயம் எதிராளிகள் சிறையிலடைக்கப்பட வேண்டும் என்ற சோதிடர்களின் யோசனைப்படி அவசர கதியில் "மேம்பால ஊழல் வழக்கு" சோடிக்கப்பட்டு கருணாநிதி, ஸ்டாலின், பொன்முடி உட்பட பலர் நள்ளிரவில் அராஜகமான முறையில் கைது செய்யப்பட்டனர். இதைக் கண்டித்து தி.மு.க.வினர் நடத்திய பேரணியின்போது சென்னை "தாதா" வீரமணி தலைமையில் கிரிமினல் ரௌடிகளும், போலீசு ரௌடிகளும் ஏவிவிடப்பட்டு, தி.மு.க.வினர் சிலரைச் சுட்டும் வெட்டியும் கொன்றனர். இந்தச் சம்பவங்களின் போது செய்தி சேகரிக்கப்போன பத்திரிகையாளர்கள் போலீசு ரௌடிகளால் தாக்கப்பட்டனர்.

சென்னை மாநகராட்சி உட்பட உள்ளூராட்சித் தேர்தல்கள் அறிவிக்கப்படும் முன்பாகவே போலி வாக்காளர்கள் பலர் சேர்க்கப்பட்டனர். வாக்குப்பதிவு நாளன்று சேகர் பாபு, கராத்தே தியாகராஜன், பாலகங்கா, சைதை துரைசாமி, வளர்மதி தலைமையிலான ரௌடிகளின் படைகளை பயங்கர ஆயுதங்களுடன் ஏவி, எதிர்த்தரப்பினரைத் தாக்கி விரட்டிவிட்டு வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றிக் கொண்டு ஓட்டுப் போட்டுக் கொண்டனர்.

சென்னை - சைதை, வாணியம்பாடி, ஆண்டிப்பட்டி இடைத்தேர்தல்களில் போலி வாக்காளர்களைப் பெருமளவு சேர்த்துக் கையும் களவுமாகப் பிடிபட்டது; தேர்தல் ஆணையத்தை விலைக்கு வாங்கி ஆண்டிப்பட்டியில் மட்டும் தேர்தல் நடத்தவும் கோடிக் கணக்கில் வாரியிறைத்து, போலீசு அராஜகம் - வன்முறை மூலம் தி.மு.க.வை முடக்கி வைத்து, முறைகேடுகள் பல செய்து ஜெயலலிதா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அடுத்து வந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் வாக்குச் சாவடிகளுக்குள் எதிர்த்தரப்பினரை நுழையவிடாது ஓட்டுப் போட்டுக் கொண்டது. அண்ணாநகர் ரமேஷ் தற்கொலை வழக்கு, எம்.கே. பாலன் கடத்தல் - கொலை வழக்கு, சென்னை - சேப்பாக்கம் தி.மு.க. அலுவலகம் தாக்குதல் வழக்கு போன்றவற்றில் தி.மு.க.வினர் மீது வழக்கு சோடிக்க முயலுகிறது.

சட்டமன்றத்துக்குள்ளும் தி.மு.க. உட்பட எதிர்க்கட்சியினரை செயல்பட விடாமல், காளிமுத்துவை வைத்து அராஜகமான முறையில் அடக்கி வைக்கிறது. கருணாநிதி குடும்பத்தைச் சாடவும், ஜெயலலிதாவுக்குத் துதிபாடவும் சட்டமன்றம் முறைகேடாகப் பயன்படுத்தப்படுகிறது. பா.ம.க., த.மா.கா., காங்கிரசு ஆகிய கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி அந்தக் கட்சித் தலைமைக்கு எதிராகத் தூண்டி விடுகிறது. ஜெயலலிதா மற்றும் அவரது தயவிலான துதிபாடிகள் தவிர வேறு யாரும் சட்டப் பேரவை விவாதங்களில் கலந்து கொள்ள முடிவதில்லை.

ஜெயா கும்பலின் இத்தகைய அடாவடி, கிரிமினல், அராஜக அரசியலுக்கு காந்தீய வழி - சட்டவழி எதிர்ப்புக் காட்டுவதற்கு மட்டுமே தி.மு.க. தயாராக உள்ளது. தேர்தல் ஆணையத்திடம் திரும்பத் திரும்ப புகார் தருகிறது; மனுப் போடுகிறது; வழக்குப் போடுவதாக எச்சரிக்கிறது. நேர்மையாகவும், நடுநிலையாகவும் நடந்து கொள்ளும்படி போலீசுக்கும் அதிகாரிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கிறது. பொதுக்கூட்டம், பேரணி, மறியல், உண்ணாவிரதம் ஆகியவை நடத்திப் பார்க்கிறது. இவைதான் தி.மு.க.வின் வரம்புகள். பிற கட்சிகள் இதற்குக் கூடத் தயாரில்லை என்பதால் ஜெயா கும்பல் மேலும் துணிச்சலோடு அராஜக அரசியலைக் கட்டவிழ்த்து விடுகிறது.

நாடாளுமன்ற, சட்டமன்ற ஜனநாயக அமைப்புக்குள்ளேயே பாசிச சர்வாதிகார முறையில் ஆட்சி புரிவதில் சிவசேனா, பா.ஜ.க.வை விஞ்சிவிட்டது ஜெயா கும்பல். பொடா, பொகா ஆகிய புதிய புதிய கருப்புச் சட்டங்களால் தன்னை மேலும் வலுப்படுத்திக் கொள்ளுகிறது. எதிர்க்கட்சிகளை மட்டுமல்ல, ஜனநாயக அரசியல் சக்திகளையும் பாசிச முறையில் ஒடுக்குவதற்கு தயாராகிவிட்டதை, அவரது ஆட்சியின் சமீபத்திய பொருளாதாரத் தாக்குதலை எதிர்த்துத் தன்னெழுச்சியாக மக்கள் போராடியபோது கண்டோம். ஜெயா கும்பலின் தாக்குதலுக்கு எதிராகத் தம்மையே காத்துக் கொள்ள இயலாமல் போகும் ஓட்டுக் கட்சிகள், மக்கள் போராட்டங்களுக்கு தலைமையேற்க இயலாமற் போனதையும் கண்டோம். ஜெயா கும்பலின் அதிரடி, அடாவடி, கிரிமினல் அராஜக அரசியலைச் சட்டபூர்வமாக மட்டும் எதிர்கொள்ளும் ஓட்டுக்கட்சிகளை இனியும் நம்பி நாம் மோசம் போகக்கூடாது.

படிப்பகம்

www.padippakam.com

# சுயநிர்ணய உரிமைக்குப் புலிகளின் புதிய வியாக்கியானம்

இலங்கையில் ஈழத்தமிழர் இனப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சி மீண்டும் துவங்கியிருக்கிறது. விடுதலைப் புலிகளின் தளபதி - தலைவர் பிரபாகரனும், இலங்கையின் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கேவும் நார்வே நாட்டு அரசின் மேற்பார்வையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்டு, போர் நிறுத்தத்தை அமலாக்கியுள்ளனர்.

இதைத் தொடர்ந்து ஈழத்தின் வடபகுதி மீதான பொருளாதாரத் தடை நீக்கப்பட்டு, பல்வேறு கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் - கண்டி இடையிலான நெடுஞ்சாலை ஏ-9 பல ஆண்டுகளுக்குப் பிறகு போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டுள்ளது. அதேபோல, கிழக்கிலும், மன்னார் - யாழ்குடா பகுதிகளிலும் பல பாதைகள் போக்குவரத்துக்குத் திறந்துவிடப்பட்டுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னி - ஓமைந்தைக்கு சென்ற ரணில் விக்கிரமசிங்கேவுடன் இலங்கை இராணுவ அமைச்சரும், பொருளாதாரச் சீர்திருத்த அமைச்சரும் முப்படைத் தளபதிகளும் கலந்து கொண்டு புலித் தலைவர்கள் பலருடன் கலந்துரையாடினர்; பல ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கைப் பிரதமர் என்கிற முறையில் யாழ்ப்பாணத்திற்குப் போய் ஈழத் தமிழ் மக்களுடன் நல்லுறவாடிக் கதைத்துமிருக்கிறார், ரணில் விக்கிரமசிங்கே.

இவற்றைவிட முக்கியமாக, விடுதலைப்புலிகள் விதித்துள்ள நிபந்தனைகள் பலவற்றை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, சிலவற்றை அமலாக்கியும் உள்ளது. விடுதலைப் புலிகள் தவிர, ஏனைய தமிழ்ப் போராளிக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைப் பறிமுதல் செய்து, நிராயுதபாணிகளாக்கி விட்டது. இந்தக் குழுக்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை இராணுவத்துடன் கூட்டுச் சேர்ந்து அதனின் கைக்கூலிப் படையாகச் செயல்பட்டு வந்தன; இவை ஈழ இனப் பிரச்சினைக்கு, இராணுவ - பாசிசத் தீர்வை மட்டுமே நம்பியுள்ள இலங்கை அதிபரின் ஆதரவு பெற்றவை; இந்திய அரசுக்கு விசுவாசமான, ஈழ விடுதலையின் துரோகிகள்.

அடுத்து, நிராயுதபாணியாக உள்ள விடுதலைப் புலிகளின் தளபதிகள் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சுதந்திரமாகச் சென்று அரசியல் பணியாற்றவும் - ஆதரவு திரட்டவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் ஆயுதங்கள் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதாவது, ஆயுதக் களைப்பு, பேச்சு வார்த்தைக்கான நிபந்தனையாக்கப்படவில்லை. புலிகள் சார்பாக இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கும் பிரபாகரனுடன் ஆலோசனை கலப்பதற்கும் ஆண்டன் பாலசிங்கம் அனுமதிக்கப்பட்டிருப்பதோடு இருவரும் சேர்ந்து 10 ஆண்டுகளுக்குப் பிறகு எவ்விதக் கட்டுப்பாடுமின்றி, உலக நாடுகளின் செய்தியாளர்களைச் சந்தித்துள்ளனர்.

அடுத்து, வட-கிழக்கு மாகாணங்களில் ஒரு இடைக்கால நிர்வாகத்தை ஏற்பது குறித்து விரைவில் தாய்லாந்து நாட்டில் சந்தித்து இலங்கை அரசும் - விடுதலைப் புலிகளும் பேச்சு வார்த்தைகள் நடத்தவுள்ளனர். இந்தப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதற்கு இலங்கையில் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று அவர்கள் நிபந்தனை விதித்துள்ளனர். இலங்கை அரசும் அதை ஏற்கத் தயாராக உள்ளது.

***

இலங்கை - ஈழப் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தைகள் மூலம் அமைதி வழித் தீர்வு காண்பதற்கான நான்காவது ''முயற்சி'' இது வாகும். முதலாவதாக, திம்பு பேச்சு வார்த்தைகள் முதல் ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தம் வரை இந்தியக் குறுக்கீடு மூலமாகத் தீர்வு காணும் முயற்சி - அது இந்தியாவின் ஈழ ஆக்கிரமிப்பு. இந்திய ஆக்கிரமிப்பு படைக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர், இறுதியாக ராஜீவ் காந்தி கொலை வரை சென்று முடிந்தது.

இரண்டாவதாக, இந்திய இராணுவத்தை விரட்டுவதில் இலங்கை அதிபர் பிரேமதாசா - விடுதலைப் புலிகளுக்கு இடையிலான இரகசிய உடன்பாடு, பேரங்கள் கருவிலேயே சிதைவுற்று, பிரேமதாசா, லலித் அதுலத்முதலி, காமினி திசநாயக மற்றும் அமிர்தலிங்கம் போன்ற பல ஈழ சமரசவாதிகளின் கொலைகளுடன் முடிவுற்றது.

இந்தச் சமயத்தில் ஈழத் தமிழினப் பிரச்சினையின்பால் சிங்கள இனத்தவரிடையேயும், அவர்களின் அரசியல் கட்சிகளினிடையேயும் பண்பு ரீதியிலான ஒரு மாற்றம் நிகழ்ந்திருப்பதைக் காண முடிந்தது. பத்தாண்டுகளுக்கு மேலாக நீடித்த ஈழ விடுதலைப் போரின் பேரழிவுகளும் பெரும் சுமைகளும் இலங்கையில் கடுமையான அரசியல், பொருளாதார நெருக்கடிகளையும், பாதிப்புகளையும் ஏற்படுத்தியிருந்தது. முடிவற்ற - இழுபறியில் நீடித்த போரை நிறுத்த வேண்டும் என்கிற அமைதி எண்ணம் பெரும்பாலான சிங்கள மக்களிடையே பரவியது.

ஈழத்தமிழர் மீது மட்டுமல்ல. சிங்கள எதிர்க்கட்சிகள் மீது அதிபர் பிரேமதாசா லலித் அதுலத் முதலி, காமினி திசநாயகா கும்பல் கட்டவிழ்த்துவிட்ட பாசிச ஒடுக்கு முறைக்கு ஏறத்தாழ எழுபதாயிரம் சிங்கள இளைஞர்கள் பலியாயினர். பொருளாதார நெருக்கடிகளின் சுமை தாங்காது எழுச்சியுற்றுப் போராடிய சிங்கள உழைக்கும் மக்களும் அதே பாசிச முறையில் ஒடுக்கப்பட்டனர். இறுதியில் பாசிச பிரேமதாசா கும்பலும் கொன்றொழிக்கப்பட்டது. கொல்லப்பட்ட தலைவர்களின் விதவை மனைவிமாரிடம் அரசியல் தீர்வும் தலைமையும் எதிர்பார்த்து இலங்கை அரசியலே சிக்கலுக்குள்ளானது.

இந்த நெருக்கடிகளைப் பயன்படுத்திக் கொண்டு ஈழத் தமிழர் பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வுகாணப் போவதாக வாக்களித்து தேர்தல்களில் போட்டியிட்டது, சந்திரிகா குமாரதுங்கே தலைமையிலான மக்கள் கூட்டணி. அதன் வாக்குறுதியை சிங்கள, தமிழ் மக்கள் மட்டுமல்ல; ஈழ விடுதலைப் புலிகளும் கூட நம்பி, மறைமுக ஆதரவு கொடுத்ததன் விளைவாக நாடாளுமன்றத் தேர்தல்களிலும், அடுத்து வந்த இலங்கை அதிபர் தேர்தலிலும் சந்திரிகா அணி வெற்றி பெற்றது.

ஆனால், சந்திரிகாவோ, அதிகாரத்தைக் கைப்பற்றியவுடன் தன் தாயைப் பிரதமராகவும் நெருங்கிய உறவுக்காரனை இராணுவ மந்திரியாகவும் ஆக்கியதோடு ஒரு சிறு கும்பலின் பாசிச ஆட்சியை நிறுவினார். ஈழத் தமிழ் - சிங்கள மக்களின்



படிப்பகம்

www.padippakam.com

நம்பிக்கைக்குத் துரோகமிழைத்தார். ஈழத்தின் மீதான பொருளாதாரத் தடை நீக்கம், அரசியல் மட்டத்திலான பேச்சு வார்த்தை போன்றவற்றை நிராகரித்து, ஈழத் துரோகக் கும்பல்களை முன்நிறுத்தி வெறும் சமாதான நாடகமாடினார். எனவே, ஈழ விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்தமும், பேச்சு வார்த்தைகளும் துவங்கிய சில வாரங்களிலேயே முறிந்து போனது. இவ்வாறாக ஈழத் தமிழினப் பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வுக்கான மூன்றாவது முயற்சியும் தோற்றுப் போனது.



சமாதான பேச்சு வார்த்தைகளைத் தொடங்கும் முகமாக இலங்கைக்கான நார்வே நாட்டுத் தூதர் ஜோன் வெஸ்ட்போர்க், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் ஆண்டன் பாலசிங்கத்துடன் நடத்திய சந்திப்பு.

அதன்பிறகு, மிகக் கடுமையான, அதிகபட்ச உயிரிழப்புகளைக் கொண்ட கிரமமான போரை ஈழம் கண்டது. பெருமளவிலான இராணுவத்தையும் ஆயுதங்களையும் குவித்து, யாழ்குடா மீது தாக்குதல் தொடுத்து, யாழ்ப்பாணம் உட்பட குடா நாட்டை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்தது. யாழ்ப்பாணம் உட்பட குடா நாட்டை விட்டுப் பின்வாங்கிய புலிகள், வன்னிக் காட்டு பிரதேசத்தில் முகாமிட்டு எதிர்த்தாக்குதலுக்கான சக்திகளைத் திரட்டுவதில் ஈடுபட்டனர். இலட்சக்கணக்கான ஈழத்தமிழர்கள் தங்கள் வீடு, வாசல், நிலங்களைக் கைவிட்டு வன்னிக் காடுகளில் தஞ்சம் புகுந்தனர்.

யாழ்குடா நாட்டைக் கைப்பற்றிய சிங்கள இராணுவம், விடுதலைப் புலிகளைத் தொடர்ந்து சென்று ஈழத்தின் வடக்கு - கிழக்கு மாகாணத்தை முழுமையாகக் கைப்பற்ற முடியவில்லை. அதற்கான வலிமையோ, சக்தியோ சிங்கள இராணுவத்துக்குக் கிடையாது என்பது நிரூபணமானது. தான் கைப்பற்றியுள்ள பகுதிகளைக் கைவிட்டுத் தாக்குதலுக்கு இலக்காகாமல், புதிய படையெடுப்புகள் சாத்தியமில்லை என்பதோடு ஆக்கிரமித்த பகுதிகளையும் தக்கவைத்துக் கொள்ளும் அளவு அது பலம் பெற்றிருக்கவில்லை.

தனது சக்தியை மீண்டும் ஒன்று திரட்டிக் கொண்ட விடுதலைப் புலிகள், பூநகரி இராணுவ முகாம் மீதான திடீர்த் தாக்குதல் தொடங்கி அடுத்தடுத்து சிங்கள இராணுவத்துக்குப் பெரும் பெரும் சேதங்களை விளைவிக்கும் சண்டைகளில் வெற்றி கண்டனர். தெற்கே கொழும்புவில் போர்த் தந்திர முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார, இராணுவ இலக்குகளை புலிகளின் தற்கொலைப் படைகள் தாக்கி, பீதியூட்டும் தோல்விகளைக் கொடுத்தனர். இவற்றில் கொழும்பு பங்குச் சந்தை வளாகத் தாக்குதல், கட்டநாயகா விமானத் தளத் தாக்குதல், அதிபர் சந்திரிகாவை சாவின் விளிம்புக்கே தள்ளிய தாக்குதல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

இறுதியாக, ''ஓயாத அலைகள்'' என்ற இராணுவ நடவடிக்கையில் யானையிறவு உட்பட யாழ்வளைகுடாவின் பெரும்பாலான பிரதேசங்களைக் கைப்பற்றி, விடுதலைப் புலிகளின் படைகள் யாழ்ப்பாணத்தை சுற்றி வளைத்தது. யானையிறவுச் சண்டையில் நவீன - கனரக ஆயுதங்களைக் கைவிட்டு, படுதோல்வி கண்ட சிங்கள இராணுவத்தின் ஒரு பிரிவு ஆயிரக்கணக்கில் பலி கொடுத்து, இராணுவத்தை விட்டே தப்பி ஓடியது. மற்றொரு பிரிவு யாழ்ப்பாணத்தில் முற்றுகையிடப்பட்டது. அது எந்த நேரத்திலும் தாக்கி அழிக்கப்படலாம் என்கிற பீதியில் சிக்கியிருந்தது.

விடுதலைப் புலிகள் முன்னேறி, யாழ்ப்பாணத்தை மீட்கும் முயற்சியைத் தடுத்து நிறுத்தும்படி சந்திரிகா அரசு இந்தப் பிராந்திய வல்லரசான இந்தியா, உலக மேலாதிக்க வல்லரசான அமெரிக்கா உட்பட பல நாடுகளிடம் முறையிட்டது. தனி ஈழம் அமைவதை அனுமதிக்க மாட்டோம் என்று உறுதியளித்த இந்தியா 400 கோடி ரூபாய் நிதியும் நவீன ஆயுதங்களும் அளித்ததோடு, புலிகள் மேலும் முன்னேறினால் இராணுவத் தலையீடு செய்வதற்கும் தயாரானது. அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட ஆறு நாடுகள் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்ததோடு, அதன் நிதி - கணக்குகளையும் முடக்கின. இத்தகைய மிரட்டல்கள், தடைகள் காரணமாக, யாழ்ப்பாணத்தை மீட்பது உட்பட இராணுவ முன்னேற்றத்தை நிறுத்தி வைக்கும்படி புலிகள் நிர்பந்திக்கப் பட்டனர்.

யானையிறவைக் கைப்பற்றி, யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகள் முற்றுகையிட்டவுடன், தமிழ்நாட்டிலுள்ள புலி ஆதரவு தமிழினவாதக் குழுக்கள் எதார்த்தத்தைக் காண மறுத்து வானுக்கும் மண்ணுக்கும் குதித்தனர். ''ஈழ விடுதலைப் போரில் புலிகள் இறுதி வெற்றியடைந்து விட்டார்கள். நாளையே தமிழீழம் மலரப் போகிறது'' என்று நம்பும்படி பிரச்சாரம் செய்தார்கள். ''இந்திய அரசு தலையீடு செய்ய மறுத்துவிட்டது, சிங்கள அரசு உலக அளவில் தனிமைப்பட்டு விட்டது, இராணுவ ரீதியில் மட்டுமல்லாது, அரசு தந்திர ரீதியிலும் புலிகளின் தலைவர் வெற்றி பெற்று விட்டார்'' என்று உண்மைக்குப் புறம்பாகப் புளுகினர்.

ஒரு தரப்புக்காகப் பிரச்சாரம் செய்வது என்பது வேறு. அரசியல் - இராணுவ நிலைமைகளைக் கணித்துக் கோட்பாடுகளை வரையறுப்பது என்பதுவேறு. ஒரு தரப்பு தனக்குச் சாதகமான விவரங்களை மட்டும் மிகையாக்கிக் கூறி அணிகள், ஆதரவாளர்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் செய்வது பிரச்சாரம். இரண்டு தரப்பின் சாதக பாதக நிலைமைகளை எதார்த்தமாகப் பரிசீலிப்பதும் கணிப்பதும் நடைமுறைக்குத் தேவையான சரியான வழிகாட்டும் கோட்பாடாகும். இரண்டையும் போட்டு குழப்புகிறார்கள் புலிகளின் ஆதரவு தமிழினவாதக் குழுக்கள்.

முற்றுகையிட்டிருக்கும் யாழ்ப்பாணத்தைப் புலிகள் கைப்பற்றிவிட்டாலும் கூட, அது ஈழம் மலர்ந்து விட்டதைக் குறிக்காது. ஈழ விடுதலைப் போர் தொடரவே செய்யும். கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றுவதற்குப் புலிகளும், வடக்கை மீண்டும் ஆக்கிரமிப்பதற்கு சிங்கள இராணுவமும் போர் நடத்துவார்கள். இலங்கை - ஈழ விடுதலைப் போர் ஒரு இழுபறி நிலையில் சிக்கிக் கொண்டிருப்பதை ''புதிய ஜனநாயகம்'' ஏடு அப்போதே எடுத்துக் காட்டியது. இப்படி எதார்த்த நிலைமையை எடுத்துக் கூறுவது கூட, ''விடுதலைப் புலிகளுக்கும், ஈழ விடுதலைக்கும் எதிரான நிலை'' என்பதாகத் தமிழினவாதக் குழுக்கள் அவதூறு பேசி வருகின்றனர்.

✱ புலிகளின் தலைமையிலான ஆயுதப் போராட்டத்தின் மூலம் தமிழீழம் தனிநாடாக அமைவது சாத்தியமில்லை. இலங்கை சிங்கள அரசின் இராணுவ பலமும், பின்னணியும்; புலிகளின் அரசியல், இராணுவ அணுகுமுறையும் அதற்குத் தடையாக இருப்பதோடு, ஈழம் தனிநாடாக அமைவதற்கு இந்தியா மற்றும் சர்வதேச வல்லரசுகளும் எதிராக உள்ளன. ஆனால், இந்தக் காரணங்கள் ஈழத் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்



படிப்பகம்

www.padippakam.com

கையையும் போராட்டத்தையும் தவறானது, கைவிட வேண்டும் என்பதற்கான நியாயமாகிவிட முடியாது.

✱ அதேசமயம், ஈழத் தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை சிங்கள அரசு இராணுவ பலத்தைக் கொண்டு அடக்கி ஒடுக்கி விடவும் முடியாது. அதற்கு மாறாக, அரசு இராணுவத்துக்குப் பேரிழப்புகள் நேருவதும், பொருளாதாரச் சுமை பெருகுவதும், சவப்பெட்டிகளுக்குள்ளும், படையணிகளைத் துறந்தும் இராணுவத்தினர் திரும்புவதும் சிங்கள அரசுக்கு அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகளை முற்றச் செய்யும்.

இத்தகைய இழுபறி நிலைமையைத்தான் இதுவரையிலான 20 ஆண்டு கால ஈழப் போர் ஏற்படுத்தியிருக்கிறது. இந்த இழுபறிநிலையும், இது ஏற்படுத்தியுள்ள விளைவுகளும்தான் அமைதிவழி தீர்வு காண்பதற்கான மற்றொரு முயற்சியில் ஈடுபடும்படி சிங்கள அரசு மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பையுமே நிர்பந்திக்கிறது.

இலங்கையில் ஈழத் தமிழினப் பிரச்சினைக்கு ''தனி ஈழம்தான் ஒரே தீர்வாக இருக்க முடியும். வேறு எந்தத் தீர்வும் ஏற்க முடியாது, இந்தக் கருத்தை ஒப்புக் கொள்ளாதவர்கள் தமிழின எதிரிகளாகவோ, துரோகிகளாகவோ மட்டும்தான் இருக்க முடியும்'' என்று தமிழினக் குழுக்கள் வாதிட்டு வந்தனர். தமிழினவாதக் குழுக்கள் மட்டுமல்ல, அதற்கு வெளியேயுள்ள ஈழ ஆதரவு சக்திகளிலும் கூடப் பலர் கருதி வந்தனர். எனவே, ''தனி ஈழம்தான் ஒரே தீர்வாகவும் கோரிக்கையாகவும் இருக்க முடியும்'' என்ற வாதம் மேலோங்கியிருந்தது.

இந்தக் கருத்தை மறுத்து வந்த ''புதிய ஜனநாயகம்'' ஏடு, ''ஈழத் தமிழினத்திற்கு சுயநிர்ணய உரிமை வேண்டும்'' என்பதுதான் சரியான கோரிக்கையாக இருக்க முடியும், அந்தச் சுயநிர்ணய உரிமை, தனி ஈழம் அமைவதாக முடியுமா, இல்லையா என்பதை உடனடியாகத் தீர்மானிக்க முடியாது என்று வாதிட்டது.

''புதிய ஜனநாயகம்'' ஏட்டின் இந்தக் கருத்து, மார்க்சிய - லெனினியச் சூத்திரம் - வறட்டுத்தனமானது என்றும், ''சிங்கள உழைப்பாளி மக்கள் உட்பட ஒட்டு மொத்த சமுதாயமே பேரினவாத வெறியில் மூழ்கிக் கிடக்கிறது. சிங்களரும் தமிழரும் ஒரு நாட்டு எல்லைக்குள், ஒரு அரசின் கீழ் சேர்ந்து வாழ முடியாத அளவு பகை முரண்பாடு முற்றிப் போயுள்ளது; இந்த நிலையில் தனி ஈழம் தவிர வேறு தீர்வோ கோரிக்கையோ இருக்க முடியாது'' என்றும் பலரும் வாதிட்டனர்.

உண்மையில் இப்படிக் கருதுவதுதான் வறட்டுத்தனமானது என்பதைக் காலம் நிரூபித்து விட்டது. ''ஈழ விடுதலைப் போர் ஒரு குறுகிய காலத்தில் வெற்றி தோல்வி காணும் போர் அல்ல; ஈழ விடுதலைக்காக நடக்கும் நீண்டகாலப் போரின் விளைவாக இலங்கையின் அரசியல் பொருளாதார, சமூக நெருக்கடிகள் முற்றும்; சிங்கள சமுதாயம் மட்டுமல்ல, ஆளும் வர்க்கமும் பிளவுபட்டுப் போரை நிறுத்தவும், சுயாட்சி அல்லது சுயநிர்ணய உரிமை போன்ற தீர்வுகளை ஏற்கவும் நிர்பந்திக்கப்படும்'' என்று அப்போது ''புதிய ஜனநாயகம்'' ஏடு எழுதியது.

1990களின் மத்தியிலேயே, சிங்கள ஆளும் வர்க்கத்தினர் பிளவுபட்டு, ஈழப் போரை நிறுத்தவும், அமைதி வழித் தீர்வு காணவும் பெரும்பாலான சிங்கள மக்கள் ஆதரவும் ஏற்பட்டுவிட்டது. இதைப் பயன்படுத்திக் கொண்டுதான் நாடாளுமன்ற, அதிபர் தேர்தல்களில் சந்திரிகா தலைமையிலான மக்கள் கூட்டணி வெற்றி பெற்றது. ''இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு'' என்கிற வாக்குறுதிக்குத் துரோகமிழைத்த சந்திரிகா அரசு மீண்டும் இன ஒடுக்குமுறைப் போரைத் தொடுத்தது.

**போர் நிறுத்தத்தின் பின்னும் கலைக்கப்படாத புலிகளின் இராணுவம் மற்றும் போலீசு: வடக்கு - கிழக்கு பகுதிகளின் அதிகாரம் புலிகளின் கைகளுக்கு வந்துவிட்டதற்கான சாட்சிகள்.**





19 ஆண்டு கால ஈழப்போர் 50,000 கோடி ரூபாய்க்கு மேல் விழுங்கியிருக்கிறது. கடந்த ஆண்டில் மட்டும் ஆயிரம் கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது. இதனால் ஒவ்வொரு இலங்கைக் குடிமகன் மீதும் 80,000 ரூபாய் கடன் சுமை ஏற்றி வைக்கப்பட்டிருக்கிறது. சிவிலியன்கள் 60,000 பேரையும், இராணுவம் - போலீசார் 20 ஆயிரம் பேரையும் ஈழப் போர் பலி கொண்டிருக்கிறது. இலங்கையின் தொழில்கள் அனைத்தும் முடக்கப்பட்டு, வளர்ச்சி விகிதம் 1.3 சதவீதம் தான் என்கிற அளவை எட்டியது. தமிழ் மக்கள் ஆதரவுதான் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிப்பதாக உள்ளது; அதாவது, தமிழர் அல்லாத மக்களின் தேர்தல் வாக்குகள் எந்தத் தரப்புக்கும் பெரும்பான்மை அளிப்பதாக இல்லாமல் பிளவுபட்டுக் கிடக்கிறது. முந்தைய நாடாளுமன்ற, அதிபர் தேர்தல்களில் தமிழர் ஆதரவு பெற்றுத்தான் சந்திரிகா தலைமை வெற்றி பெற்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் ரணில் விக்கிரமசிங்கா தலைமையும் வெற்றி பெற்றது.

சிங்கள சமுதாயத்திலேயே போர் நிறுத்தம், இனப் பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வுக்கான ஆதரவு, நிர்பந்தம் ஏற்பட்டிருப்பதைப் போலவே, ஈழத் தமிழரிடையேயும் ஏற்பட்டிருக்கிறது. 20



படிப்பகம்

ஆண்டுகாலப் போர் ஈழ சமுதாயத்தில் பெரும் அழிவுகளையும் பாதிப்புகளையும் ஏற்படுத்தியிருக்கிறது. 60,000 தமிழர்களை பலிகொண்டிருக்கிறது. பொருளாதாரம் முற்றிலும் சிதைந்து போயுள்ளது. ஒரு தலைமுறை இளைஞர்கள் போரில் மடிந்து போயினர் அல்லது அகதிகளாக வெளியேறியுள்ளனர். சிறுவர்களைக் கொண்டுதான் புலிப்படை புனரமைக்கப்பட்டுள்ளது. பிரபாகரன், ஆண்டன் பாலசிங்கம் தவிர, புலிப்படையின் முதல் தலைமுறைத் தளபதிகள் - தலைவர்கள் அனைவருமே காணாமல் போய் விட்டனர்.

சிங்கள, தமிழினச் சமூகங்களில் நிகழ்ந்துள்ள இத்தகைய நிர்ப்பந்தங்கள்; இவற்றோடு, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளின் தடை, கட்டுப்பாடுகள் போன்ற வெளி அழுத்தங்கள்தாம் தற்போது போர் நிறுத்தம், அமைதிவழித் தீர்வுக்கான பேச்சு வார்த்தைக்கு இரு தரப்புமே தள்ளப்பட்டதற்கான காரணங்கள் ஆகும்.

***

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கேவும் விடுதலைப் புலிகளின் தலைவர் - தளபதி பிரபாகரனும் ஈழத் தமிழினப் பிரச்சினைக்கு அமைதிவழித் தீர்வு ஒப்பந்தம் ஒன்றை ஏற்கனவே எட்டிவிட்டார்கள் என்றுதான் தெரிகிறது. வட ஈழத்திலுள்ள கிளிநொச்சிப் பகுதியில் கடந்த ஏப்ரல் 10-ந் தேதி நடந்த சர்வதேசச் செய்தியாளர்கள் மாநாட்டில் பிரபாகரனும் ஆண்டன் பாலசிங்கமும் தெரிவித்த கருத்துக்களை ஊன்றிப் பார்க்கும் போது இப்படித்தான் தோன்றுகிறது.

''1. இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்களை ஒரு தனித்துவமான தேசிய இனமாக அங்கீகரிப்பது 2. இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கு மாகாணங்களை தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களாக அங்கீகரிப்பது 3. தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது ஆகிய மூன்று மையக் கருவான அடிப்படைகளை இலங்கை அரசு ஒப்புக் கொண்டு, ஈழத் தமிழர்கள் ஏற்கும் வகையிலான தீர்வு முன்வைக்கப்படுமானால் தனி ஈழம் என்ற கோரிக்கையைக் கைவிடுவது பற்றிப் பரிசீலிப்போம். ஆனால், அதற்கான அவசியமும் நேரமும் இன்னமும் எழவில்லை. இப்போது, தாய்லாந்து பேச்சு வார்த்தைகளில் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான ஒரு இடைக்கால நிர்வாக ஏற்பாடு பற்றித்தான் விவாதிக்க உள்ளோம். இடைக்காலத் தீர்வு மூலம் நமது மக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை அகற்றுவதும் அவர்கள் ஒரு அமைதியான வாழ்க்கை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்து தரவும் வேண்டும்'' என்று செய்தியாளர்களிடம் பிரபாகரன் கருத்துத் தெரிவித்தார்.

பிரபாகரன் கூற்றுக்கு, விரிவுரையாற்றிய ஆண்டன் பாலசிங்கம், சுயநிர்ணய உரிமைக்கும், இடைக்காலத் தீர்வுக்கும் புதிய விளக்கமளித்துள்ளார். ''எமது மக்களுக்கு ஒரு விடியலைத் தரவும், ஒரு பொருளாதார முன்னேற்றத்தைத் தரவும்தான் இந்த சமாதானத் தீர்வு முயற்சியில் நாங்கள் இறங்கியிருக்கிறோம். அதேசமயம், ஒரு சமரசம் என்கிற முறையில் இடைக்காலத் தீர்வை ஏற்கிறோம் என்றால், அதற்குக் காரணம் எமது மக்கள் வாழ்க்கையில் ஒரு விடியல் தேவை, ஒரு பொருளாதார ஏற்றம் தேவை என்ற உயர்ந்த நோக்கம் எங்களுக்கு இருக்கிறது'' என்பது ஆண்டன் பாலசிங்கம், பிரபாகரனின் கருத்துக்கு அளித்த மொழிபெயர்ப்பு.

ஒரு இடைக்காலத் தீர்வு என்பது ஒரு தற்காலிக நிவாரணமாகத்தான் இருக்க முடியும். ஆனால், அதுவே மக்களின் பொருளாதாரத்தில் முன்னேற்றத்தைக் கொண்டு வரும், மக்கள் ஒரு அமைதியான வாழ்க்கை நடத்த முடியும், அதற்கு மேலே மக்களுக்கு ஒரு விடியலைத் தரும் என்று புலிகளின் தலைமை கூறுகிறது. அப்படியானால், இந்த இடைக்காலத் தீர்வு என்பது என்ன என்கிற கேள்வி எழுகிறது. ''ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பு'' என்கிற பெயரில் காலவரையற்ற ஒரு நிரந்தர ஏற்பாட்டை ஏற்படுத்தவே சிங்கள அரசும் விடுதலைப் புலிகளும் முயற்சிக்கிறார்கள் என்று தெரிகிறது. இப்படிச் செய்தவன் மூலம் சிங்கள, தமிழ் மக்கள் ஆகிய இரு இனங்களின் கண்ணில் மண்ணைத் தூவி ஏய்ப்பதற்கே அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

சுயநிர்ணய உரிமை என்பது ஒரு தேசிய இனம் மற்ற தேசம் அல்லது தேசங்களோடு இணைந்திருப்பதா அல்லது பிரிந்து போவதா என்பதைத் தீர்மானித்துக் கொள்ளும் உரிமை என்றுதான் இதுவரை நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். ஆனால், பிரபாகரனின் அரசியல் - சித்தாந்த ஆலோசகர் ஆண்டன் பாலசிங்கமோ, ''வெளியமைப்பு - உள்ளமைப்பு என்று சுயநிர்ணய உரிமைக்கு இரண்டு பரிமாணங்கள் இருக்கின்றன'' என்கிறார்.

''சுயநிர்ணய உரிமை என்பதன் மூலம் மக்கள் தமது அரசியல் எதிர்கால இருப்பைத் தாமே தீர்மானித்துக் கொள்ளும் உரிமை என்று பொருள் கொள்கிறோம். அது சுயாட்சி மற்றும் சுய நிர்வாகம் என்பதற்குக் கூடப் பிரயோகிக்கப்பட முடியும். எமது மக்களுக்கு (மாநில) சுயாட்சியும் சுய நிர்வாகமும் வழங்கப்பட்டால் ஓரளவு உள்ளமைப்பு சுயநிர்ணய உரிமை அடைந்ததாக நாங்கள் கூற முடியும். சுயாட்சி மற்றும் சுய நிர்வாகத்துக்கான தமிழர்களின் கோரிக்கையை சிறீலங்கா அரசாங்கம் நிராகரிக்குமானால், இறுதிப் போக்கிடமாகப் பிரிந்து போவதை நாங்கள் தெரிந்தெடுப்போம்'' என்கிறார் பாலசிங்கம். இதைக் கேட்டுக் கொண்டு புலிகளின் தலைவர் - தளபதி அமைதி காக்கிறார்.

''உள்ளமைப்பு சுயநிர்ணய உரிமை'' கிடைத்தாலே போதும், (மாநில) சுயாட்சி மற்றும் சுய நிர்வாக அமைப்பு முறையை ஏற்றுக் கொள்வோம் என்பதுதானே இதன் பொருள். சிங்கள, தமிழ், முசுலீம் மக்களின் கூட்டமைப்பாக உள்ள இலங்கையில் தமிழினத்திற்கு உள்ளமைப்பு சுயநிர்ணய உரிமை வழங்கப்படும். அதற்கு முன்பாக இடைக்கால நிர்வாக அமைப்பு என்கிற பெயரில் வரி வசூலிப்பு மற்றும் அரசு நிர்வாகத்தை ஆயுதமேந்திய படைகளுடன் உள்ள புலிகள் மேற்கொள்வார்கள் என்பதுதான் இடைக்காலத் தீர்வு.

தனி ஈழம், ஈழ விடுதலை என்கிற கோரிக்கையை புலிகள் இன்னமும் கைவிடவில்லை என்று காட்டிக் கொள்வதற்காகத்தான் இது ''இடைக்காலத் தீர்வு'' என்பதாகக் கூறப்படுகிறது. ''ஈழம் என்ற கோரிக்கையைக் கைவிடுவேனேயானால் என்னைச் சுட்டுக் கொன்று விடுங்கள்'' என்று புலிப் படைக்குப் பிரபாகரனே உத்திரவு போட்டிருப்பது என்பது வெறும் வீராவேசச் சவடால்தானே தவிர, வேறொன்றுமில்லை. ''உலகமயம், தனியார்மயம், தாராளமயம் ஆகிய புதிய பொருளாதாரக் கொள்கை''யை விடுதலைப்புலிகள் ஏற்பதாக அறிவித்துள்ளனர். ஆகவே, அவர்களின் சுயாட்சி, சுயநிர்வாகத்தின் கீழ் ஈழத்தில் ஆட்சி அமைவதும், இராணுவம் - போலீசு உட்பட அரசு நிர்வாகத்தை அவர்களே மேற்கொள்வதும் அமெரிக்கா உட்பட உலக வல்லரசுகளுக்கும் சிங்கள ஆளும் வர்க்கங்களுக்கும் உடன்பாடுதான்.

புலிகளைப் பொருத்தவரை தமது அமைப்பின் ஏகபோக அதிகாரத்தின் கீழ் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒப்படைக்கப்படவேண்டும் என்பதுதான் முதன்மையான கோரிக்கை. 1987 ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தின் போதிருந்தே இதைத்தான் அவர்கள் கோரினார்கள். ஜனநாயகம் என்கிற பெயரில் பிற அமைப்புகளுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு புலிகள் ஒருபோதும் ஒப்புக் கொள்வதில்லை. முன்பு ராஜீவ், ஜெயவர்த்தனேயும், பின்பு சந்திரிகாவும் பிற ''தமிழர் அமைப்பு''களை முன்னிறுத்திப் புலிகளின் ஏகபோக ஆதிக்கத்தைத் தடுத்திட முயன்றதாலேதான் அப்போதைய சமரச முயற்சிகள் தோற்றுப் போயின. இப்போது அந்த நிலை இல்லை. தமிழர் கூட்டமைப்பும், முசுலீம் காங்கிரசும் புலிகளின் ஏகபோக அதிகாரத்தை ஏற்பதாக ஒப்புக் கொண்டு விட்டன.

இந்த நிலைமைகளில்தான் போர் நிறுத்தமும் இடைக்காலத் தீர்வும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், வெளிப்படையான, ஜனநாயகபூர்வமான தீர்வு அல்லாத எதுவும் நின்று தாக்குப் பிடிக்க முடியாது என்பதைக் காலம் உணர்த்தும்.

● ஆர்.கே.

www.padippakam.com

## ஆறு மாதங்களில் ரூ. 5000 கோடி வரி

# பாசிச ஜெயா அரசின் பகற்கொள்ளை

தமிழ் மொழியின் ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றான ''மணிமேகலை''யில் காய சண்டிகை என்றொரு கதாபாத்திரம் உண்டு. காய சண்டிகை எவ்வளவுதான் தின்றாலும், தீராத பசி கொண்டு அலைந்ததாக வருணிக்கிறது மணிமேகலை. காய சண்டிகை நயமிக்க இலக்கிய கற்பனை; என்றாலும் காய சண்டிகையின் பசி அடங்காத வயிறு தமிழக கஜானாவாகப் பிறப்பெடுத்து வந்துவிட்டதோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

ஜெயாவின் பினாமி முதல்வராக இருந்த பன்னீர் செல்வம் ஐந்து மாதங்களுக்கு முன்புதான் ஒரு அதிரடி திடீர் பட்ஜெட்டை தமிழக மக்கள் மீது திணித்தார். ''700 கோடி ரூபாய் பற்றாக்குறையை ஈடுகட்ட வேண்டும்'' எனக் கூறிவிட்டு, பல்வேறு கட்டண உயர்வின் மூலம் அவர் தமிழக மக்களிடமிந்து அடித்த பகற் கொள்ளை கிட்டதட்ட 3,500 கோடி ரூபாய். ஆனாலும் காயசண்டிகையின் பசியைப் போல, தமிழக அரசின் பற்றாக்குறையும் தீரவில்லை. ஐந்து மாதங்களுக்குள்ளாகவே தமிழக மக்களின் மீது இன்னுமொரு பொருளாதாரத் தாக்குதலைத் தொடுத்திருக்கிறது ஜெயா கும்பல். 690 கோடி ரூபாய்க்குப் புதிய வரிகளைப் போட்டிருப்பதோடு, இன்னும் 640 கோடி ரூபாய்க்குப் பற்றாக்குறை இருப்பதாகக் கணக்கும் காட்டப்படுகிறது.

அரசாங்கம் போடும் பட்ஜெட்டுகளைக் கிண்டல் செய்யும் மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் பாடலொன்றில், ''நின்னா வரி, நடந்தா வரி, உட்கார்ந்தா வரி'' என்று வரிகள் வரும். இந்த நையாண்டியை பட்ஜெட்டில் உண்மையாக்கி விட்டார், ஜெயா. தமிழக அரசின் இந்த ஆண்டு பட்ஜெட்டில் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரிகளை, ப.சிதம்பரம் போன்ற தாராளமயத்தின் தீவிர ரசிகர்களால் கூட நியாயப்படுத்த முடியவில்லை.

வரிக்கு மேல் வரியாகப் போடப்பட்டுள்ளா தமிழக அரசின் இந்த பட்ஜெட்டை ப.சிதம்பரம் பிற்போக்குத்தனமானது எனச் சாடுகிறார். அவரின் இந்த சாடலுக்கு மக்கள் மீதான கரிசனம் காரணம் அல்ல. மாறாக, ப. சிதம்பரம் வகையறாக்கள் அரசாங்கம் போடும் பட்ஜெட்டை, ''பூ நோகாமல் தேனெடுக்கும் கலையாக''ப் பூசி மெழுகி வந்ததை, பட்ஜெட் என்றால் பகற் கொள்ளைதான் என ஜெயா போட்டு உடைத்து விட்ட ஆத்திரமும், ஆதங்கமும் தான் காரணம்.

### ஜெயாவின் 'வரி'ச் சாதனை

ஜெயா ஆட்சியைப் பிடித்த நாளில் இருந்தே, ''தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்றிக் காட்டுவதுதான் தனது இலட்சியம்'' எனக் கூறிக் கொண்டு திரிகிறார். அந்த இலட்சியத்தை அடைவதற்கான முதல் 'இடி' தான் இந்த பட்ஜெட். வெளிச் சந்தையில், அதாவது கடைகள் மூலம் விற்கப்படும் அரிசிக்கும், கோதுமைக்கும் 2 சதவீத வரி விதித்ததன் மூலம், இந்திய மாநிலங்களிலேயே இந்தச் சாதனையைச் செய்த ஏழாவது மாநிலம் என்ற பெருமையைத் தமிழகத்திற்கு ஜெயா வாங்கிக் கொடுத்து விட்டார். முதல் எட்டிலேயே ஏழாவது இடத்தைப் பிடித்த ஜெயாவிற்கு, அடுத்த நான்கு ஆண்டுகளில் முதல் இடத்தைப் பிடிப்பது குதிரைக் கொம்பாக இருக்காது. இது தவிர,

✱ பருப்பு, உளுந்து, வெல்லம், மிளகு ஆகிய உணவுப் பொருட்களின் மீது 4 சதவீத வரியும், அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு உள்ளிட்ட சில அத்தியாவசியப் பொருட்கள் தவிர்த்து, ஏனைய பொருட்களின் மீது விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரி மீது 5 சதவீத உள்கட்டமைப்பு உபவரியும் விதிக்கப்பட்டுள்ளது. இந்த உபவரி மூலம் மட்டும் கிட்டதட்ட 230 கோடி ரூபாய் வசூலித்துவிடத் திட்டமிட்டுள்ளது தமிழக அரசு.

✱ வெளி மாநிலங்களில் உற்பத்தி செய்யப்பட்டு தமிழகத்தில் விற்பனை செய்யப்படும் மைதா, ரவை ஆகிய கோதுமை உணவுப் பொருட்களுக்கு நுழைவு வரி விதிக்கப்பட்டுள்ளது.

✱ வெளிநாடுகளில் இருந்து கொப்பரைத் தேங்காய் தாராளமாக இறக்குமதி செய்யப்படுவதால், உள்ளூரில் விளையும் கொப்பரைத் தேங்காயின் விலை சரிந்து, தமிழகத் தென்னை விவசாயிகள் போராடிக் கொண்டிருக்கும் பொழுது, கொப்பரை தேங்காயின் மீது 2 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. இது, குப்புறத் தள்ளிவிட்ட குதிரை, குழியையும் பறித்த கதையைத் தவிர வேறில்லை.

✱ கைத்தறிக்குப் பயன்படும் 'சிட்டா' நூலின் மீது மைய அரசு 9.2 சதவீத கலால் வரி விதித்ததை எதிர்த்து நெசவாளர்கள் போராடிக் கொண்டிருக்கும் பொழுது, ஜெயா தன் பங்குக்குக் கைத்தறிகள் மூலம் தயாரிக்கப்படும் கைக்குட்டைகளுக்கு 4 சதவீத விற்பனை வரி விதித்திருக்கிறார். 3,000 ரூபாய்க்கு அதிகமான கைத்தறி பட்டுச் சேலைகள் மீது 1 சதவீத ஆடம்பர வரி விதிக்கப்பட்டுள்ளது.

✱ தனியார் உற்பத்தி செய்யும் சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்துவது என்ற பெயரில், ரூ. 145/-க்கு மேல் விற்கப்படும் முதல் தர சிமெண்டின் மீதும், ரூ.135/-க்கு மேல் விற்கப்படும் இரண்டாம் இரக சிமெண்டின் மீதும் 24 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் மொத்த சிமெண்ட்

கஜானா காலியானாலும் தனது ஆடம்பரத்தைக் குறைத்துக் கொள்ளாமல், ஆண்டிப்பட்டியில் ஹெலிகாப்டரில் வந்திறங்கும் ஜெயா.





படிப்பகம்

தேவையில், வெறும் பத்து சதவீத பங்குதான் தமிழக அரசு நிறுவனமான ''அரசு சிமெண்ட்ஸ்'' வசம் உள்ளது. மீதி 90 சதவீத சிமெண்ட் சந்தை, தனியார் சிமெண்ட் முதலாளிகள் கையில்தான் உள்ளது. இந்த நிலையில், இந்த வரி விதிப்பால் தனியார் சிமெண்ட் முதலாளிகள் தங்களின் சந்தை பறிபோய்விடும் எனப் பயந்து போய், சிமெண்ட் விலையைக் குறைத்து விடுவார்கள் என நம்புவதைவிட முட்டாள்தனம் வேறெதுவும் இருக்க முடியாது. மாறாக, தனியார் சிமெண்ட் ஆலை முதலாளிகள் - மொத்த சிமெண்ட் வியாபாரிகள் - தமிழக அரசு என்ற கூட்டணி, சொந்த வீடு என்ற கனவோடு திரியும் தமிழக நடுத்தர மக்களைக் கொள்ளையடிப்பதற்கு தான் சிமெண்ட் மீதான வரிவிதிப்பு பயன்படும்.

✱ தேயிலை இறக்குமதியால், தேயிலை விலை வீழ்ச்சியடைந்து போண்டியாகி நிற்கும் சிறு தேயிலை விவசாயிகளைக் காப்பாற்ற அவர்களுக்கு எந்த வரிச் சலுகையும் அளிக்கப்படவில்லை. மாறாக, ''உங்கள் தேயிலை மீது புதிதாக வரி ஏற்றப்படவில்லை; பழைய வரியே தொடரும். பிழைச்சிப் போங்க'' எனத் 'தாயுள்ளத்தோடு' விட்டுவிட்டார், ஜெயா.

✱ மின் விசிறிகளுக்கு 12 சதவீத வரி; சிறிய உணவகங்களின் மீது இணக்க வரி; சித்த, யுனானி மருந்துகள் மீது 4 சதவீத வரி; காலணிகள் மீது வரி; அலுமினியப் பொருட்கள் மீது நுழைவு வரி என இந்த வரிப் பட்டியல் அனுமார் வால் போல நீண்டு கொண்டே போகிறது. ஏழை - நடுத்தர மக்கள் பயன்படுத்தும் எந்தப் பொருளும் - பிச்சைக்காரர்கள் கையிலுள்ள அலுமினியக் குவளைக்கூட - ஜெயாவின் வரி விதிப்பில் இருந்து தப்பிவிடவில்லை. ''வரி விதிப்பு'' என்ற இந்த நேரடிக் கொள்ளை ஒருபுறமிருக்க, மானியத்தையும், மக்கள் நலத் திட்டங்களையும் வெட்டியதன் மூலம் மறைமுகமாகவும் ஜெயா கும்பல் கொள்ளையடித்திருக்கிறது.

**மானியத்திற்கு வெட்டு - மக்கள் நலத் திட்டங்களுக்குத் தலைமுழுக்கு**

✱ ரேசன் அரிசிக்கு வழங்கப்படும் மானியத்தில், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 300 கோடி ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது. இந்த மானிய வெட்டோடு, தமிழக அரசு வழங்கவுள்ள கூப்பன்களை வைத்திருக்கும் ஏழைகளுக்கு மட்டும்தான் ரூ. 3.50 ரேசன் அரிசி வழங்கப்படும் என்றும் ஜெயா அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம், ரேசன் கடைகளில் ரூ. 3.50-க்கு அரிசி வாங்கி வரும் ஏழைகளின் எண்ணிக்கையைக் குறைத்துவிடச் சதித்தனமாக முயலுகிறது, ஜெயா கும்பல்; பட்ஜெட்டில் ரேசன் அரிசியின் விலையை உயர்த்தாமல் விட்டதைக் காட்டி இந்த தகிடுதத்தங்களை மூடிமறைத்து விடவும் முயலுகிறது.



**மக்களின் வரிப்பணத்தில் சென்னை - கபாலீசுவரர் கோயிலில் ஜெயா நடத்திய தடபுடல் அன்னதான விழா.**

✱ நெசவுத் தொழிலாளர் நலனுக்குக் கடந்த ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதி 266 கோடி ரூபாய். இந்த ஆண்டு அதற்கு வெறும் 128 கோடி ரூபாயை மட்டும் ஒதுக்கிவிட்டு, 138 கோடி ரூபாயை மிச்சம் பிடித்திருக்கிறது தமிழக அரசு.

✱ மின்சார வாரியத்திற்கு வழங்கப்பட்டு வரும் மானியத்தில், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 250 கோடி ரூபாய் வெட்டப்பட்டுள்ளதோடு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் இலவச மின்சாரத்தை நிறுத்திவிடும் நோக்கில், மின் இணைப்புகள் அனைத்திற்கும் மீட்டர் பொருத்தப்படும் என பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

✱ ஆரம்ப பள்ளிகளில் ஏழை மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவுத் திட்டத்திற்கு இந்த பட்ஜெட்டில் கடந்த ஆண்டைவிட 82 கோடி ரூபாய் குறைவாக 224 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி வெட்டு ஒருபுறமிருக்க, சத்துணவோடு வழங்கப்பட்டு வந்த முட்டைகளை நிறுத்தியதன் மூலம், தோராயமாக முப்பது கோடி ரூபாய் மிச்சம் பிடித்துள்ளது தமிழக அரசு.

✱ மாணவர்களின் ''இலவச பஸ் பாஸ்'' திட்டத்திற்கு கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருந்த நிதி 165 கோடி ரூபாய்; இந்த ஆண்டு ஜெயாவால் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை 125 கோடி ரூபாய். இதன் மூலம் தமிழக அரசுக்குக் கிடைத்திருக்கும் உபரி 40 கோடி ரூபாய்.

''அரசு கல்லூரிகளுக்கும், அரசு உதவி பெறும் கல்லூரிகளுக்கும் வழங்கப்பட்டு வரும் மானியம் குறைக்கப்படும்; கல்லூரிக் கல்விக் கட்டணத்தை உயர்த்திக் கல்லூரிகளும், பல்கலை கழகங்களும் வருவாய் தேடிக் கொள்ள வேண்டும்'' என பட்ஜெட்டில் அறிவித்ததன் மூலம், தமிழக மாணவர்களுக்கு உயர் கல்வி வழங்க வேண்டிய அரசின் பொறுப்பைத் தட்டிக் கழித்து விட்டார், ஜெயா. மேலும் 'அலோபதி' மருத்துவக் கல்லூரிகளில் கட்டண இடங்களை (Payment Seats) உருவாக்கியதைப் போலவே, அரசின் சித்த மருத்துவக் கல்லூரிகளிலும் 30 கட்டண இடங்களை உருவாக்கியிருப்பதன் மூலம், அரசு கல்லூரிகள் - பல்கலைக்கழகங்களை வியாபாரமாக்கும் போக்கைத் தீவிரப்படுத்தியிருக்கிறார்.

✱ இலவச வேட்டி - சேலை திட்டத்தை ஒட்டு மொத்தமாக, சொல்லாமல் கொள்ளாமல் தலைமுழுகி விட்டது ஜெயா அரசு. கடந்த ஆண்டு பட்ஜெட்டின்படி பார்த்தால், இதன் தமிழக அரசுக்குக் கிடைத்திருக்கும் மிச்சம் 129 கோடி ரூபாய்.

✱ சென்னை குடிநீர் திட்டத்துக்குக் கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி 71 கோடி ரூபாய். இந்த ஆண்டில் இத்திட்டத்திற்கு ஒரு பைசா கூட நிதியாக ஒதுக்கப்படவில்லை.

✱ ஏழை மகளிர் திருமண உதவித் திட்டத்தை 'அம்போ' எனக் கைவிட்டதன் மூலம் ஐம்பது கோடி ரூபாயும்; பிற்படுத்தப்பட்டோர் வீட்டு வசதிக்கு நிதி ஒதுக்காததன் மூலம் ஆறு கோடி ரூபாயும்; தமிழக மீனவர்களுக்கு வழங்க வேண்டிய டீசல் மானியத்தைத் தலைமுழுகியதன் மூலம் மூன்று கோடி ரூபாயும் அநாமத்து வருமானமாகத் தமிழக அரசிற்குக் கிடைத்திருக்கிறது.

www.padippakam.com

**ஆன்மீகத்திற்கு அள்ளி விடு! அமெரிக்காவுக்கு அடி பணி!**

அ.தி.மு.க. அரசு பதவியைப் பிடித்த ஓராண்டிற்குள்ளாகவே, வரி / கட்டண உயர்வின் மூலம் கிட்டதட்ட 5000 கோடி ரூபாய்க்கு மேல் தமிழக மக்களிடமிருந்து பகற் கொள்ளை அடித்திருக்கிறது. இந்தச் சுமையை எப்படி சமாளிப்பது எனப் புரியாமல் விழி பிதுங்கி நிற்கும் தமிழக மக்களை இளிச்சவாயர்களாக நினைத்து, ''கடும் நிதி நெருக்கடியிலும் கடுமையே இல்லாத பட்ஜெட்'', ''மக்களுக்குச் சுமை இல்லை'' என வக்கிரத்தனமான புளுகை அவிழ்த்துவிடுகிறார், ஜெயா.

'நிதி நெருக்கடி', 'கஜானா காலி' எனத் திரும்பத் திரும்பக் கூறி மக்களை மொட்டையடிக்கும் ஜெயா, ஊர்ப் பணத்தில் கும்மாளம் போடும் தனது வக்கிர ஆடம்பர வாழ்வை மட்டும் கடுகளவுகூடக் குறைத்துக் கொள்ளவில்லை. ஆண்டிப்பட்டியில் தனது சட்டமன்ற அலுவலகத்தைத் திறந்து வைப்பதற்காக சென்னையில் இருந்து ஆண்டிப்பட்டிக்குத் தனி விமானத்திலும், ஹெலிகாப்டரிலும் பறந்து போய்த் திரும்பியிருக்கிறார், அவர். மக்களின் கோபத்தில் இருந்து தனது ஆடம்பர வக்கிர ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே, நெருக்கடியான நேரத்திலும், போலீசு துறைக்கு 1617 கோடி ரூபாயைக் கொட்டிக் கொடுத்திருக்கிறார்.

கடந்த ஆண்டு பட்ஜெட்டில் போலீசு துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியோடு ஒப்பிட்டால், இது கிட்டதட்ட 600 கோடி ரூபாய் அதிகமாகும். திமிர் பிடித்த பணக்கார கும்பல், உழைப்பவனுக்குக் கொடுப்பதை விட, தன் வீட்டு நாய்க்கு அள்ளிப் போடுவதற்குக் கணக்குப் பார்க்காது. அப்படிப்பட்ட வக்கிர புத்தி கொண்ட ஜெயா, நாலுகால் நாய்க்குப் பதிலாக, இரண்டு கால் கொண்ட காக்கிச் சட்டை நாய்களுக்கு மக்களின் வரிப்பணத்தை வாரி விடுகிறார்.

விளைந்த நெல்லை நியாயமான விலைக்கு விற்க முடியாமல், விவசாயிகள் திண்டாடித் தெருவில் நிற்கிறார்கள; 500 கோடி ரூபாய் பெறுமான கைத்தறித் துணிகள் வாங்குவாரின்றித் தேங்கிக் கிடப்பதால், நெசவாளிகள் வயிற்றில் ஈரத்துணியைக் கட்டிக் கொண்டு நாட்களைத் தள்ளுகிறார்கள். சட்டசபை தேர்தல் சமயத்தில் இவர்களிடம் போலித்தனமான வாக்குறுதிகளை அள்ளிவிட்டு, இவர்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சியைப் பிடித்த ஜெயாவோ, பட்ஜெட் மூலம் ஓட்டுப் போட்ட மக்களையே ஏறி மிதிக்கிறார். இவர்களின் இருண்ட வாழ்க்கையைவிட, ஒரு கால பூசை கூட நடக்காமல் சில கோவில்கள் இருண்டு கிடப்பதுதான் ஜெயாவிற்குப் பெரிதாகப் படுகிறது: இந்த நெருக்கடியான நேரத்திலும், 1000 கோயில்களில் ஒரு கால பூசை நடத்துவதற்காக 2.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்குகிறார்; அன்னதானத்திற்காக அள்ளி விடுகிறார். தமிழக மக்களின் வாழ்க்கையை விட, இந்த பார்ப்பன வக்கிரம் நிறைந்த ஆன்மீகமா பெரிது?

''உலக வர்த்தக அமைப்பும், உலக வங்கியும் வலியுறுத்தும் இரண்டாம் கட்டப் பொருளாதாரச் சீர்திருத்தத் திட்டத்தைத் தமிழக அரசு உற்சாகத்தோடு முழுமையாகச் செயல்படுத்தும்'' என்று அமெரிக்கத் தூதரக அதிகாரிகளிடம் ஜெயா வாக்குறுதி கொடுத்திருக்கிறார். அதற்கேற்ப சொன்ன வார்த்தையில் சிறிது கூடப் பிசகாமல், இந்த பட்ஜெட்டை உலக வங்கிக்கே சமர்ப்பித்திருக்கிறார், அவர்.



**சென்னையில் அமெரிக்காவின் புதிய ''விசா'' அலுவலகத்தைத் திறந்து வைக்கும் ஜெயா: அமெரிக்காவின் ஏவல் நாய்!**

நெல் கொள்முதலைக் கைகழுவியதும், ரேசன் அரிசிக்கும், மின்சாரத்திற்கும் தரும் மானியத்தை வெட்டியிருப்பதும், மக்கள் நலத் திட்டங்களுக்கான நிதியைக் குறைத்திருப்பதும் இரண்டாம் கட்ட பொருளாதாரச் சீர்திருத்தத்தின் தொடக்கம்தான். இவற்றோடு, அரசு பேருந்துகளைத் தனியார்மயமாக்கவும், இலாபத்தில் இயங்கும் தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்கவும் ஜெயா கும்பல் முடிவெடுத்துள்ளது.

விவசாயத்தில் தனியார்மயத்தைப் புகுத்தும் நோக்கத்தோடு, தரிசு நில மேம்பாடு திட்டத்தைத் தனியார் முதலாளிகளுக்குத் தாரை வார்த்து விட்டது. ''சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும்'' என்று திமிரோடு கூறி, நெல் கொள்முதலைக் கைகழுவியதை நியாயப்படுத்திய ஜெயா, தரிசு நில மேம்பாடு என்ற பெயரில் தனியார் முதலாளிகளுக்கு 40 கோடி ரூபாயைத் தூக்கிக் கொடுத்திருக்கிறார். மேம்பாடு அடையப் போவது தரிசு நிலமா, தனியார் முதலாளிகளா? என்பது காலப் போக்கில் தெரிந்து விடும்.

கள்ளச் சாராயத்தை ஒழிக்க மலிவு விலை மதுவை அறிமுகப்படுத்திய 'புரட்சி'த் தலைவி, இப்பொழுது, ஒயின் ஷாப்புகளில் சட்ட விரோதமாக நடந்து வந்த ''பார்''களை ஒழிக்க அவற்றைச் சட்டப்பூர்வமாக்கி விட்டார்; திரையரங்குகளில் கள்ள டிக்கெட் விற்பனையைத் தடுக்க, திரையரங்குக் கட்டணத்தை உயர்த்திக் கொள்ளையடிக்க அனுமதித்திருக்கிறார். இப்படியே போனால், விபச்சாரம், போதை மருந்து, கடத்தல் போன்ற சட்ட விரோத, சமூக விரோதத் தொழில்களைக் கூடச் சட்டப்பூர்வமாக்கிய முதல் மாநிலமாகத் தமிழகம் ஆகிவிடக் கூடும்.

**சிட்டா நூலுக்கு மைய அரசு விதித்துள்ள கலால் வரியைத் திரும்பப் பெறக் கோரி சென்னையில் கைத்தறி நெசவாளர்கள் நடத்திய உண்ணாவிரதப் போராட்டம்.**



**பட்ஜெட் எதிர்ப்பு - எதிர்க்கட்சிகளின் கபடத்தனம்**

தி.மு.க. தலைவர் கருணாநிதி, ஜெயாவின் பட்ஜெட்டை, தனது ஆட்சியில் போடப்பட்ட பட்ஜெட்டுகளோடு ஒப்பிட்டு நார்நாராகக் கிழிக்கிறார். தமிழக அரசின் பட்ஜெட் வெளியிடப்படுவதற்கு ஒரு மாதம் முன்புதான், தி மு க அங்கம் வகிக்கும் மைய



படிப்பகம்

www.padippakam.com

அரசின் பட்ஜெட் வெளியானது. அதில், சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் விலை உயர்வு உள்ளிட்டு ஏழை - நடுத்தர மக்களின் மீது கிட்டதட்ட 8,000 கோடி ரூபாய்க்குப் புதிய வரிகள் போடப்பட்டுள் ளன. இதை நாம் மறந்து விட்டால், கருணா நிதியின் முதலைக் கண்ணீர் கூட, உண்மைக் கண்ணீராகி விடும்.

தமிழக அரசு நெல் கொள்முதலைக் கைகழுவி விட்டதைச் சாடுகிறார், கருணா நிதி. ஆனால், தேசிய ஜனநாயக முன்னணி அரசோ இந்திய உணவுக் கழகத்தை இழுத்து மூடி, நெல் - கோதுமை கொள்மு தலின், ரேசன் கடைகளின் அடி வேரையே அழிக்கத் துடிக்கிறது. அரசு பேருந்துகளைத் தனியார்மயமாக்குவதை எதிர்ப்பதாகக் கூறுகிறார், கருணாநிதி. ஆனால் மைய அரசோ இலாபம் தரும் மைய அரசின் பொதுத்துறை நிறுவனங்களை விற்று 10,000 கோடி திரட்டப் போவதாக பட்ஜெட்டில் அறிவிக்கிறது.

தி.மு.க., மட்டுமல்ல; காங்கிரசு மட்டு மல்ல; த.மா.கா. மட்டுமல்ல, இடது - வலது போலி கம்யூனிஸ்டுகளுக்குக் கூட ஜெயாவின் பட்ஜெட்டை எதிர்ப்பதற்கு அருகதை கிடையாது. இவர்கள் ஜெயாவின் முன்னாள் கூட்டாளிகள் என்ப தற்காக மட்டும் இப்படிக் கூறவில்லை. உலக வங்கியின் உத்தரவுக்கு அடிபணிந்து ஜெயா தமிழகத்தில் என்னென்ன சீர்திருத் தங்களைச் செய்கிறாரோ, அதைத்தான் மேற்கு வங்கத்தில் 'இடது'கள் தலை மையில் உள்ள கூட்டணி ஆட்சி செய்கிறது.

மேற்கு வங்கத்தில் 'ஹால்டியா'' என்ற பொதுத்துறை நிறுவனத்தைத் தனியாருக்கு விற்க முயலும் போலி கம்யூனிஸ்டுகள், தமிழகத்தில் ''பொதுத்துறை நிறுவனங் களைத் தனியாரிடம் விற்காதே'' எனத் தட்டி எழுதிக் கட்டுவது, என்ன வகை நாணயம்? தமிழகத்தில் ரேசன் அரிசி விலையை ரூ. 3.50-க்கு மேல் உயர்த்தக் கூடாது எனக் கூப்பாடு போடும் இதே போலி கம்யூனிஸ்டுகள், மேற்கு வங்கத்தில் ரேசன் அரிசியை ரூ. 6.50-க்கு விற்பதற் காக வெட்கப்படுவது கிடையாது.

போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு எல்லா ஓட்டுக் கட்சிகளும் தாராளமயத்தை எதிர்ப்பதிலும், ஆதரிப்பதிலும் ''மாமியார் உடைத்தால் மண் குடம்; மருமகள் உடைத்தால் பொன் குடம்'' என்று இரட்டை வேடம் போடுகின்றன. எனவே, மைய அரசும், தமிழக அரசும் பட்ஜெட் என்ற பெயரில் தொடுத்துள்ள இப்பொரு ளாதாரத் தாக்குதலை எதிர்ப்பதற்கு எதிர் கட்சிகளை நம்புவது என்பது மக்கள் தங்க ளது தலையில் தாங்களே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ளுவது போன்ற துதான்!

● செல்வம்

## பொய் வழக்கு, கைது, அடக்குமுறைகள்

# ''தடா''வை விஞ்சும் ''பொடா''

தீவிரவாதத்தை 'ஒழிப்பதற்காக'க் கொண்டு வரப்பட்டுள்ள ''பொடா'' சட்டம், ''யார் மீது பாயும்?'' என்பதை குஜராத் மாநிலத்தில் நடைபெற்று வரும் இனப்படு கொலை, நாடெங்கும் அம்பலப்படுத்திக் காட்டியது. கோத்ராவில் 'அப்பாவி' இராம சேவகர்களை எரித்துக்' கொன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட முசுலீம்கள் மீது பாய்ந்த பொடோ, இரண்டாயிரம் முசுலீம் களை எரித்துக் கொன்று குஜராத் மாநிலத் தையே பயங்கரவாத பீதியில் மூழ்கடித்து விட்ட இந்து மதவெறி பயங்கரவாதிகள் மீது பாயவில்லை. இப்படி முசுலீம்களைப் பழி தீர்த்து கொள்வதற்காக பொடோ ஏவி விடப்பட்டதைக் கண்டித்து, நாடெங்கும் கண்டனக் குரல்கள் எழுந்த பிறகுதான் குஜராத் மாநில பா.ஜ.க. அரசு அம்முசு லீம்கள் மீது பொடோவை ஏவியதைத் திரும்பப் பெற்றது.

கோத்ரா வழக்கு ஒரு பானை சோறுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போன்றது. கோத்ராவைப் போன்று நூற்றுக்கணக்கான வழக்குகள் ''பொடா''வின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

''பொடா'' சட்டம் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முன்பே, அது அரசாணையாக இருந்த பொழுதே ஜம்மு - காச்மீர் மாநிலத்தில் நடைமு றைக்கு வந்து விட்டது. அம்மாநிலத்தில் மட்டும் கடந்த ஆறே மாதங்களில் 432 வழக்குகள் ''பொடா''வின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. எதிர்க்கட்சிகளின் வாயை அடைப்பது தொடங்கி அப்பாவி மக்களிடமிருந்து பணம் கறப்பது வரை அம்மாநிலத்தில் பொடா சர்வசாதாரண மாகப் பயன்படுத்தப்படுகிறது.

முஷ்டாக் அகமது தர் என்பவரையும், அவரது மனைவி ஷசியா பேகத்தையும் கடந்த மார்ச் மாதம் கைது செய்த ஜம்மு - காசுமீர் போலீசு, அவர்களிடமிருந்து ஒரு இலட்சம் அமெரிக்க டாலர்களைக் கைப்பற் றியது. இந்த அமெரிக்க டாலர்களை ஜம்மு - காசுமீர். விடுதலை முன்னணியின் தலைவர் யாசின் மாலிக்கிடம் கொடுப்பதற் காக நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் இருந்து கடத்தி வந்ததாக அவர்கள் கொடுத்த வாக்குமூலத்தை ஆதாரமாகக் காட்டி, யாசின் மாலிக்கை பொடாவின் கீழ் கைது செய்து விட்டது, ஜம்மு - காசுமீர் மாநில அரசு.

''குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரும் வாக்குமூலத்தை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு யாரையும் கைது செய்யக் கூடாது'' என உச்சநீதிமன்றம் ராஜீவ் காந்தி கொலை வழக்குத் தீர்ப்பில் குறிப்பிட்டுள் ளது. ஆனால், யாசின் மாலிக்கோ, உச்ச நீதி மன்றத்தின் இந்த வழிகாட்டுதலுக்கு எதி ராகக் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும், யாசின் மாலிக்கிற்கு எதிரான ஆதாரங் களைத் திரட்டுவதற்காக காத்மண்டுவிற்குச் சென்ற கூடுதல் போலீசு இயக்குநர் வெறும் கையோடுதான் திரும்பியிருக்கிறார்.

யாசின் மாலிக்கைக் கைது செய்ய வேண்டிய அவசியத்தை அமெரிக்க டாலர் உருவாக்கவில்லை. மாறாக, செப்டம்பரில் வரவுள்ள ஜம்மு - காசுமீர் மாநிலத் தேர்தலில் எப்படியாவது வெற்றி பெறத் துடிக்கும் பரூக் அப்துல்லாவின் குறுக்கு புத்திதான் உருவாக்கி இருக்கிறது.

ஜம்மு - காசுமீர் மாநிலத்தில் மைய அரசு நடத்தவுள்ள மோசடித் தேர்தலுக்கு எதிராக, ஒரு மாற்று தேர்தலை நடத்த ஹுரியத் மாநாடு முயன்று வருகிறது. இம்மாற்றுத் தேர்தலை நடத்த ஒரு தேர்தல் கமிசனை உருவாக்கப் போவதாகவும் ஹுரியத் மாநாடு அறிவித்துள்ளது. இதனை நடைமுறைப்படுத்த மும்முரமாக முயன்று வரும் ஹுரியத் மாநாட்டுத் தலை வர்களுள் ஒருவரான யாசின் மாலிக்கின் நடவடிக்கைகளை முடக்குவதற்காகவே, அவரை பொடாவின் கீழ் கைது செய்திருக் கிறது, பரூக் அப்துல்லா அரசு. மாநில அர சிற்கான தேர்தலை எதிர்ப்பவர்களுக்கு யாசின் மாலிக்கிற்கு நேர்ந்த கதிதான் கிடைக்கும் என்ற மறைமுக எச்சரிக் கைதான் இந்தக் கைது.

பாரமுல்லா நகரில் வசிக்கும் எழுபது வயதான குலாம் கதிர் ஷா, பத்து வருடங்க ளுக்கு முன்பு தனது மூத்த மகன் ரூஃப் அக மதை போலீசார் பிடித்துச் சென்ற பின் காணாமல் போய் விட்டதை முன் வைத்து, போலீசு அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு தொடுத்திருக்கிறார். இந்த வழக்கைத் திரும்பப் பெறக் கோரி போலீசார் மிரட்டிய பின்னும், அவர் பின்வாங்காமல் வழக்கை நடத்துவதால், குலாம் கதிர் ஷா கடந்த மாதம் பொடாவில் கைது செய்யப்பட்டார்.

சிறீநகரில் வசிக்கும் குலாம் முகம்மது தர் என்பவரை பொடாவின் கீழ் கைது




படிப்பகம்

www.padippakam.com

செய்திருக்கும் ஜம்மு - காசுமீர் போலீசு, இந்தக் கைதுக்கு ஆதார மாக அவரது வீட்டில் 'கண்டுபிடித்த' ஒரு கையெறி குண்டைக் காட்டியிருக்கிறது.

பொடாவை அமல்படுத்துவதில் ஜம்மு - காசுமீர் மாநிலத்தை விடக் கேவலமாகவும் மோசடித்தனமாகவும் மகாராஷ்டிரா மாநில அரசு நடந்து கொண்டிருக்கிறது. மும்பையைச் சேர்ந்த முகம்மது அப்ரோஸ் என்ற முசுலீம் இளைஞரை கடந்த டிசம்பர் மாதம் ராஜ துரோக வழக்கின் கீழ் கைதுசெய்திருந்த அம்மாநில போலீசார், பின் அவர் மீது ''பொடோ'' பிரிவை ஏவினார்கள். அப்ரோஸ் மீதான ''பொடோ'' வழக்கு விசாரணைக்கு வந்த பொழுது, அவர் மீது பொடோவின் கீழ் வழக்கு தொடர போதிய ஆதாரம் கிடைக்கவில்லை என்று கூறி வழக்கைத் திரும்ப பெற்றுக் கொண்டதோடு, ''தவறு செய்வது மனித இயல்பு'' என்று கூறி, நீதிமன்றத்தில் தன்னிலை விளக்கமளித்திருக்கிறது மகாராஷ்டிரா மாநில போலீசு. ஆதாரம் கிடைக்கும் முன்பே பொடாவை ஏவுவது செருப்புக்குத் தகுந்த மாதிரி காலை வெட்டும் கதைதான்.



பாசிசச் சட்டம் ''பொடா''வைத் திரும்பப் பெறக் கோரி காசுமீர் மாநிலத் தலைநகர் சிறீநகரில் நடந்த ஆர்ப்பாட்டம்.

மிரட்டிப் பணம் பறித்ததாகக் குற்றஞ் சுமத்தி அப்ரோஸை முதலில் கைது செய்த மகாராஷ்டிரா போலீசு, பின்னர் அவர் மீது நான்கு திருட்டு வழக்குகளை சுமத்தியது. இதன் பின்னர் அப்ரோஸ், ''நான் ஆஸ்திரேலியாவில் இயங்கும் ஒரு முசுலீம் தீவிரவாதக் குழுவின் உறுப்பினர் என்றும், உலக வர்த்தக மையக் கட்டிடம் தகர்க்கப்பட்ட அதே நாளில், பிரிட்டன் நாடாளுமன்றக் கட்டிடத்தை விமானத்தைக் கொண்டு மோதி, தகர்க்கத் திட்டமிட்ட குழுவில் தானும் பங்கேற்றதாகவும்'' தானே போலீசிடம் வாக்குமூலம் தந்ததை மட்டுமே ஆதாரமாகக் காட்டி, அப்ரோஸ் மீது ராஜ துரோக வழக்கும் அதன் பின்னர் பொடோவும் ஏவப்பட்டன.

அப்ரோஸின் வாக்குமூலத்தைத் தவிர, வேறெதுவும் ஆதாரம் இருக்கிறதா என்றால், அப்ரோஸின் பாஸ்போர்ட், செல்போன், வங்கி கிரெடிட் கார்டுகள், அப்ரோஸ் அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் விமானம் ஓட்டும் பயிற்சி பெற்றதற்கான ஆதாரம் - இவை அனைத்தையும் எடுத்துப் போட்டு, அப்ரோஸ் பின்லேடனின் அல்-கொய்தா அமைப்போடு தொடர்புடைய சர்வதேச முசுலீம் பயங்கரவாதி என முத்திரை குத்துகிறது மகாராஷ்டிரா மாநில போலீசு. ஒரு இந்தியக் குடிமகனை சர்வதேச முசுலீம் பயங்கரவாதத்தோடு தொடர்புபடுத்த மேலே சொன்ன ஆதாரங்கள் மட்டும் போதுமென்றால், இந்திய நடுத்தர மற்றும் மேட்டுக்குடி வர்க்கத்தையே பொடாவின் கீழ் கைது செய்துவிட முடியும்!

அப்ரோஸ் மீது குற்றப் பத்திரிகையே தாக்கல் செய்யாமல், அவரை நீண்ட நாட்களுக்கு போலீசு காவலில் வைத்துக் கொள்ளுவதற்கு வசதியாகதான், அவர் மீது போலீசார் அவசரம் அவசரமாக பொடோவை ஏவியதாக முதலாளித்துவ பத்திரிகைகளே அம்பலப்படுத்தி விட்டன.

**முசுலீம் பயங்கரவாதத்தோடு ஒருவனைத் தொடர்புபடுத்த பாஸ்போர்ட், செல்போன், கிரெடிட் கார்டு போதுமென்றால், இந்திய நடுத்தர - மேட்டுக்குடி வர்க்கத்தையே பொடாவின் கீழ் கைது செய்து விட முடியும்.**

அப்ரோஸ் மீது போலீசு புனைந்த பணம் பறிப்பு வழக்கு, திருட்டு வழக்குகள் அனைத்தும் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு விட, ராஜ துரோக வழக்குதான் எஞ்சி நிற்கிறது.

தீவிரவாதமே தலைதூக்காத, பழங்குடியின மக்கள் நிறைந்து வாழும் மாநிலமான ஜார்கண்டில் இந்து மதவெறி அரசால் 36 வழக்குகள் பொடாவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தில்லி யூனியன் பகுதியில் 18 பேர் மீது ''பொடா''வின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவர்களுள் தில்லி பல்கலைக்கழக பேராசிரியர் அப்துல் ரஹ்மான் கிலானியும் ஒருவர். நாடாளுமன்றத் தாக்குதலைத் திட்டமிட்டுக் கொடுத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கிலானிக்கு எதிராக மயிரளவு ஆதாரத்தைக் கூட போலீசு கண்டுபிடிக்கவில்லை. ''அப்துல் ரஹ்மான் கிலானியை நாடாளுமன்றத் தாக்குதலோடு சம்மந்தப்படுத்தி ''பொடோ''வின் கீழ் போலீசு கைது செய்திருப்பதற்குக் காரணமே, அவர் ஒரு காசுமீரி முசுலீம்'' என வெளிப்படையாக தில்லி பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கத்தைச் சேர்ந்த பல பேராசிரியர்கள் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

''தடாவைப் போல பொடாவை அப்பாவிகள் மேல் ஏவிவிட முடியாது; இந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தும் அதிகாரிகளைத் தண்டிக்க, அந்த சட்டத்திலேயே வழி இருக்கிறது'' என்று பொடாவை ஆதரித்த அனைவருமே சத்தியம் செய்யாத குறையாக அடித்துப் பேசினார்கள். ஆனால், இப்பொழுது நடப்பதோ அதற்கு நேர் எதிராகவே இருக்கிறது.

மேலும், இந்த வழக்குகளில் பொடா தவறாகப் பயன்படுத்தப்பட்டு விட்டதாகச் சுருக்கிப் பார்த்துவிட முடியாது. அப்படிக் குற்றஞ்சாட்டினால், ''எந்த சட்டம்தான் தவறாகப் பயன்படுத்தப்படவில்லை'' என எகிறிக் குதித்து, இப்பாசிச சட்டத்தின் இருத்தலை நியாயப்படுத்துகிறது, ஆளுங் கும்பல்.

பயங்கரவாத பீதியூட்டி, மக்களின் அடிப்படை உரிமைகள் அனைத்தையும் பறித்து, ஒரு பாசிச காட்டாட்சியை நிறுவ வேண்டும் என்பதுதான் ஆளுங் கும்பலின் விருப்பம். அதற்கு ஏற்றாற் போன்றே பொடா சட்டம் உருவாக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதைத்தான் இந்த வழக்குகள் எடுத்துக் காட்டுகின்றன.

● ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com



## தனியார்மய வெள்ளத்தில் கூட்டுக் குடிநீர் திட்டம்

தமிழக முதல்வராகப் பதவியேற்றப் பிறகு, தனது தொகுதியான ஆண்டிப்பட்டிக்கு வருகை தந்த பாசிச ஜெயா, தொகுதி மக்களின் நீண்டநாள் கனவாகிய சேடப்பட்டி - ஆண்டிப்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்தை ரூ. 98 கோடி மதிப்பீட்டில் தொடங்கி வைத்தார். இதோடு 1486 பணிகளுக்கான திறப்பு விழாவையும் 300 பணிகளுக்கான தொடக்க விழாவையும் ஒரே நேரத்தில் தொடங்கி வைத்து பிரமிப்பூட்டினார்.

இத்திட்டத்தால் ஆண்டிப்பட்டி மக்களுக்குக் குடிநீர் கிடைக்கிறதோ, இல்லையோ! ஆனால் தனியார் முதலாளிகள் கொள்ளையடிக்க உத்திரவாதம் செய்யப்பட்டு விட்டது. ஏனெனில் தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வரும் கூட்டுக் குடிநீர் திட்டப் பராமரிப்பு பணிகள் அனைத்தும் தனியாருக்கு ''டெண்டர்'' விட முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தமிழக முதல்வரின் ஆண்டிப்பட்டி தொகுதிக்கு உட்பட்ட கடமலைகுண்டு, குமணன் தொழு, கோரையூத்து மற்றும் அரப்படித்தேவன்பட்டி உட்பட 13 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் தேனி மாவட்டத்திலும், திண்டுக்கல் மாவட்டத்தில் 6 கூட்டுக் குடிநீர் திட்டங்களும், மதுரை மாவட்டத்தின் கருமாத்தூர் குடிநீர் திட்டம் மற்றும் தென் மண்டல தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகம் பராமரிப்பு உட்பட தமிழகத்தின் பெரும்பாலான கூட்டுக் குடிநீர் திட்ட பராமரிப்பைக் கவனிக்க தனியார் முதலாளிகளிடம் டெண்டர் கோரப்பட்டுள்ளது.

கூட்டுக் குடிநீர் திட்டப் பராமரிப்புப் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான பணியாளர்களின் எண்ணிக்கையையும் அவர்களது பணிகளையும் அரசு வரையறுத்துள்ளது. ஆனால் நடைமுறையில் ''டெண்டர்'' எடுக்கும் தனியார் நிறுவனங்கள் இந்த விதிமுறைகளைப் பின்பற்றுவது கிடையாது. மிகச் சாதாரணமாக, ஒரு கூட்டுக் குடிநீர் திட்டப் பராமரிப்பை ஏலம் எடுப்பவர்கள் ஆண்டுக்கு ரூ. 2 லட்சத்துக்கும் மேலாக இலாபமீட்டுகின்றனர். இவ்வாறாக தமிழகம் முழுவதும் கோடிக்கணக்கிலான மக்களின் வரிப்பணம் தனியார் முதலாளிகளுக்குத் தாரை வார்க்கப்படுகிறது. மேலும் ஏலம் எடுப்பவர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் குடிநீர் வாரிய நிர்வாகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வராததால் அரசு நிர்ணயம் செய்த ஊதியம் அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்காது. இதனால் 13 பராமரிப்பு கோட்டங்களில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான ஊழியர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விட்டது.

ஒருபுறம், குடிநீர் இணைப்பைப் பெற வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள கிராம மக்கள் ரூ. 500-ம் மற்றவர்கள் ரூ. 1000-மும் இரு தவணைகளில் செலுத்தலாம் என்று அறிவித்து, கட்டாய வசூலில் அரசு இறங்குகிறது. மறுபுறம், ஏல[ம்] திட்டப் பராமரிப்புப் பணிகளைச் சரிவ[ர] என்பதைக் கண்காணிக்க போதுமான பொறியாள[ர்] மிக்காமல் பராமரிப்புக் கோட்டங்களைக் குறைத்து[...] லாளிகளின் கொள்ளைக்கு வழிவகை செய்தும், பொது[...] வரிப்பணத்தைக் கோடிகோடியாய் ஜெயா அரசு வாரியிற[...]

கடந்த மார்ச் மாதத்தில் உலக வங்கிக் குழு, கிராமப்புற [...] திட்டம் பற்றி தமிழக அரசுடன் விவாதித்து ரூ. 2300 கோடிக[்] கடன் தர முன்வந்துள்ளது. இக்கடன் சுமை தமிழக கிராமப்பு[ற] மக்களின் தலையில் ஏற்றப்படும். இதோடு குடிநீர் இணைப்புக்கான வைப்புத்தொகை, குடிநீர் கட்டணம், பராமரிப்புக் கட்டணம் ஆகிய சுமையும் சேரும். ஆனாலும் குழாயில் தண்ணீர் வருமா என்பதற்கு உத்தரவாதம் கிடையாது. குடிநீர் வாரியமும் இதற்குப் பொறுப்பேற்காது. தண்ணீர் வரவில்லை என்றாலோ, குழாய் ரிப்பேர் - உடைப்பு ஏற்பட்டுள்ளது என்றாலோ பராமரிப்பை ஏலம் எடுத்துள்ள தனியார் நிறுவனத்திடம் மக்கள் முறையிட்டுக் கொள்ள வேண்டும்.

தமிழகத்தை இந்தியாவிலேயே முதல்தர மாநிலமாக உயர்த்திக் காட்டுவேன் என்று குளுரைக்கிறார், பாசிச ஜெயா. உண்மைதான்; சேவைத்துறைகளைத் தனியார்மயமாக்குவதில் தமிழகம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழும் என்பதில் சந்தேகமேயில்லை.

**ஆண்டிப்பட்டி தொகுதியில் கூட்டுக் குடிநீர் திட்டத் தொடக்க விழா: தனியார்மயக் கொள்ளைக்கு கால்கோள் விழா.**




## அரியானாவில் தலைவிரித்தாடும் இந்துவெறி பயங்கரவாதம்

கோத்ரா சம்பவத்தை வைத்து குஜராத்தில் இந்து வெறியர்கள் இனப்படுகொலை வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டதைப் போலவே, வடக்கே டெல்லியை ஒட்டியுள்ள அரியானாவிலும் இந்து வெறியர்கள் திட்டமிட்ட அட்டூழியங்களில் ஈடுபட்டுள்ளனர். 'தேசிய' பத்திரிகைகளால் மூடி மறைக்கப்பட்ட இந்த வெறியாட்டங்கள் இப்போது மெதுவாகக் கசிந்து வெளிவரத் தொடங்கியுள்ளன.

கோத்ரா சம்பவத்தையொட்டி மார்ச் முதல் நாளன்று விசுவ இந்து பரிசத், கடையடைப்புப் போராட்டத்தை அறிவித்து முசுலீம்கள் மீதான தாக்குதலுக்குக் கால்கோள் விழாவாக நடத்தியது. அன்று அரியானாவின் பிவானி மாவட்டத்திலுள்ள லோகாரு நகரில் இரயில் நிலையம் அருகிலுள்ள மசூதிக்குள் அத்துமீறி நுழைந்த இந்து வெறியர்கள் ஆபாசமாகக் கூச்சலிட்டுக் கொண்டே கல்லெறித் தாக்குதலை நடத்தினர். அம்மசூதியின் இமாம், மவுலானா அஜிஸ் ஆலம் மானபங்கப்படுத்தப்பட்டுத் தாக்கப்பட்டார். மாவட்ட பாரதீய ஜனதா கட்சித் தலைவர்களே இத்தாக்குதலை முன்னின்று நடத்



படிப்பகம்

www.padippakam.com



...ணம காட்டி, ...நிலத்தின் வேறு பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய போலீசார் சென்று விட்டனர். மசூதிகளின் அருகே போலீசு பாதுகாப்பு அகற்றப்பட்டதும், தாக்குதலை நடத்த இந்துவெறியர்கள் திட்டமிட்டு ஏற்பாடுகளைச் செய்தனர்.



இந்துவெறி பாசிசக் கோரத் தாண்டவம்: தீயிட்டுக் கொளுத்தப்பட்ட தமது துணி கிடங்கில் ஏதாவது தேறுமா என்று வேதனையுடன் தேடும் முசுலீம்கள்.

மார்ச் 15-ஆம் நாளன்று அயோத்தியில் தூண்தானம் வழங்கப்பட்ட நேரத்தில் லோகாரு மசூதியில் பசுவும் கன்றும் வெட்டிக் கொல்லப்பட்டதாக இந்து வெறியர்கள் நகரெங்கும் வதந்தியைப் பரப்பி வெறியூட்டினர். சுற்றுப்புற பகுதிகளிலிருந்து இந்துவெறி குண்டர்கள் மார்ச் 17-ஆம் தேதியன்று அணிதிரட்டி வரப்பட்டனர். லோகாரு ரயில் நிலையம் அருகே திரண்ட உள்ளூர் - வெளியூர் குண்டர்கள், அருகிலிருந்த மசூதியை முற்றுகையிட்டு தாக்கத் தொடங்கினர். அதன் குவி மாடங்களும் ஸ்தூபிகளும் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன.

பின்னர் இக்குண்டர்படை கூச்சலிட்டுக் கொண்டே நகரின் மையத்திலிருந்து தொன்மைவாய்ந்த ஜமா மசூதியைக் கல்லெறிந்து தாக்கியது. அழகிய கண்ணாடி வேலைப்பாடு மிக்க அம்மசூதியின் கூடங்களும், குவிமாடங்களும் கடப்பாரையால் இடித்துச் சிதைக்கப்பட்டன. அதன்பிறகு இக்கும்பல் முசுலீம் குடியிருப்புகளையும், கடைகளையும் சூறையாடி தீயிட்டுக் கொளுத்தியது. முசுலீம்களின் துணி கிடங்குகள், வளையல் உற்பத்திக் கூடங்கள், உணவு தானிய மண்டிகள் குறி வைத்துத் தாக்கப்பட்டு தீயிடப்பட்டன. பொருளாதார ரீதியாக முசுலீம்களின் முதுகெலும்பை முறிப்பதே இந்துவெறியர்களின் முக்கிய நோக்கமாக இருந்தது.

இந்த வெறியாட்டங்களை முடித்துக் கொண்டு, ஏழை முசுலீம்கள் வாழும் பகுதிகளுக்குப் படையெடுத்த குண்டர்படை, பெண்கள் - குழந்தைகளை மிருகத்தனமாகத் தாக்கிவிட்டு அக்குடியிருப்புகளைத் தீயிட்டுக் கொளுத்தியது. முசுலீம்கள், போலீசாரிடமும் தீயணைப்புப் படையினரிடமும் பலமுறை தொலைபேசியில் கோரியபோதும் யாரும் உதவிக்கு வரவில்லை. பல பகுதிகளில் இந்து உழைக்கும் மக்களே முசுலீம்களுக்குப் பாதுகாப்பாக நின்று குண்டர்களை விரட்டியடித்துள்ளனர். ''தீ வைப்பு சூறையாடல்களில் இறங்கிய குண்டர்களைத் தடுத்ததற்காக அவர்கள் எங்களைத் தாக்கி அச்சுறுத்தினர். நாங்கள் உறுதியாக எதிர்த்து நின்று வாதிட்டதால் அவர்கள் ஆபாசமாகத் திட்டிக் கொண்டே பின்வாங்கி விட்டனர். இல்லையேல் இங்கு 70 முசுலீம் வீடுகள் எரிக்கப்பட்டிருக்கும்'' என்கிறார் இலட்சுமி என்ற பெண்மணி. ஆனாலும் அடுத்த தாக்குதல் எப்போது நடக்குமோ என்ற அச்சத்தில் ஏறத்தாழ 300 முசுலீம் குடும்பங்கள் அண்டை மாநிலமான இராஜஸ்தானுக்கு அகதிகளாக ஓடிவிட்டனர்.

இந்துவெறியர்களின் அட்டூழியங்களைக் கண்டித்து இடதுசாரி அமைப்புகளும் மக்கள் உரிமை இயக்கங்களும் அறிக்கை வெளியிட்டு, பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று சௌதாலா அரசின் யோக்கியதையை அம்பலப்படுத்தியதும், சௌதாலா அரசு இப்போது நீதி விசாரணைக்கு உத்திரவிட்டு ஒருசில இந்து வெறியர்களைக் கைது செய்துள்ளது. இக்கண் துடைப்பு நடவடிக்கையைக் கூட ஏற்க மறுத்து இந்து வெறியர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்துவெறி பாசிஸ்டுகள் நாடெங்கும் கோரத் தாண்டமாடிய போதிலும், பதவி சுகத்தில் திராவிடக் கட்சிகள் நாடாளுமன்றத்தில் வாய்மூடிக் கிடப்பதோடு வெட்கமின்றி பா.ஜ.க. அரசுக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

## அமெரிக்காவின் சதி அடியாளாக இந்தியா

ஆப்கான் மீதான ஆக்கிரமிப்புப் போரைத் தொடர்ந்து அடுத்த இலக்காக ஈராக்கைக் குறிவைத்துள்ளது அமெரிக்க வல்லரசு. இரசாயன ஆயுதங்களை ஈராக் இரகசியமாகத் தயாரித்து வருவதாகவும் இசுலாமிய பயங்கரவாதக் குழுக்களை ஆதரித்து நாசவேலைகளுக்கு ஏவிவிடுவதாகவும் குற்றம் சாட்டி அந்நாட்டின் மீது போர் தொடுத்து, அதிபர் சதாம் உசேனைக் கொன்றொழிக்கத் திட்டமிட்டு வருகிறது. ஆப்கான் மீது பிரிட்டனுடன் சேர்ந்து கூட்டுப்படைத் தாக்குதலை நடத்தியதைப் போலவே, ஈராக் மீதும் பன்னாட்டுப் படைகளின் தாக்குதலை நடத்தத் தீர்மானித்துள்ளது. இதற்காக தெற்காசியப் பிராந்திய மேலாதிக்க வல்லரசும் அமெரிக்காவின் விசுவாச எடுபிடியுமான இந்தியாவிடம் ஆதரவு கோரியுள்ளதோடு நிபந்தனைகளையும் விதித்து அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இதற்கென முன்னாள் அமெரிக்க அரசுச் செயலாளரும் அதிபர் புஷ்ஷின் நம்பிக்கைக்குரியவரும் டெக்சான் எண்ணெய் நிறுவனத்தின் பெருமுதலாளியுமான ஜேம்ஸ்பேக்கர், கடந்த மார்ச் மாத இறுதியில் இந்தியாவுக்கு வந்து சென்றுள்ளார். அவரது பயணம் மிகவும் இரகசியமாகவும் பாதுகாப்பாகவும் ஏற்பாடு செய்யப்பட்டது. அவர் பிரதமர் அலுவலக அதிகாரிகள் வெளியுறவுத்துறை அமைச்சக அதிகாரிகள் மற்றும் பெட்ரோலியத்துறை அமைச்சர் ராம்நாயக் ஆகியோரிடம் இரகசிய பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளார்.

ஈராக் மீது அமெரிக்காவும் பிரிட்டனும் கூட்டாகப் போர் தொடுக்கும். இந்தியா, இப்போருக்கு ஆதரவு தரவேண்டும். இப்போரில் பங்கேற்கும் பன்னாட்டுப் படைகளில் இந்தியப் படையும் அங்கம் வகிக்க வேண்டும். தரகுப் பெருமுதலாளி அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனமும் இந்திய அரசின் எண்ணெய் எரிவாயு நிறுவனமும் (ONGC) ஈராக்கில் எண்ணெய் துரப்பண வேலைக்கும் உற்பத்திக்கும் திட்டமிட்டுள்ளதை நிறுத்த வேண்டும். நேபாளத்தில் டெக்சானா ரிசோர்சஸ் என்ற அமெரிக்க எண்ணெய் நிறுவனம் இரு இடங்களில் எரிபொருள் துரப்பண



படிப்பகம்

www.padippakam.com



வேலைகளில் ஈடுபட்டுள்ளதால், அதில் இந்திய அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்குதாரர்களாகக் கூட்டுச் சேர வேண்டும். ஈராக்குடனான வர்த்தக உறவுகளை இந்தியா விரைவில் துண்டித்துக் கொள்ள வேண்டும் - என்று ஜேம்ஸ் பேக்கர் தமது இரகசிய பேச்சு வார்த்தையில் எச்சரிக்கை விடுத்துள்ளார். ஈராக்குடன் பாரம்பரியமாக வர்த்தக உறவு வைத்துள்ள இந்தியா, என்ன செய்வது என்று புரியாமல் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறது.



இரகசிய சதிகளுக்காக இந்தியாவுக்கு வந்த முன்னாள் அமெரிக்க அரசுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர்.

அதிகாரத் தாழ்வாரங்களில் மெதுவாகக் கசியத் தொடங்கிய இந்த உண்மைகள் இப்போது முதலாளித்துவப் பத்திரிகைகளில் வெளிவந்து அம்பலமாகி விட்டன. ஆனாலும் சதிகார இந்திய ஆட்சியாளர்கள் இதுபற்றி வாய்திறக்க மறுக்கின்றனர். ஓட்டுக் கட்சிகளும் இச்சதிக்கு உடந்தையாக வாய்மூடிக் கிடக்கின்றன. அமெரிக்காவின் இராணுவ மேலாதிக்க திட்டமான ''தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத் திட்ட''த்துக்கு ஆதரவு அளித்தது முதல், இப்போது ஈராக் மீதான ஆக்கிரமிப்புப் போருக்கு ஆதரவாக இரகசிய பேச்சு வார்த்தை நடத்துவது வரை - இந்திய அரசு அமெரிக்காவின் விசுவாச அடியாளாக சீரழிந்து கிடப்பதையே இவையனைத்தும் நிரூபித்துக் காட்டுகின்றன.

## ஏழை நாடுகளைத் திவாலாக்கும் ஏகாதிபத்தியங்களின் கடனுதவி

**வ**ளர்ச்சிக்கான நிதியுதவி பற்றிய ஐ.நா. மன்றத்தின் அனைத்துலக மாநாடு கடந்த மார்ச் மாத கடைசி வாரத்தில் மெக்சிகோ நாட்டில் நடைபெற்றது. உலகின் பணக்கார நாடுகள் நிதியுதவியை இரு மடங்காக்கி ஏழை நாடுகளுக்கு உதவவேண்டும் என்ற கோரிக்கையுடன், அடுத்து வரும் 2015-ஆம் ஆண்டுக்குள் பிஞ்சுக் குழந்தைகளின் இறப்பைத் தடுப்பது, எல்லா குழந்தைகளுக்கும் ஆரம்பக் கல்வி அளிப்பது, வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள மக்கள் தொகையைப் பாதியாகக் குறைப்பது - என இலக்குகளும் முன்வைக்கப்பட்டன.

ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கக் கருவியான உலக வங்கியும் இவற்றை ஆதரிப்பதாகக் கூறி, ''நல்ல கொள்கையும் சிறந்த நிர்வாகமும் உள்ள நாடுகளுக்கு'' கூடுதலாக நிதியுதவி செய்யத் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளது. உலகின் பல்வேறு பத்திரிகைகளும் செய்தி ஊடகங்களும் இச்செய்தியை முக்கியத்துவமளித்துப் பாராட்டின. ஆனால் உலகவங்கி - ஐ.எம்.எப்-பின் கடனுதவியால் ஏழை நாடான இந்தியாவுக்கு எந்தப் பயனுமில்லை. மாறாக, நட்டமும் இழப்பும்தான் பெருகி வருகிறது.

1991-இல் இந்தியா பெற்ற டாலர் கடனுதவியால், பழைய கடனுக்கான அசலைத் திருப்பிச் செலுத்தவும் வட்டி கட்டவும் பெரும் பகுதியைக் கொடுத்த பிறகு, கணிசமான டாலர் கையில் இருந்தது. அடுத்த மூன்றாண்டுகளில் கையில் கிடைக்கும் தொகை சரிந்து கொண்டே போனது. 1995-96இல் பெற்ற கடனுதவியால் பழைய அசலையும் வட்டியையும் செலுத்திய பிறகு கைவசம் சல்லிக்காசு கூட மீதமில்லாமல் போனதோடு, தனது இருப்பிலிருந்து ரூ. 2430 கோடியை இந்தியா செலுத்த வேண்டியதாயிற்று. இந்த நிலைமை தீவிரமாகி 2000-01 இல், இந்தியா உலக வங்கி - ஐ.எம்.எப்-பிடம் பெற்ற கடனுதவியில், பழைய கடனை அடைக்கவும் வட்டி கட்டவும் வாங்கிய கடன் அனைத்தையும் இழந்ததோடு, தனது இருப்பிலிருந்து ரூ. 3105 கோடியைச் செலுத்த வேண்டியதாயிற்று.

கடந்த பத்தாண்டுகளில் உலக வங்கி - ஐ.எம்.எப் மற்றும் ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களிடமிருந்து இந்தியா பெற்ற நிதிக்கடன் ஏறத்தாழ ஒரு இலட்சத்து 75 ஆயிரம் கோடி ரூபாய். பழைய கடனை அடைக்கவும் வட்டி கட்டவும் கடந்த பத்தாண்டுகளில் இந்தியா செலுத்திய தொகை ஏறத்தாழ ஒரு இலட்சத்து 92 ஆயிரம் கோடி ரூபாய்.

ஆனாலும் இன்னமும் ஏறத்தாழ ரூ. 98,000 கோடி அசல் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது. அதாவது, கடந்த பத்தாண்டுகளில் இந்தியா ஏறத்தாழ ரூ. 17000 கோடியைப் பறிகொடுத்துள்ளதோடு, பழைய கடன் சுமையோடு ஆண்டுதோறும் புதிய கடன்சுமையும் அதிகரித்து வருகிறது. பீற்றிக் கொள்ளப்படும் ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் கடனுதவியால் ஏழைநாடான இந்தியாவுக்கு எதிர் விளைவுதான் ஏற்பட்டுள்ளது.

ஏழை நாடுகளின் வளர்ச்சிக்கான கடனுதவி என்ற பெயரில் ஏகாதிபத்திய நிதிநிறுவனங்களால் தரப்படும் இத்தகைய கடனால் ஏழை நாடுகள் வளர்ச்சியடையவில்லை. மாறாக, மேலும் கடனாளியாகி அடிமையாவதுதான் தொடர்கிறது. அதோடு தனது கொஞ்ச நஞ்ச கையிருப்பையும் இழந்து திவாலாகி வருகிறது. இருப்பதையும் இழந்து புதிதாக எதையும் பெற முடியாமல் கடன் வலையில் சிக்கி ஏழை நாடுகள் மஞ்சள் கடுதாசி கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதுதான் இத்தகைய கடனுதவியின் விளைவு.

''நல்ல கொள்கையும் சிறந்த நிர்வாகமும் கொண்ட நாடுகளுக்கு'' மட்டுமே கூடுதல் கடனுதவி செய்யப் போவதாக உலக வங்கி அறிவித்துள்ளது. அதாவது, விசுவாசமாக அசலையும், வட்டியையும் செலுத்தி மீண்டும் கடன் வாங்கித் தத்தளிக்கும் இந்தியா போன்ற நாடுகளுக்குத்தான் இத்தகைய கடனுதவி கிடைக்கும். இதன்படி ஏற்கனவே திவாலான தென்னமெரிக்க நாடுகளின் வரிசையில் இந்தியாவும் விரைவில் சேர்ந்துவிடும். இதற்காகத்தான் வல்லரசு நாடுகளும் ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களும் ஏழை நாடுகளுக்குக் கூடுதலாகக் கடனுதவி செய்ய ஆர்வம் காட்டுகின்றன.

**கடனுதவியும் திருப்பிச் செலுத்தும் தொகையும் (கோடி ரூபாய்களில்)**

| ஆண்டு | பெற்ற உதவி | திருப்பிச் செலுத்தும் அசல் | வட்டி | கிடைத்த தொகை |
|---|---|---|---|---|
| 1991-92 | 23730 | 7455 | 6140 | + 10135 |
| 1995-96 | 16475 | 11310 | 7600 | - 2435 |
| 2000-01 | 15600 | 12765 | 5940 | -3105 |



படிப்பகம்

www.padippakam.com

# பாப்பாபட்டி - கீரிப்பட்டி உள்ளாட்சி தேர்தல்

# ஓட்டுச்சீட்டு ஜனநாயகத்தின் யோக்கியதை

ஒரு தாழ்த்தப்பட்டவனை இந்தியாவின் முதல் குடிமகனாக, இந்திய அரசின் தலைவராக ஏற்றுக் கொள்ளும் இந்திய சமூகம், தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்தவன் என்ற ஒரே காரணத்திற்காக ஒருவனை கிராம பஞ்சாயத்துத் தலைவனாக ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. இந்திய சமூகத்தின் இந்த முரண் நிலையை, இந்திய ஜனநாயகத்தின் இந்த மோசடித்தனத்தை, பாப்பாபட்டி - கீரிப்பட்டி கிராம பஞ்சாயத்துக்களுக்கு நடந்த தேர்தல் மீண்டுமொரு முறை அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது.

மதுரை மாவட்டத்திலுள்ள பாப்பாபட்டி, கீரிப்பட்டி மற்றும் நாட்டாமங்கலம் ஊராட்சிகள் 1996-ஆம் ஆண்டு தனித் தொகுதிகளாக அறிவிக்கப்பட்டன. கடந்த ஆறு ஆண்டுகளில் தமிழகமெங்கும் இரண்டு முறை ஊராட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்து விட்டன. ஆனால், இந்த ஊராட்சிகளில் கடந்த ஆறு ஆண்டுகளில் ஒன்பது முறை தேர்தல் அறிவிப்பு வெளியிட்ட பின்னும் கூட, பிரன்மலை கள்ளர் சாதியைச் சேர்ந்த மேல்சாதி வெறியர்களின் எதிர்ப்பினால், தேர்தல்கள் நடக்கவில்லை. தற்பொழுது கூட பாப்பாபட்டியிலும், கீரிப்பட்டியிலும் ஒரு மோசடித்தனமான தேர்தல்தான் நடந்து முடிந்துள்ளது. இங்கு கூட, ஊராட்சி மன்றத் தலைவருக்கான தேர்தல்தான் நடந்ததே தவிர, ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான தேர்தல் நடைபெறவில்லை. நாட்டாமங்கலத்தில், மேல்சாதி வெறியர்களின் எதிர்ப்பினால் பத்தாவது முறையும் ஊராட்சி மன்றத் தேர்தல்கள் நடக்கவில்லை.

''இந்த ஊராட்சிகளைப் பொதுத் தொகுதிகளாக மாற்றாத வரை, இங்கு உள்ளாட்சி தேர்தல்களை நடத்த விட மாட்டோம்'' என பிரன்மலை கள்ளர் சாதியைச் சேர்ந்த மேல்சாதி வெறியர்கள் வெளிப்படையாக அறிவித்து, இந்த சட்ட விரோத மேல்சாதிக் கொழுப்பை நடைமுறைப்படுத்தியும் வருகின்றனர்.

நாட்டாமங்கலத்தைச் சேர்ந்த மேல்சாதி வெறியர்கள், ''கீழ்ச்சாதிக்காரன் எவனும் வேட்பு மனு தாக்கல் செய்யக்கூடாது'' என ஒலி பெருக்கி மூலம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மிரட்டல் விட்டனர். தாழ்த்தப்பட்டோரின் பாதுகாப்புக்காக நாட்டாமங்கலத்தில் போடப்பட்டிருந்த போலீசாரின் செவிட்டில் அறைந்தது போன்று இந்த மிரட்டல் விழுந்த பின்னரும் கூட, போலீசார் கண்டும் காணாதது போலவே நடந்து கொண்டனர்.

இந்த மிரட்டலையும் மீறி தாழ்த்தப்பட்டவர் யாராவது வேட்பு மனு தாக்கல் செய்ய முயன்றால், அவர்களைத் தடுப்பதற்காக செல்லம்பட்டி ஒன்றிய அலுவலகத்தில் வாசலில் மேல்சாதிக் குண்டர்கள் நிறுத்தி வைக்கப்பட்டனர். நாட்டாமங்கலத்தைச் சேர்ந்த ஒவ்வொரு மேல்சாதிக்காரன் வீட்டில் இருந்தும் ஒருவன் வந்து இந்தக் குண்டர் வேலையைச் செய்தனர்.

இப்படி நாட்டாமங்கலத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் மிரட்டி பணிய வைக்கப்பட்டு, வேட்பு மனு தாக்கல் செய்துவிடாதபடி தடுக்கப்பட்டதால், அங்கு தேர்தல் பத்தாவது முறையாகத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. அவ்வூர் மேல்சாதி வெறியர்கள் இந்த 'வெற்றி'யை வெளிப்படையாகக் கொண்டாடி, தங்கள் மேல்சாதி கொழுப்பைக் காட்டிக் கொண்டனர். இது போலவே, விருதுநகர் மாவட்டத்திலுள்ள கொட்டக் காட்சியேந்தல் தனித் தொகுதிக்கும் தாழ்த்தப்பட்டோர் வேட்பு மனு தாக்கல் செய்து விடாதபடி தடுக்கப்பட்டதால், அங்கும் தேர்தல் பத்தாவது முறையாகத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

விடுதலைச் சிறுத்தைகள் உதவியோடு பாப்பாபட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பதவிக்கு சுப்பனும், கீரிப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பதவிக்கு பூங்கொடியும் வேட்பு மனுதாக்கல் செய்திருக்காவிடில், இந்த முறை கூட பாப்பாபட்டியிலும், கீரிப்பட்டியிலும் ஊராட்சி மன்றத் தலைவர் பதவிக்கான தேர்தல்கள் நடைபெற்று இருக்காது.

மேல்சாதி வெறியர்களின் கட்டளையை மீறி, இரண்டு தாழ்த்தப்பட்டோர் விடுதலைச் சிறுத்தைகள் ஆதரவோடு கடைசி நாளன்று வேட்பு மனு தாக்கல் செய்து விட்டனர் எனத் தெரிந்தவுடனேயே, மேல்சாதி வெறியர்கள் பாப்பாபட்டியில், தனிக்கொடி, பாண்டியம்மாளையும், கீரிப்பட்டியில் கருத்தகண்ணன், பால்சாமியையும் வேட்பு மனு தாக்கல் செய்ய வைத்தனர். இதன் மூலம் மேல்சாதி வெறியர்களின் கட்டளையை மீறி வேட்பு மனு தாக்கல் செய்த சுப்பன் மற்றும் பூங்கொடி வெற்றி பெறுவதைத் தடுத்தனர்.

பாப்பாபட்டியிலும், கீரிப்பட்டியிலும் ஊராட்சி தலைவர் பதவிக்காக மேல்சாதி வெறியர்கால் நிறுத்தப்பட்ட வேட்பாளர்களிடம், ''கிராம மக்கள் தேர்தலின் பின் என்ன முடிவு செய்கிறார்களோ, அதற்குக் கட்டுப்படுவோம்'' என கிராம பொது மந்தையில் வைத்து சத்தியம் வாங்கப்பட்டிருந்தது. மேலும், விடுதலைச் சிறுத்தைகள் ஆதரவோடு நின்ற வேட்பாளர்களை ஊருக்குள் பிரச்சாரம் செய்வதற்குக் கூட மேல்சாதி வெறியர்கள் அனுமதிக்கவில்லை. பிரச்சாரத்தின் இறுதி நாளன்று அந்த வேட்பாளர்கள், மதுரை மாவட்ட ஆட்சியாளர், மதுரை மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் பாதுகாப்போடு ஊருக்குள் நுழைந்து பிரச்சாரம் செய்ய முயன்றபொழுது, மேல்சாதி வெறியர்களால் தடுக்கப்பட்டனர். அக்கும்பல் செருப்புக்களைத் தூக்கி காண்பித்து, ''மேல்சாதி தெருவுக்குள் நுழையாதே; காலனியில் மட்டும் பிரச்சாரம் செய்'' என அதிகாரிகள் கண் முன்னாலேயே வேட்பாளர்களை அவமானப்படுத்தித் துரத்தியடித்தது.

தேர்தல் கமிசனுக்குப் பதிலாக மேல்சாதி வெறியர்களால் பாப்பாபட்டியிலும், கீரிப்பட்டியிலும் நடத்தப்பட்ட இத்தேர்தல்களில் எதிர்பார்த்தபடியே 'கிராம மக்கள் சார்பாக நிறுத்தப்பட்ட வேட்பாளர்கள்' பெரும் 'வெற்றி' பெற்றனர். விடுதலைச் சிறுத்தைகள் ஆதரவோடு நின்ற வேட்பாளர்கள் இருவருக்கும் தலா மூன்று ஓட்டுக்கள்

**கீரிப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பதவிக்கு அக்'கிராம மக்களால்' நிறுத்தப்பட்ட கருத்தகண்ணனுக்கு (தரையில் உட்கார்ந்திருப்பவர்) தேநீர்க் கடையில் பெஞ்சில் உட்காருவதற்குக்கூட உரிமை கிடையாது.**





படிப்பகம்

www.padippakam.com

மட்டுமே கிடைத்தன. பாப்பாபட்டி ஊராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தனிக் கொடியை, பதவியேற்ற இரண்டாவது நாளே பதவி விலக வைத்ததன் மூலமும், கீரிப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் கருத்தகண்ணனைப் பதவியேற்றகையோடே பதவி விலக வைத்ததன் மூலமும் மேல்சாதி வெறியர்கள், இந்திய ஜனநாயகம் பற்றிப் பீற்றிக் கொள்ளும் அனைவரின் முகத்திலும் கரியைப் பூசி விட்டனர்.



**விடுதலைச் சிறுத்தைகள் ஆதரவு பெற்ற பூங்கொடி கீரிப்பட்டியில் பிரச்சாரம் செய்ய முயன்ற பொழுது, அவரை ஊருக்குள் நுழைய விடாமல் துரத்தியடிக்கும் மேல்சாதி வெறியர்கள்.**

பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டாமங்கலம் ஊராட்சியைச் சேர்ந்த மேல்சாதி வெறியர்கள், ''இது மூக்கையா தேவர் பிறந்த பகுதி; எனவே, இந்த ஊராட்சிகளைத் தனித் தொகுதிகளாக அறிவித்திருப்பதை ஏற்றுக் கொள்ள மாட்டோம்'' என சாதித் திமிரைக் காட்டிக் கொள்ளும் அதே சமயம், ''தாழ்த்தப்பட்டவர்களுடன் நாங்கள் சகோதரர்களாகத் தான் பழகுகிறோம்; அரசாங்கமும், தலித் அமைப்புகளும்தான் எங்களுக்குள் சிண்டு முடிவதாக'' விசமத்தனமாகக் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அவர்களே கூறுகிறபடி தாழ்த்தப்பட்டவரோடு மேல்சாதியினர் சகோதரர் போலத்தான் பழகுகிறார்கள் என்றால், ஒரு தாழ்த்தப்பட்டவன் ஊராட்சி மன்றத் தலைவராவதை மேல்சாதி வெறியர்கள் ஏன் அடாவடித்தனமாகத் தடுக்க வேண்டும்? மேல்சாதியைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் கூட அதை மௌனமாக ஏன் அங்கீகரிக்க வேண்டும்? ஊர்க் கட்டுப்பாட்டை மீறி இரண்டு தாழ்த்தப்பட்டோர் வேட்பு மனு தாக்கல் செய்தவுடனேயே, அந்த ஊராட்சிகளைச் சேர்ந்த பெரும்பாலான தாழ்த்தப்பட்டவர்கள் மாடு கன்றுகளோடு, தட்டு முட்டுச் சாமான்களோடு காலனியை விட்டு வெளியேற வேண்டியதற்கு என்ன அவசியம் இருக்கிறது?

இந்த ஊராட்சிகளில் வாழும் தாழ்த்தப்பட்டோருக்கு ஓரடி நிலம்கூடச் சொந்தம் கிடையாது. ''நாங்க வீட்டை விட்டு வெளியே காலடி எடுத்து வைத்தாலோ, அவர்கள் நிலத்தில் தான் வைக்க வேண்டும்'' என்கிறார்கள் தாழ்த்தப்பட்டோர். இதனாலேயே இந்த ஊராட்சியைப் பொதுத் தொகுதியாக மாற்றி விடும்படி தாழ்த்தப்பட்டோரே கூறுவதாகப் பத்திரிகைகள் குறிப்பிடுகின்றன.

தமிழக அரசு, இந்த ஊராட்சிகளைப் பொதுத் தொகுதிகளாக மாற்றி விரும்பாது என்ற போதும், மேல்சாதி வெறியர்களின் எதிர்ப்பை ஒடுக்கி, சட்டப்படியான, நியாயமான தேர்தலை நடத்தவும் தயாராக இல்லை. தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாக இந்த ஊராட்சிப் பகுதிகளில் மேல்சாதி வெறியர்கள் கொட்டமடித்து வந்தது குறித்து சட்டசபையில் பேசுவதற்குக் கூட விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பாளர் திருமாவளவனுக்கு அனுமதியளிக்கப்படவில்லை.

, நாட்டாமங்கலத்துக்குச் செல்ல முயன்ற கிருஷ்ணசாமி மேல்சாதிவெறியர்களால் தடுக்கப்பட்டதும்; அவரின் கார் மேல்சாதி வெறியர்களால் தாக்கப்பட்ட சம்பவமும்; பாப்பாபட்டியிலும், கீரிப்பட்டியிலும் விடுதலைச் சிறுத்தைகள் ஆதரவு பெற்ற வேட்பாளர்கள் மேல்சாதி வெறியர்களால் அவமானப்படுத்தப்பட்ட சம்பவமும் உயர் அதிகாரிகளின் கண் முன்னால்தான் நடந்தன. ஆனாலும், எந்தவொரு மேல்சாதி வெறியனும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்படி கைது செய்யப்படவில்லை. இம்மேல்சாதி வெறியர்களைக் கைது செய்தால்தான் ஓரளவிற்காவது தேர்தல் நியாயமாக நடக்கும் என்ற நிலை இருந்தபொழுது, அரசாங்கமோ, ''இவர்களைக் கைது செய்தால் கலவரம் வெடிக்கும்'' எனத் தாழ்த்தப்பட்டோரிடம் பீதியூட்டியது.

''முக்குலத்தோர் கட்சி'' எனப் பெயரெடுத்திருக்கும் அ.தி.மு.க. மட்டுமல்ல, ''தாழ்த்தப்பட்டவனின் சம்பந்தி'' என சுயதம்பட்டம் அடித்துக் கொள்ளும் தி.மு.க.வும் உள்ளிட்டு எந்தவொரு ஓட்டுக்கட்சியும் இந்த ஊராட்சி தேர்தலுக்கு தங்களின் கட்சி வேட்பாளர்களை நிறுத்தவில்லை. மேல்சாதி வெறியர்களின் அட்டூழியத்திற்கு வாய் திறக்கவில்லை. ஓட்டுக் கட்சிகளின் இத்தேர்தல் புறக்கணிப்பிற்கு, அவை நரித்தனமாக மறைத்து வைத்திருக்கும் மேல்சாதி வெறியும், மேல்சாதி வெறியர்களோடு சமரசம் செய்து கொள்ளும் அவற்றின் பேடித்தனமும்தான் காரணம்.

இந்த ஊராட்சிகளைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர், ''நாங்கள் தைரியமாக தேர்தலில் போட்டியிட வேண்டும் என்றால் எங்களுக்குப் பொருளாதார உத்தரவாதமும், எங்களின் உயிர், உடமைக்குப் பாதுகாப்பும் வேண்டும்'' எனக் கோரியிருக்கிறார்கள். இதை வேறு மாதிரியாகச் சொன்னால், ''தாழ்த்தப்பட்டோரும் பலனடையும்படி கிராமப்புறங்கில் நிலச் சீர்திருத்தம் அமலாக்கப்பட வேண்டும்; மேல்சாதி வெறியர்களின் தாக்குதல்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள அவர்களுக்கு ஆயுதமேந்தும் உரிமை வேண்டும்'' என்பதுதான்.

**புதிய தமிழகம் தலைவர் கிருஷ்ணசாமி நாட்டாமங்கலத்தில் நுழைவதற்கு முட்டுக்கட்டை போடும் அதிகார வர்க்கம்.**



நிலமும் அதிகாரமும் எனும் இவ்விரு கோரிக்கைகளை தேர்தல் பாதையும் நாடாளுமன்ற சனநாயகமும் அனுமதிக்காது. தேர்தலைப் புறக்கணிக்கும் நக்சல்பாரி புரட்சிகரப் பாதையில்தான் இந்தக் கோரிக்கைகளை அடைய முடியும். ஆனால், விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம் போன்ற 'தலித்' அமைப்புகளோ, ''தேர்தல் பாதையின் மூலமே தாழ்த்தப்பட்டோர் அதிகாரத்தை அடைந்து விட முடியும்'' என்ற சமரசப் பாதையில் தாழ்த்தப்பட்டோரை வீழ்த்தித் துரோகமிழைக்கின்றன.

**● தமிழ்மணி**



படிப்பகம்

www.padippakam.com



# போலீசு வெறியர்களின் பிடியில் சிக்கித் தவிக்கும் தமிழகம்

ஏப்ரல் 4-ஆம் தேதி. நள்ளிரவு நேரம். உழைத்துக் களைத்து உறங்கிக் கொண்டிருந்தவர்களின் வீடுகளை உடைத்து, திமுதிமுவெனப் புகுந்த போலீசின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் அப்பாவி மக்கள் அலறித் துடித்தனர்.

கண் முன்னே கணவனை அடித்து உதைத்து இழுத்துச் சென்ற போலீசை 'எதுக்குங்க?' என்று கேட்ட மனைவியின் வயிற்றில் பூட்சு காலால் ஓங்கி ஒரு உதை. குழந்தை பிறந்து ஆபரேசன் செய்து பத்து நாளேயான அவரது தையல் பிரிந்து வலி தாங்காமல் கதறுகிறார். பெற்றோர்களைத் தாக்கி இழுத்துச் சென்று விட்டதால் ஆதரவற்று குழந்தைகள் தனிமையில் தவிக்கின்றன. அடுத்த மாதம் திருமணம் நிச்சயிக்கப் பட்டிருந்த ஒரு பெண் உட்பட பல இளம் பெண்கள் தடிகளால் தாக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை ஒன்றியத்திலுள்ள போலநாயக்கன் பாளையம், போலநாயக்கன் பாளையம் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு, காசுக்காரன் பாளையம் உள்ளிட்ட சில கிராமங்களில்தான் மேற்கூறிய கொலைவெறியாட்டம் அதிகாலை 5 மணி வரை நடந்துள்ளது. 125-க்கும் மேற்பட்டவர்கள் பல்வேறு பொய் வழக்குகளில் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். பெருந்துறை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் படிக்கும் 67 மாணவ மாணவிகளில் ஏப்ரல் 5-ம் தேதி பத்துக்கும் குறைவானவர்களே வந்திருந்தனர். பால்வாடி பள்ளியிலோ யாருமே வரவில்லை என்பது நிலைமையின் கொடூரத்தை உணர்த்தியது.

ஊருக்குள் வந்தால் போலீசு அடித்து இழுத்துச் செல்லும் என்கிற பயபீதியில் மக்கள் காடுகளில் பதுங்கி விட்டனர். நடமாட முடியாத, நோய் வாய்ப்பட்ட ஒன்றிரண்டு பேர் தவிர வேறு யாருமின்றி கிராமங்கள் வெறிச்சோடிக் கிடக்கின்றன. இதற்குக் காரணம் என்ன?

பெருந்துறை பகுதியில் பதனீர் இறக்குபவர்களிடம், 'கள் இறக்குவதாக பொய் வழக்குப் போடுவேன்' என மிரட்டியே போலீசார் பணம் பறித்து வருகின்றனர். கள் இறக்குகிறார்களோ இல்லையோ, போலீசு மிரட்டும் போது பணம் தந்துவிட வேண்டும் என்பதே இப்பகுதியில் எழுதப்படாத சட்டமாக உள்ளது.

4.4.2002 அன்று அதிகாலை திங்களூர் போலீசு நிலையத்தைச் சேர்ந்த தலைமை போலீசு சுப்பையனும் மற்றொரு போலீசும் போலநாயக்கன்பாளையத்தைச் சேர்ந்த சாமியப்பன் என்ற விவசாயியிடம் வந்தனர். அ.தி.மு.க. காரரான இந்த சாமியப்பன் தனது இரு சகோதரர்களுடன் விவசாயத்தோடு ஆறு விசைத்தறிகளை வைத்து தொழிலும் செய்து வருகிறார். கள் இறக்குவதோடு எந்தச் சம்பந்தமுமில்லாதவர் என அப்பகுதி மக்களனைவருமே கூறுகின்றனர்.


போலீசார் வந்தபோது திங்களூர் சந்தையில் தேங்காய் வியாபாரம் செய்ய சாமியப்பன் புறப்பட்டுக் கொண்டிருந்தார். போலீசார் தறியில் வேலை செய்து வரும் சின்னராஜ் பற்றிக் கேட்க, அவரைப் பற்றிய விவரத்தைக் கூறி விட்டு சந்தைக்குப் புறப்பட்டார். தங்களுடன் காவல் நிலையத்திற்கு வரவேண்டும் என போலீசார் வற்புறுத்த, கட்டாயம் தேவை என்றால், வியாபாரத்தை முடித்துவிட்டு வருகிறேன் என்று கூறிவிட்டு சந்தைக்குச் சென்று விட்டார்.

தான் கூப்பிட்டும் போலீசு நிலையத்திற்கு வராமல் சந்தைக்குச் செல்கிறானே என்று கோபவெறி தலைக்கேறிய தலைமைப் போலீசு சுப்பையா, ஏழரை மணிவாக்கில் திங்களூர் சந்தைக்குள் புகுந்தார். நேரே சாமியப்பனிடம் சென்றவர், கண்மூடித்தனமாகத் தாக்கித் தரதரவென போலீசு நிலையத்திற்கு இழுத்துச் சென்றார். ஏற்கனவே உடல்நலமின்றி உள்ள சாமியப்பனைக் காரணமின்றிக் காட்டுத்தனமாகத் தாக்கி இழுந்துச் சென்றதைப் பார்த்த சந்தையிலுள்ளவர்கள் போலீசு நிலையத்திற்குச் சென்று, அவரை விட்டு விடும்படி கூறியுள்ளனர். அங்கும் எந்த விசாரணையுமின்றி போலீசார் தாக்கவே சாமியப்பன் மயங்கி விழுந்தார். அவரை கோபிச்செட்டிப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது பற்றிக் கேள்விப்பட்டுத் திரண்ட ஊர் மக்கள் காலை 8 மணிக்கே திங்களூரில் ஆங்காங்கே சாலை மறியலிலும் இறங்கினர். மதியம் வாக்கில் போலீசு நிலையம் வந்த மாவட்ட டி.எஸ்.பி. சோமசுந்தரம், என்னவென்று கூட விசாரிக்காமல் பெண்களைத் தடியால் அடித்து விரட்டியுள்ளார். இதனை எதிர்த்த பொதுமக்களையும் அவர் தாக்க முனைய, அவர்கள் திருப்பித் தாக்க தள்ளுமுள்ளு நடந்து, சில வாகனங்களின் கண்ணாடிகளும் உடைந்துள்ளன.

அடுத்த சில நிமிடங்களில் தகவல் கிடைத்து, ஒரு பெரும் போலீசு படையுடன் வந்த மாவட்ட எஸ்.பி. சைலேஷ்குமார் யாதவ், கண்ணில்பட்ட பொதுமக்கள் மீதெல்லாம் தடியடி நடத்தி, ஓட ஓட விரட்டிக் கைது செய்தார். அப்படியும்

**போலீசு வெறியாட்டத்தின் உறைந்து கிடக்கும் சாட்சி: வெறிச்சோடிய போலநாயக்கன் பாளையம்.**





படிப்பகம்

www.padippakam.com

ஆத்திரம் தணியாத சட்டப்பூர்வ ரவுடி கும்பலான போலீசு, நிதானமாகத் திட்டமிட்டு நள்ளிரவில் அரங்கேற்றியதுதான் முதலில் விவரிக்கப்பட்ட கொலைவெறியாட்டம்!

ஈரோடு மாவட்ட எல்லையில் உள்ள பாலமலையில் கள்ளச்சாராய ஆலைகள் பகிரங்கமாகச் செயல்படுகின்றன. இவற்றுக்குப் பாதுகாப்புத் தரும் இந்தப் போலீசுதான் கள் இறக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுத்ததாகவும், அதனால் போலீசு நிலையம் தாக்கப்பட்டு, போலீசாரும் தாக்கப்பட்டதாகவும் அப்பட்டமாகப் புளுகுகிறது. மிரட்டி மாமூல் பறிக்கச் சென்று, அது கிடைக்காத ஆத்திரத்தில் மிகப் பெரும் கலவரத்தை நடத்தியது போலீசுதான். இப்போது சாமியப்பனைக் கைது செய்து ஈரோடு மருத்துவமனையில் காவலில் வைத்துள்ளது. கடுமையாக காயம்பட்டுள்ள அவருக்கு மருத்துவ உதவியும் இல்லை. செய்தியாளர்கள் கூட சந்திக்க முடியாதபடி போலீசு கெடுபிடி செய்கிறது. அவர் உயிருடன் வருவாரா என அவரது சகோதரர் அழுகிறார். அ.தி.மு.க. காரருக்கே இந்த கதி!

கோவை - செல்வபுரம் பகுதியில் கடந்த ஏப்ரல் 11-ஆம் தேதியன்று இரவு குடிபோதையில் ரோந்து சுற்றக் கிளம்பிய போலீசார், ஒரு உணவு விடுதிக்குள் நுழைந்து ''ஏண்டா இன்னமும் கடையை மூடல?'' என்று தகராறு செய்ததோடு அங்கு சாப்பிட்டுக் கொண்டிருந்த விமல்குமார் என்ற இளைஞரை இரத்தம் சொட்டச் சொட்ட அடித்து விரட்டினர். அலறிக் கொண்டே ஓடிய அந்த இளைஞர் தமது பெற்றோரிடம் முறையிட, ஆத்திரமடைந்த அவர்கள் போலீசு நிலையம் சென்று ''எதற்காக எமது மகனை இப்படி அடித்தீர்கள்?'' என்று நியாயம் கேட்டனர்.

''அப்படித்தாண்டா செய்வோம்; கரை வேட்டி கட்டி இருந்தா நீ என்ன பெரிய கொம்பனா?'' என்று விமல்குமாரின் தந்தையான ராஜேந்திரனின் கழுத்தை நெறித்து எஸ்.ஐ. சுப்பிரமணி நெட்டித் தள்ளினார். தடுக்கப் போன அவனது மனைவி ஜீவாவின் தலைமுடியைப் பிடித்து இழுத்துத் தள்ளினார். ராஜேந்திரன் அ.தி.மு.க.வின் 53-வது கிளை செயலாளர்; ஆட்டோ ஓட்டுநர் சங்கத்தின் மாவட்ட செயலாளர். அவரது மனைவி ஜீவா கோவை மாநகராட்சியின் செல்வபுரம் பகுதி அ.தி.மு.க. கவுன்சிலர். ஆளும் கட்சிப் பிரமுகர் குடும்பத்துக்கே இந்த கதி என்றால், சாமானிய மக்களின் கதி என்னவாகும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

இதே ஜெயலலிதாவின் கடந்த ஆட்சியில் சின்னாம்பதி, வாச்சாத்தி, கொடியங்குளம் என போலீசாரின் கொலைவெறியாட்டத்திற்கும் காமவெறியாட்டத்திற்கும் அப்பாவி மக்கள் பலியானார்கள். வழக்கு, கோர்ட்டு, மக்களின் எதிர்ப்பு என எதற்கும் பணியாமல் கடைசிவரை போலீசைப் பாதுகாத்தது 'ஜெ' ஆட்சி. இது தவிர கொட்டடிக் கொலைகள், பாலியல் வன்முறைகள் என போலீசின் காட்டாட்சி எவ்விதக் கட்டுப்பாடுமின்றி கொடிகட்டிப் பறந்தது.

இம்முறை மீண்டும் 'ஜெ' வெற்றி பெற்றதுமே காவல் துறையில் இனிப்புகள் பரிமாறப்பட்டு 'நம்ம ஆட்சி' என போலீசு குதூகலித்தது காரணத்தோடுதான். தி.மு.க. மீதும், பத்திரிகையாளர்கள் மீதும் ஒரு சுற்று வெறியாட்டம் போட்டு 'ஜெ'வைத் திருப்திப்படுத்திய போலீசு, அடுத்ததாக மக்கள் மீது பாய்ந்து குதறியது. கடந்த ஆண்டு நவம்பரில் பஞ்சாயத்துத் தேர்தல் தகராறில் ''ஏட்டு'' முருகனின் சாவுக்குப் பழிவாங்குவதற்காக, போலீசு குண்டர்கள் தூத்துக்குடி மாவட்டம் சங்கரலிங்கபுரம் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளில் புகுந்து சூறையாடி வெறியாட்டம் போட்டனர். அடுத்தடுத்து நடந்த கள்ளச்சாராய சாவுகள், ரீட்டா மேரி விவகாரம், உள்ளாட்சித் தேர்தலில் 'ஜெ'யின் அடியாளாக அராஜக வெறியாட்டம் போட்டது - என போலீசின் யோக்கியதை அம்பலப்பட்டு நாறியது.



**சங்கரலிங்கபுரத்தில் போலீசுக்காரர் மனைவிக்கு ஆறுதல் கூறும் ஜெயா: தலித்துகளின் கண்ணீரைத் துடைப்பதாகப் பம்மாத்து.**

இந்நிலையில், கடந்த மார்ச் 30-ஆம் தேதியன்று சங்கரலிங்கபுரம் கிராமத்துக்குச் சென்ற பாசிச ஜெயா, பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோருக்கு நிவாரண உதவிகள் செய்யும் நாடகமாடினார். போலீசு அட்டூழியங்களால் அவதிப்பட்ட மக்கள் ஜெயா வருகையின்போது துயரம் தாளாமல் கதறியழுது, போலீசு வெறியர்களால் நாசமாக்கப்பட்ட பொருட்களை வழியெங்கும் அவரது பார்வைக்கு வைத்து தமது ஆறாத ரணத்தை வெளிபடுத்தினர். பாதிக்கப்பட்டோருக்கு ரூ. 5000 நிவாரணத் தொகை வழங்குவதாக அறிவித்து எட்ட நின்று பார்வையிட்ட பாசிச ஜெயா, மாண்டு போன ''ஏட்டு'' முருகனின் மனைவியைக் கட்டித் தழுவி ஆறுதல் கூறினார். இதையே 'தலித்'துகளுக்கு ஆறுதல் கூற சங்கரலிங்கபுரத்துக்கு ஜெயா சென்று வந்ததாக கூஜா பத்திரிகைகள் கதையளந்தன.

பாதிக்கப்பட்ட மக்கள் போலீசு அட்டூழியங்களைப் பட்டியலிட்டுக் குமுறிய போதிலும், போலீசு வெறியர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாக வாயளவில் கூட ஜெயா வாக்குறுதி அளிக்கவில்லை. கிரிமினல் வழக்குகளைத் தவிர, தாழ்த்தப்பட்டோர் மீது போலீசார் சோடித்த பொய் வழக்குகளை ரத்து செய்வதாக அறிவித்ததற்கு மேல் வேறெந்த நடவடிக்கையும் அவர் எடுக்கவுமில்லை. தனது விசுவாச நாயான போலீசைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்காமல், அது கடித்துக் குதறியவர்களுக்கு நிவாரணத் தொகை அளிப்பதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களை இழிவுபடுத்தியுள்ளார், பாசிச ஜெயா. இந்த அரசாங்க நாய்க்குப் பெருந்தீனி போட்டு ஊட்டி வளர்ப்பதோடு, அதை மேலும் விரிவுபடுத்தி நவீனப்படுத்த கோடி கோடியாய் பட்ஜெட்டில் வாரியிறைத்துள்ளார்.

இந்த அரசாங்க நாய், அடிப்படைத் தேவைகளுக்காகவும் உரிமைகளுக்காகவும் போராடும் மக்கள் மீது பாய்ந்து குதறுகிறது. அ.தி.மு.க. கட்சிக்காரனையே அடித்து உதைத்து வதைக்கிறது. ''பொடா'' முதலான பாசிசக் கருப்புச் சட்டங்கள், போலீசு அதிக்கிரமங்களையும் மனித உரிமை மீறல்களையும் சட்டபூர்வமாக நியாயப்படுத்தி, போராடும் மக்களை ஒடுக்குவதற்காகவே கொண்டு வரப்படுகின்றன. போலீசு நினைத்தால் எந்தவொரு குடிமகனையும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; அதை எவரும் ஏனென்று கேட்கக் கூடாது என்கிற சட்டபூர்வ பாசிசம் அரங்கேறி வருகிறது.

போலீசு துறை என்பது மக்களின் பாதுகாப்புக்கானது என்ற பசப்பல்கள் மறைந்து, போலீசிடமிருந்து மக்கள் தங்களை எப்படிப் பாதுகாத்துக் கொள்வது என்பதே இன்று முக்கியமான கேள்வியாக எழுந்துள்ளது. நானுண்டு, என் வேலையுண்டு என்று ஒதுங்கி இருந்தால்கூட, போலீசு மிருகங்கள் எவரையும் விட்டு வைக்காது என்கிற அளவுக்கு பாசிச ஜெயா ஆட்சியில் போலீசு அட்டூழியங்கள் தலைவிரித்தாடுகின்றன. இந்நிலையில் உழைக்கும் மக்கள் மானத்தோடு உயிர் வாழ வேண்டும் என்றாலே, நாட்டிலேயே மிகப் பெரிய சமூக விரோத கிரிமினல் கும்பலாக உள்ள போலீசு அமைப்பைக் கலை! அனைத்து மக்களுக்கும் ஆயுதமேந்தும் உரிமை கொடு! - எனக் கோரி போராடுவதைத் தவிர வேறென்ன வழி இருக்கிறது?

● பச்சையப்பன்


படிப்பகம்

www.padippakam.com

## தாராளமயத்தின் பத்தாண்டு கால 'சாதனை'

# மரணத்தின் விளிம்பில் மகாராஷ்டிரா

இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் முதல்நிலை வகிக்கும் மாநிலம்; பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், தொழில் நுட்பவாதிகளுடன் கரும்பு விவசாயிகள். பால் உற்பத்தியாளர்களையும் கொண்டு தொழிலும் வர்த்தகமும் பணப்பயிர் விவசாயமும் பூத்துக் குலுங்கும் மாநிலம்; இந்தியாவின் தொழிற் கொள்கையைத் தீர்மானிக்கும் தரகுப் பெரு முதலாளிகளும் வர்த்தகர்களும் நிறைந்த மாநிலம்; பிழைப்புக்காக பிற மாநிலத்தவர் பெருமளவில் குவிந்துள்ள, பணப்புழக்க மிக்க மும்பையைத் தலைநகராகக் கொண்ட மாநிலம்; புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் தனியார்மயமும், தாராளமயமும் செயல்படத் தொடங்கியதும் அது நாலுகால் பாய்ச்சலில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. — இப்படியெல்லாம் முதலாளித்துவவாதிகளாலும் 'தேசிய' பத்திரிகைகளாலும் ஏற்றிப் போற்றப்பட்ட மகாராஷ்டிரா மாநிலத்தின் இன்றைய நிலை என்ன?

தொழிலும் வர்த்தகமும் ஏற்றுமதியும் பெருகும்; வேலை வாய்ப்பு பெருகும்; உற்பத்தி பெருகி அனைத்து பொருட்களின் விலைகளும் படிப்படியாகக் குறையும்; பணப்பயிர் விவசாய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியால் அந்நியச் செலவாணி ஏராளமாகக் கிடைக்கும் என்றெல்லாம் ஆருடம் கூறப்பட்ட மகாராஷ்டிர மாநிலத்தின் இன்றைய நிலைமை என்ன?

கடந்த பத்தாண்டுகளாக மகாராஷ்டிரா மாநிலத்தில் வேலை வாய்ப்பு தேக்க நிலையை அடைந்து முடங்கி விட்டது.

தொழிற்துறை மாபெரும் சரிவை எதிர்கொண்டு அதள பாதாளத்தில் விழுந்து கொண்டிருக்கிறது. ஆலைகள் அடுத்தடுத்து மூடப்பட்டு பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வீதியில் வீசியெறியப்பட்டு வருகிறார்கள்.

மற்றெல்லா மாநிலங்களை விட மகாராஷ்டிராவில் தான் மின் கட்டணம் மிக அதிகம். கட்டணம் செலுத்தாமல் அரசு மருத்துமனைகளில் இலவச சிகிச்சை பெற முடியாது. கட்டாய - இலவச கல்வி மறுக்கப்பட்டு அரசாங்கப் பள்ளிகள் படிப்படியாக மூடப்பட்டு தனியார் கல்வி வியாபாரிகளிடம் தாரை வார்க்கப்பட்டு வருகின்றன. கடன் சுமை தாளாமல் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

மகாராஷ்டிரா மாநிலம் மரணத்தின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறது. முன்னொரு காலத்தில் வளமைமிக்க, முதல் நிலை மாநிலமாகச் சித்தரிக்கப்பட்ட மகாராஷ்டிரா இன்று மணற்கோட்டையாகச் சரிந்து கொண்டிருக்கிறது.

இன்று மகாராஷ்டிர மாநில அரசின் கடன் ரூ. 70,528 கோடி. கடந்த ஏழு ஆண்டுகளில் மட்டும் இம்மாநிலத்தின் கடன் 3 மடங்கு அதிகரித்துள்ளது. 1995-இல் இந்துவெறி சிவசேனா - பா.ஜ.க. கூட்டணி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு ஒப்பீட்டளவில் மாநிலத்தின் நிதி நிலை தற்காலிகமாக நிலையானதாக இருந்தது. அதாவது, வருவாய் பற்றாக்குறையானது ரூ.125 கோடி முதல் ரூ. 275 கோடி வரைதான் இருந்தது. ஆனால், இந்து வெறியர்களின் கூட்டணி பதவிக்கு வந்த பிறகு ரூ. 1500 கோடியிலிருந்து ரூ. 6000 கோடி வரை அதிகரித்துக் கொண்டே போனது.

1999-இல் காங்கிரசு - தேசியவாத காங்கிரசு கூட்டணி பதவிக்கு வந்தபோது மகாராஷ்டிரா மாநிலத்தின் நிதிநிலை பற்றி ஒரு "வெள்ளை அறிக்கை"யை வெளியிட்டது. மாநிலத்தின் மொத்த சொத்துக்களை விட கடன் ரூ. 3263 கோடி அதிகமாக உள்ளது என்றும் கடனுக்கான வட்டி கட்டவே மீண்டும் கடன் வாங்க வேண்டியுள்ளது என்றும் உண்மை நிலையைக் குறிப்பிட்டது. வருவாயை விட செலவுகள் 23 மடங்கு அதிகரித்து, நட்டமும் கடனும் தீவிரமாகிவிட்டதாக அந்த அறிக்கை எச்சரித்தது.

தனியார்மயமும், தாராளமயமும் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டதோடு, சிவசேனா - பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் கட்டுமான சீர்திருத்தங்கள் என்ற பெயரில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. அதாவது, தரகுப் பெருமுதலாளிகள் - பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் நலன்களுக்காக அதிவிரைவு நெடுஞ்சாலைகளை அமைத்தல், தொலை தொடர்பு, ஏற்றுமதி வர்த்தக வளையங்கள், துறைமுக விரிவாக்கம், சுற்றுலா விடுதிகள் என இத்தகைய திட்டங்களுக்கு கோடிக்கணக்கில் வாரியிறைக்கப்பட்டன. இவை தொழில் அல்லது விவசாய உற்பத்தியை விரிவுபடுத்தி மேம்படுத்துவதற்கான திட்டங்கள் அல்ல, எனவே இத்திட்டங்களால் தொழிலோ விவசாயமோ பெருகவில்லை. வேலை வாய்ப்பும் பெருகவில்லை.

மறுபுறம், இத்தகைய கட்டுமான சீர்திருத்தங்களுக்காக சிவசேனா - பா.ஜ.க. கூட்டணி அரசு கோடிக்கணக்கில் கடன் வாங்கியது. தாராளமயத்தையொட்டி, சந்தையின் வட்டி விகிதங்களுக்கு ஏற்ப, சிறுசேமிப்பு நிதியிலிருந்து மாநில அரசு பெறும் கடனுக்கான வட்டி விகிதங்களையும் மைய அரசு உயர்த்தியது. இதனால் வட்டிச் சுமை அதிகரித்து மாநில அரசு தடுமாறியது.

இது ஒருபுறமிருக்க, நிதி நிலையைச் சமாளிக்க குறுகிய கால கடன் பத்திரங்களை மாநில அரசு வெளியிட்டு மக்களிடம் நிதி திரட்டக் கிளம்பியது. மற்ற கடன் பத்திரங்களை விட கூடுதலாக வட்டி விகிதமும் அறிவித்தது. அதாவது, சாதாரணமாக 14%, 15% கூட்டு வட்டிக்குப் பதிலாக 18%, 20% அளவுக்கு வட்டி தருவதாக அறிவித்தது. குறிப்பாக, கிருஷ்ணா பள்ளத்



மும்பய் நகருக்குக் குடிநீர் விநியோகிக்கும் பெரும் குழாய்கள் செல்லும் பாதை நெடுகிலும் பெருகி வரும் ஏழைகளின் குடிசைகள்.


படிப்பகம்

www.padippakam.com

தாக்கு வளர்ச்சி திட்டத்துக்கான கடன் பத்திரங்கள் கவர்ச்சிகரமான கூடுதல் வட்டியுடன் வெளியிடப்பட்டது. இதன் விளைவாக கிருஷ்ணா பள்ளத்தாக்கு வளர்ச்சிக்கான திட்டச் செலவு கூடுதலாக ரூ. 5000 கோடிக்கு அதிகரித்து மாநில அரசு தத்தளித்தது. கடைசியில் திட்டமும் நிறைவேறாமல், கடன் பத்திரங்களை வாங்கியவர்களுக்குக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் மாநில அரசு தடுமாறியது.

எல்லாவற்றுக்கும் மேலாக, ''என்ரான்'' மோசடி தனியார் மின்திட்டத்தால் மாநில அரசு ரூ. 2000 கோடிக்கும் மேலாகப் பறிகொடுத்தது. மாநில மின்சார வாரியம் மிக அதிக விலை கொடுத்து என்ரான் நிறுவனத்திடமிருந்து மின்சாரத்தை கட்டாயமாக வாங்க வேண்டிய நிர்பந்தத்தால், பெருத்த நட்டமடைந்து திவாலாகியது. என்ரான் மோசடிகள் - பகற்கொள்ளை பற்றிய முழுமையான தகவல்கள் வெளிவராத நிலையில் அடுத்த பத்தாண்டுகளில் மொத்த இழப்பு ஏறத்தாழ 50,000 கோடிகளுக்கு மேலாக இருக்கும் என மின்வாரியத் தொழிற்சங்கத் தலைவர்கள் கூறுகின்றனர்.

தனியார்மய - தாராளமயத்தால் ஏற்பட்ட பேரிழப்புகளின் சுமைகள் அனைத்தும் உழைக்கும் மக்கள் மீது திணிக்கப்பட்டது. பல்வேறு சமூக நலத்திட்டங்கள் நிதியில்லை என்ற காரணம் காட்டி கைவிடப்பட்டன; அல்லது மானியங்கள் குறைக்கப்பட்டன. அதாவது, முன்பு அரசு மருத்துவமனைகளில் இலவச சிகிச்சை என்பது போய், இப்போது கட்டணம் செலுத்தினால் தான் உள்ளே நுழைய முடியும். இதன் விளைவாக கடந்த பத்தாண்டுகளில் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற வரும் உள்நோயாளிகளுக்கு 3 மடங்கு செலவு அதிகரித்துள்ளது. புற நோயாளிகளுக்கு 2 மடங்கு செலவு கூடியுள்ளது. கல்விக்கான மானியங்கள் குறைக்கப்பட்டதால், ஆரம்பப் பள்ளிகளில்கூட கட்டணம் வசூலிக்கப்பட்டது. ஆசிரியர்களுக்கான சம்பளம் முறையாக உரிய தேதியில் வழங்கப்படாமல், நிதியில்லை என்று காரணம் காட்டி தாமதமாகவும் அரைகுறையாகவும் வழங்கப்பட்டது.

மறுபுறம், விவசாய இடுபொருள் செலவுகள் இரு மடங்குக்கு மேலாக உயர்ந்து விட்டன. கடந்த ஐந்தாண்டுகளில் விவசாயத்துக்கான மின் கட்டணம் 3 மடங்கு உயர்ந்து விட்டது. கரும்பு, பருத்தி விவசாயிகளுக்கு அரசு கொள்முதல் நிலையங்களில் ஏறத்தாழ 500 கோடிக்கு மேல் பாக்கி வைக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் கடன் சுமையால் தத்தளிக்கிறார்கள்.

கிராமப்புற கூலி - ஏழை விவசாயிகள் பட்டினி கிடந்து பரிதவிக்காமல் ஒரு வேளை கஞ்சியாவது குடிப்பதற்காக அரசாங்கத்தால் முன்பு செயல்படுத்தப்பட்ட வேலை உத்திரவாதத் திட்டம், தனியார்மயம் - தாராளமயம் நடைமுறைப்படுத்தப்பட்டதிலிருந்து இன்றுவரை செயல்படவேயில்லை. அரசாங்கத்திடமிருந்து இதற்கான நிதி வரவில்லை என்று கூறி மாவட்ட நிர்வாகங்கள் கையை விரிக்கின்றன. அரசு மருத்துவமனைகள் - மருந்தக காப்பகங்களில் மருந்து - மாத்திரைகள் இருப்பில் இல்லை. அரசாங்கம் மருந்து - மாத்திரை உற்பத்தியைப் படிப்படியாக குறைத்ததன் விளைவாக மருந்துகள் சேமிக்கப்படுவதும் பாதுகாக்கப்படுவதும் கைவிடப்பட்டு விட்டது.



**ஆலையருகே ஒரு வாரத்துக்கு மேலாகக் காத்திருந்து கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குள் செல்லும் விவசாயிகளின் கரும்பு வண்டிகள்.**

இந்நிலையில், இந்துவெறி சிவசேனா - பா.ஜ.க. கூட்டணியைத் தேர்தலில் வீழ்த்தி காங்கிரசு - தேசிய வாத காங்கிரசு கூட்டணி ஆட்சிக்கு வந்தது. தனியார்மயம் - தாராளமயத்தை இன்னும் தீவிரமாகச் செயல்படுத்தக் கிளம்பிய அக்கூட்டணி ஆட்சியாளர்கள், அரசு செலவுகளைக் குறைப்பது - சிக்கன சீரமைப்பு என்ற பெயரில் மீண்டும் மக்கள் தலையில் சுமைகளைத் திணித்தனர். மருத்துவம், நீர்ப்பாசனம், மின்சாரம், கால்நடை வளர்ப்பு, கல்வி, பேருந்து, குடிநீர் முதலான அனைத்திற்கும் மீண்டும் கட்டணம் உயர்த்தப்பட்டது. 8300 அரசு ஊழியர்கள் தேவைக்கு அதிகமாக உள்ளதாகக் கூறி வீட்டுக்கு விரட்டப்பட்டனர். நிதியில்லை என்று காரணம் காட்டி பஞ்சப்படி, போனசு, மருத்துவ விடுப்பு ஈட்டுத் தொகை முதலான அனைத்தும் முடக்கப்பட்டதால், இரண்டு இலட்சத்துக்கும் மேலான கீழ்நிலை அரசு ஊழியர்களும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டனர்.

அரசு பள்ளிகளில் கல்விக் கட்டணம் உயர்த்தப்பட்டதன் விளைவாக 1996-இல் 7 இலட்சமாக இருந்த ஆரம்பப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை 2001-இல் 5.5 இலட்சமாக சுருங்கி விட்டது. மேலும் ஏழை - தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான உதவித் தொகையில் 60%-க்கு மேல் குறைக்கப்பட்டு விடுதிக் கட்டணமும் உயர்த்தப்பட்டதால் கல்லூரிகளில் பட்டப் படிப்பு படிக்கும் ஏழை மாணவர்களின் விகிதமும் குறைந்து விட்டது. மாநிலத்தின் மொத்த வருவாயில் கல்விக்காக 6% அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்த நிலைமைபோய், 3% அளவுக்கு குறைக்கப்


## பாதாளத்தை நோக்கிப் பாயும் பஞ்சாப்

**பசுமைப் புரட்சியின் தாயகம், இந்தியாவின் கோதுமைக் களஞ்சியம் என்றெல்லாம் சிறப்பிக்கப்படும் பஞ்சாப் மாநிலத்தின் இன்றைய கடன் ரூ. 27,830 கோடி. 1991-92இல் அதன் கடன் சுமை ரூ. 7,904 ஆகத்தான் இருந்தது. தனியார்மயமும் தாராளமயமும் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்ட இப்பத்தாண்டுகளில் அதன் கடன் ஏறத்தாழ 4 மடங்கு அதிகரித்து விட்டது.**

**1997-இல் சிரோமணி அகாலிதளம் - பாரதீய ஜனதா கூட்டணி ஆட்சி பதவிக்கு வந்ததும் பெரு முதலாளிகளுக்கும் வர்த்தக சூதாடிகளுக்கும் ஆண்டுக்கு ரூ. 500 கோடி அளவுக்கு விற்பனை வரிச் சலுகையை வாரி வழங்கியது. படிண்டா எண்ணெய் சுத்திகரிப்பு தனியார் ஆலைக்கு ஆண்டுக்கு ரூ. 1000 கோடி அளவுக்கு வரி விலக்கு அளித்தது. பெரு நிலப்பிரபுக்கள் - பணக்கார விவசாயிகளின் ஆழ்குழாய் கிணறுகளுக்கு ஆண்டுக்கு ரூ. 2000 கோடி என இலவச மின்சாரம் வழங்கியது. இத்தகைய நடவடிக்கைகளால் மாநிலத்தின் வளர்ச்சி நாலுகால் பாய்ச்சலில் முன்னேறும் என்று கதையளந்தார்கள். ஆனால் விளைந்த கோதுமைக்கு உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் கடன் சுமை தாளாமல் தத்தளிக்கிறார்கள். சிறு தொழில் கூடங்கள் நசிவடைந்து மூடிக் கிடப்பதால், தொழிலாளர்கள் வேலையின்றிப் பரிதவிக்கிறார்கள். மாநிலத்தின் வளர்ச்சி எதிர்திசையில் சரிந்து, மரணத்தின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறது.**

**விவசாயத் துறையில் முன்னேறிய - வளமிக்க பஞ்சாப் மாநிலத்தின் கதியே இப்படியென்றால், பின்தங்கிய இதர மாநிலங்களின் கதி என்னவாகும்?**


படிப்பகம்



**பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் நலன்களுக்காக பல கோடியில் அமைக்கப்பட்ட மும்பய் - புனே அதிவிரைவு நெடுஞ்சாலை: வளர்ச்சிப் பாதையா? கடன் சுமையா?**

பட்டு இன்று மேலும் சுருங்கிக் கொண்டே போகிறது.

1987 முதல் 1993 முடிய மகாராஷ்டிராவின் நகர்ப்புற வேலை வாய்ப்பு வளர்ச்சி விகிதம் 3.39% ஆக இருந்தது. ஆனால் இது 1993 முதல் 2000 வரையிலான தனியார்மய - தாராளமயக் கொள்கை செயல்படுத்தப்பட்ட காலத்தில் 2.25% ஆக வீழ்ச்சியடைந்துவிட்டது குறிப்பாக, மும்பை நகரில் மட்டும் கடந்த பத்தாண்டுகளில் ஏறத்தாழ 5 இலட்சம் பேர் வேலையிழந்துள்ளனர்.

நகர்ப்புறத்திலேயே இந்த நிலைமை என்றால், கிராமப்புற வேலையின்மை பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஏற்கனவே விலை வீழ்ச்சியாலும், அரசு கொள்முதல் நிலையங்கள் மூடப்பட்டதாலும் பருத்தி விவசாயிகள் பெருத்த நட்டமடைந்து திவாலாகி நிற்கிறார்கள். சர்க்கரை உற்பத்தி பெருகி கிடங்குகள் நிரம்பி வழிவதால், கரும்புக்கும் உரிய விலை கிடைப்பதில்லை. கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கு ரூ. 400 கோடிக்கு மேல் பாக்கி வைத்துள்ளதால், திவாலான விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதும் பெருகி வருகிறது. மறுபுறம், கரும்பு வெட்டும் கூலி விவசாயிகளுக்கும் வேலை இல்லை. கூட்டுறவு ஆலை அதிபர்கள் அரசாங்க மானியத்தில், ஆஸ்திரேலியாவிலிருந்து ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் மதிப்புடைய அதிநவீன வெட்டு இயந்திரங்களை இறக்குமதி செய்து, கூலி விவசாயிகளின் வாழ்வைப் பறித்து வருகின்றனர். மகாராஷ்டிராவின் பின்தங்கிய மரத்வாடா பிராந்தியத்திலிருந்தும், பீகாரிலிருந்தும் குடும்பம் குடும்பமாக வந்து தங்கி, கரும்பு வெட்டும் வேலை செய்து பிழைத்து வந்த ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் இன்று வேலையிழந்து வாழ்விழந்து நிற்கின்றனர்.

பருத்தி, கரும்புக்கு அடுத்த மூன்றாவது பெரிய விவசாயத்துறை, பால் உற்பத்தியாகும். தனியார் - அந்நிய பெருமுதலாளித்துவ நிறுவனங்களின் இலாப வேட்டைக்காக, மகாராஷ்டிரா ஆட்சியாளர்கள் நட்டக் கணக்கு காட்டி கூட்டுறவு சங்கங்கள் மூலம் பால் கொள்முதல் செய்வதைப் படிப்படியாகக் குறைத்தனர். அன்றாடம் 142 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வந்த நிலைமை போய், இன்று வெறும் 40 லட்சம் லிட்டர் பாலை மட்டுமே அரசு கொள்முதல் செய்கிறது. இதனால் விவசாயிகள் தனியார் பால் நிறுவனங்களிடம் மிகக் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிர்பந்தத்துக்குத் தள்ளப்பட்டு போண்டியாகி விட்டார்கள். பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஏறத்தாழ 75 இலட்சம் விவசாயிகள் இதனால் பாதிக்கப்பட்டு கடன் சுமையால் தத்தளிக்கிறார்கள்.

மொத்தத்தில் தனியார்மயம் - தாராளமயத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தியதன் கோரமான விளைவுகள் இப்படியிருக்கும் போது, இரண்டாம் கட்ட சீர்திருத்தம் என்ற பெயரில் அதையே தீவிரமாகச் செயல்படுத்த ஆட்சியாளர்கள் கிளம்பியுள்ளார்கள். ஆனாலும் மகாராஷ்டிராவின் வளர்ச்சி விகிதம் 4.6% அளவுக்குத்தான் உள்ளது என்று உலக வங்கியின் குழு மதிப்பிட்டுள்ளது. இது, பின்தங்கிய ராஜஸ்தான் மாநிலத்தின் வளர்ச்சி விகிதத்தைவிட மிகக் குறைவானதாகும்.

தனியார்மயமும், தாராளமயமும் நடைமுறைப்படுத்தப்பட்ட போது ஏற்பட்ட பேரிழப்புகளை, தற்காலிகமானவை என்றும் வளர்ச்சிக்கான கசப்பு மருந்து என்றும் ஆட்சியாளர்களும் பத்திரிகைகளும் நியாயப்படுத்தினார்கள். இன்று அவர்களாலேயே நியாயப்படுத்த முடியாத அளவுக்கு நிலைமை விபரீதமாகி விட்டது. முன்னேறிய, தொழில் வளர்ச்சிமிக்க மகாராஷ்டிரா மாநிலமே படுகுழியை நோக்கிப் பாய்ந்து கொண்டிருக்கிறது என்றால், இதர மாநிலங்களின் நிலைமை என்னவாகும் என்பதைச் சொல்லத்தான் வேண்டுமா?

● பாலன்

# கோலாரைக் குலுக்கிய இரயில் மறியல் போராட்டம்

கர்நாடகாவிலுள்ள கோலார் தங்க வயலில் வேலை வாய்ப்புக்கான அனைத்து கதவுகளும் அடைக்கப்பட்டு விட்டதால் இங்கு வசிக்கக்கூடிய பெரும்பாலான தொழிலாளர்கள் தினமும் இரயிலில் பெங்களூர் சென்று கிடைத்த வேலையைச் செய்து வருகின்றனர். இந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருகப் பெருக இரயிலில் நெரிசல் அதிகமானதால் சென்ற ஆண்டு கோலார் - பெங்களூர் இரயிலில் கூடுதலாக 2 பெட்டி இணைக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் அறிவிக்கப்பட்ட இரயில்வே பட்ஜெட்டுக்குப் பிறகு, பயணக் கட்டணத்தை ஒரே சமயத்தில் 80 ரூபாய் ஏற்றியதன் மூலம் உழைக்கும் மக்களின் தலையில் முதல் இடி இறங்கியது. அதனைத் தொடர்ந்து, ஏற்கனவே இயங்கிக் கொண்டிருந்த இரயிலில் 3 பெட்டிகளையும் குறைத்து விட்டது இரயில்வே நிர்வாகம். ஏற்கனவே நெரிசலில் சிக்கி பயணம் செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் இதனால் படிகளில் தொங்கிய வண்ணம் பயணித்து விபத்துக்குள்ளாவதும் மரணமடைவதும் அதிகரித்தது.

இந்நிலை கண்டு கோபமுற்ற தொழிலாளர்கள் - பொது மக்கள் இணைந்து கடந்த 10.4.02 அன்று மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் ஆதரவோடு பெங்களூர் - சென்னை லால்பாக் விரைவு இரயில் முன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தினை மிரட்டி கலைத்துவிட நினைத்தது போலீசு. அப்போதும் முன்னணியில் இருந்த தோழர்களின் உறுதியைக் கண்ட அதிகாரிகள் உடனடியாக துண்டித்த 3 பெட்டிகளை இணைப்பதாக உறுதி கொடுத்துள்ளனர். இதனால், தற்காலிகமாக போராட்டத்தை நிறுத்திக் கொண்ட மக்கள், கோரிக்கை நிறைவேற்றபடாமற் போனால் போராட்டம் தொடரும் என எச்சரித்துள்ளனர்.

இலாபமில்லை என்று பல வழித்தடங்களில் போக்குவரத்தை நிறுத்தியும், சிறு நகரங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள சரக்கு போக்குவரத்து வசதிகளை நீக்கியும் சேவையைக் குறைத்துக் கொண்டுள்ள இரயில்வே நிர்வாகம், இன்னொருபுறம் கட்டண உயர்வைக் காட்டியும் உழைக்கும் மக்களை அச்சுறுத்தி வருகிறது. இதற்கெதிராக போராடாமல் அமைதியாக இருந்தால் இருக்கும் உரிமைகளையும் இழக்கவே நேருமென்பதற்கு இப்போராட்டம் ஒரு சான்று.

— ம.க.இ.க., கோலார் தங்கவயல்.

# முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.

''இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி (மார்க்சிஸ்ட்) சோசலிசத்தையும் கம்யூனிசத்தையும் கட்டியமைக்கும் குறிக்கோளை உறுதியாகப் பற்றி நிற்கிறது. தற்போதைய அரசு மற்றும் பெருமுதலாளிகளால் தலைமை தாங்கப்படும் முதலாளி - நிலப்பிரபு அரசாங்கத்தின் கீழ் இதைச் சாதிக்க முடியாது என்பது வெளிப்படை. ஒரு உண்மையான சோசலிச சமுதாயம் என்பது பாட்டாளி வர்க்க அரசு முறையின் கீழ் மட்டுமே சாத்தியம். நமது நாட்டில் சோசலிசத்தைக் கட்டியமைக்கும் குறிக்கோளைப் பற்றியொழுகும் அதேசமயம், நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதத்தையும் பாட்டாளி வர்க்கம் மற்றும் அதன் அமைப்பின் அரசியல், சித்தாந்த முதிர்ச்சியையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு ஒரு உறுதியான தொழிலாளர் - விவசாயி கூட்டை அடிப்படையாக வைத்து, பாட்டாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்படும் அனைத்து உண்மையான நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஏகபோக எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளையும் உள்ளடக்கிய கூட்டணியைக் கொண்ட மக்கள் ஜனநாயகத்தை நிறுவுவதே உடனடிக் குறிக்கோளாக இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) மக்கள் முன் வைக்கிறது. **இது தற்போதைய முதலாளி - நிலப்பிரபு அரசை மாற்றி ஒரு மக்கள் ஜனநாயக அரசை வைப்பதை** எல்லாவற்றுக்கும் மேலாக முதன்மையாகக் கோருகிறது. இதுமட்டுமே, இந்தியப் புரட்சியின் நிறைவுறாத ஜனநாயகப் பணியை முழுமைபெறச் செய்து நாட்டை சோசலிசத்துக்கான பாதையில் வைப்பதற்கு வழி வகுக்கும்.''

சி.பி.(எம்) கட்சியின் 2000 ஆம் ஆண்டு மேம்படுத்தப்பட்ட திட்டம் மேற்கண்டவாறு கூறுகிறது. சோசலிசம் மற்றும் கம்யூனிசம் ஆகியவற்றைக் கட்டியமைக்கும் குறிக்கோளை உறுதியாகப் பற்றி நிற்கும் அதேசமயம், மக்கள் ஜனநாயகத்தை நிறுவுவது தனது உடனடிக் குறிக்கோள் என்று சி.பி.(எம்) கட்சி கூறிக் கொள்கிறது. ஆனால், இக்குறிக்கோளை அடைவதற்கு அக்கட்சி வகுத்துக் கொண்டுள்ள வழிமுறைகளும் அது பின்பற்றும் நடைமுறைகளும் அது ஒரு போலி கம்யூனிஸ்டுக் கட்சிதான் என்பதை வெளிப்படுத்தி விடுகிறது.

''இந்தியப் புரட்சியின் அடிப்படைக் கடமைகளைக் கொஞ்சமும் விட்டு வைக்காமல் முற்றும் முழுவதுமாக நிறைவேற்ற வேண்டுமானால், **பெரு முதலாளிகளால் தலைமைதாங்கப்படும் தற்போதைய முதலாளி - நிலப்பிரபு அரசை மாற்றி அதனிடத்தில் பாட்டாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்படும் ஒரு மக்கள் ஜனநாயக அரசை வைப்பது** தற்போதைய கட்டத்தில் முழுக்கவும் இன்றியமையாததாகும்'' என்று சி.பி.(எம்) திட்டம் கூறுகிறது.

இதை நன்றாகக் கவனிக்கவும். **தற்போதைய அரசைத் தகர்த்துவிட்டு,** பாட்டாளிவர்க்கத் **தலைமையிலான ஒரு புதிய மக்கள் ஜனநாயக அரசை நிறுவப் போவதாக சி.பி.(எம்) கட்சி கூறவில்லை.**

1960-களின் பிற்பாதியில் இந்த சி.பி.(எம்) கட்சிக்கும் அதன் தாய்க் கட்சியான சி.பி.(ஐ)க்கும் காரசாரமான சித்தாந்த வாதங்கள் நடந்தன. தான் ஒரு புரட்சிக் கட்சி போலவும், சி.பி.(ஐ) கட்சி மட்டுமே திருத்தல்வாதப் போலிக் கம்யூனிஸ்டு கட்சி என்றும் காட்டுவதற்காகப் பின்வரும் வாதங்களை சி.பி.(எம்) கட்சி அடுக்கியது.

''அரசின் தோற்றம் மற்றும் அதன் பரிணாம வளர்ச்சி, சோசலிசப் புரட்சி சகாப்தத்தில் அதன் தற்போதைய மற்றும் எதிர்காலநிலை ஆகியவை பற்றிய அறிவியல் ஆய்வை அடிப்படையாகக் கொண்டு சோசலிசத்துக்கு மாறிச் செல்லும் வடிவங்கள் பற்றிய பரிசீலனையை மார்க்சிசம் - லெனினிசம் தொடர்கிறது.''

''மார்க்சிசம் - லெனினிசத்தின்படி அரசு என்பது என்ன? சுருங்கக் கூறின், ''அரசு என்பது ஒரு தனிச் சிறப்பான வன்முறை அமைப்பு; சில வர்க்கங்களை அடக்கி ஒடுக்குவதற்கான ஒரு வன்முறை நிறுவனம். முதலாளித்துவ அரசுகள், அவற்றின் வடிவத்தில் மாறுபடலாம், ஆனால் அவற்றின் சாரம் ஒன்றுதான். அதாவது இறுதி ஆய்வில் முதலாளித்துவ சர்வாதிகாரம் என்பதைத் தவிர வேறில்லை. அதேபோல, பாட்டாளி வர்க்க அரசுகள் பல்வேறுபட்ட வடிவங்களை மேற்கொள்ளலாம். ஆனால், அவற்றின் சாரம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பதைத் தவிர வேறில்லை.'' [சி.பி.(எம்) வெளியீடு, சித்தாந்தப் பிரச்சினைகள் மீதான நிலைப்பாடு, பக்.22]

''அரசு'' என்றால் என்னவென்று இவ்வளவு கறாராக வரையறுக்கும் சி.பி.(எம்) கட்சி தனது பழைய - மேம்படுத்தப்பட்ட கட்சித் திட்டங்களில் எங்கேயுமே இதைப் பிரயோகிக்கவில்லை. **சி.பி.(எம்) கணிப்பின்படியான இந்திய அரசை பெருமுதலாளிகள் தலைமை தாங்கும் முதலாளி - நிலப்பிரபு சர்வாதிகார அரசு என்று அது வரையறுக்கவில்லை. அதேபோல,**

**உ.பி.யில் மதச்சார்பற்ற கூட்டணி அரசை நிறுவ முலயம் சிங் - சோனியாவுக்கிடையே தரகு வேலை செய்யும் போலி கம்யூனிஸ்டு தலைவர்கள்.**



www.padippakam.com

**அக்கட்சி நிறுவப்போவதாகக் கூறும் அரசு, பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்கும் ஒரு மக்கள் ஜனநாயக சர்வாதிகார அரசாக இருக்கும் என்றும் வகுத்துக் கொள்ளவில்லை.**

சி.பி.(எம்) கட்சி ஏன் அப்படிச் செய்யவில்லை. தற்செயலாகவா? திட்டமிட்டு அவ்வாறு செய்யவில்லையா? அறிநதே, திட்டமிட்டேதான் சி.பி.(எம்) கட்சி ''அரசு'' பற்றிய தனது விளக்கத்தை பிரயோகிக்கவில்லை. அப்படி செய்வதன் விளைவாக என்ன செய்ய வேண்டிவரும் என்பதை அக்கட்சி அறிந்தே இருக்கிறது.

''அரசு'' பற்றிய தனது விளக்கத்தைத் தொடர்ந்து, ''இக்கண்ணோட்டத்தின்படி அரசியல் அதிகாரத்துக்கும் சமூக விடுதலைக்குமான அதன் போராட்டத்தில், அதன் வளர்ச்சிப் போக்கின் ஒவ்வொரு கட்டத்திலும் நவீனப் பாட்டாளி வர்க்கம், முதலாளித்துவ அரசை அதாவது, பாட்டாளி வர்க்கத்தை அடக்கி ஒடுக்குவதற்கான ஒரு தனிச் சிறப்பான நிறுவனத்தை எதிர்த்து மோதுவது தவிர்க்க முடியாதது என்பது அறிவியல்பூர்வமாக மறுக்கமுடியாதவாறு நிறுவப்பட்டு விட்டது. இவ்வாறு, மனிதர்களைப் பொருத்தவரை எல்லா வன்முறைக்கும் முடிவு கட்டுவது என்கிற நோக்கில் இந்த முதலாளித்துவ வன்முறையை எவ்வாறு எதிர்கொள்வது என்கிற பிரச்சினை சோசலிசப் புரட்சியின் கேந்திரமான பிரச்சினைகளில் ஒன்றாகும்.'' [மேற்படி சி.பி.(எம்) வெளியீடு பக்: 22-23]

ஆக, அரசு என்பது எந்த வடிவத்தில் இருந்தாலும் அது எவ்வளவு ஜனநாயகபூர்வமாக இருந்தாலும் ஆளும் வர்க்கம் / ஆளும் வர்க்கங்களின் சர்வாதிகார அரசுதான். ஆளும் வர்க்கம் / ஆளும் வர்க்கங்கள் ஆளப்படும் வர்க்கங்களை அடக்கி ஒடுக்கும் ஒரு வன்முறை நிறுவனம்தான். அரசியல் அதிகாரத்துக்கும் சமூக விடுதலைக்குமான போராட்டத்தில் ஈடுபடும் பாட்டாளி வர்க்கம் அதன் ஒவ்வொரு கட்டத்திலும் முதலாளித்துவ அரசை அதாவது தன்னை அடக்கி ஒடுக்கும் தனிச்சிறப்பான வன்முறை நிறுவனத்தை எதிர்த்து மோதுவது தவிர்க்க முடியாதது. இது சி.பி.(எம்) கட்சிக்கு நன்றாகவே தெரியும்.

இந்த உண்மையை நன்கு அறிந்த ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளி வர்க்கப் புரட்சி வன்முறையைக் கொண்டு, முதலாளி வர்க்க சர்வாதிகார அரசின் எதிர்ப்புரட்சி வன்முறையை முறியடிப்பதற்கான திட்டம் வகுத்துச் செயல்பட வேண்டும். ஆனால், போலி கம்யூனிஸ்ட் கட்சியாகிய சி.பி.(எம்). கட்சி, மேற்படிப் புரட்சிப் பாதைக்கு மாறாக சமரச சரணடைவு சீர்திருத்தவாதப் பாதையை வகுத்துக் கொண்டு மக்கள் ஜனநாயக அரசை நிறுவும் குறிக்கோளை அடையப் போவதாகப் பம்மாத்து செய்கிறது.

தற்போதைய முதலாளி - நிலப்பிரபு சர்வாதிகார அரசின் ஒரு முக்கிய வடிவமாகிய நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கட்டிக் காக்கும் கடமையை சிரமேற்கொண்டுள்ளது சி.பி.(எம்) கட்சி. நாடாளுமன்ற முறையின் சீரழிவுகளை அம்பலப்படுத்தி அதற்கு எதிராகவும் மாற்றாகவும் புரட்சிகரமான அரசியல் அமைப்புமுறையை முன்வைத்துப் போராடுவதற்கு பதில், அச்சீரழிவுகளுக்காக வருந்தி உருகுகிறது சி.பி.(எம்) கட்சி.

''பொது வாழ்வில் பதவி வகிப்பவர்கள், உயர்மட்ட அதிகார வர்க்கத்தினர், முதலாளிய அரசியல்வாதிகள் ஆகியோர் சட்டத்தை சீர்குலைக்கவும் பொதுச் சொத்தைக் கொள்ளையிடவும் கூடிய ஒரு ஊழல்மிகு கூட்டின் அங்கமாகி உள்ளனர். இது ஜனநாயகத்தையும் மக்கள் உரிமைகளையும் கேலிக்கூத்தாக்குகிறது. தேர்தல்களில் பண ஆதிக்கம், அரசியல் கிரிமினல்மயமாவது, வாக்குச் சாவடிகளில் தில்லுமுல்லு, அடாவடி செய்து கைப்பற்றிக் கொள்வது ஆகியவற்றின் பெருமளவிலான வளர்ச்சி, நாடாளுமன்ற ஜனநாயக அமைப்புக்குப் பாரிய அச்சுறுத்தலாக அமைகிறது'' என்று கண்ணீர் வடிக்கிறது சி.பி.(எம்) கட்சி. [சி.பி.(எம்) கட்சித் திட்டம் பக்: 29, பாரா: 5:2]

> ***புரட்சியின் மூலம் தற்போதைய அரசு எந்திரத்தைத் தகர்த்து ஒரு புதிய மக்கள் ஜனநாயக அரசை நிறுவுவது சி.பி.(எம்) கட்சியின் புரட்சிகர வழிமுறையாக இல்லை. சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்கள் மூலம் மாநில - மத்திய அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றுவதையே சி.பி.(எம்) கட்சி தனது திட்டமாகக் கொண்டுள்ளது.***

அதைத் தொடர்ந்து, முதலாளிய வர்க்க நலனுக்கான நாடாளுமன்ற அமைப்பு முறையை உழைக்கும் மக்களுக்கானதென்று சித்தரிக்கிறது. ''எனினும் வயது வந்தோர் அனைவருக்குமான வாக்குரிமை, நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப் பேரவைகள் ஆகியவை ஜனநாயகத்துக்கான மக்கள் போராட்டத்திலும், அவர்களுடைய நலன்களைக் காப்பதிலும் மக்களின் கருவியாக சேவை செய்ய முடியும். உள்நாட்டு அவசரநிலை போன்று நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீது தாக்குதல்கள் நடக்கும்போது அம்மாதிரியான அதிகாரத்துவ நடவடிக்கைகளை மக்கள் எதிர்த்திருக்கிறார்கள். முதலாளித்துவ வர்க்கத்தின் வர்க்க ஆட்சிக்கான ஒரு வடிவமாக இருப்பினும், இந்தியாவின் தற்போதைய நாடாளுமன்ற ஆட்சிமுறை மக்களுக்கான ஒரு முன்னேற்றத்தையும் கூட உள்ளடக்கியிருக்கிறது. மக்கள் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் ஒரு குறிப்பிட்ட அளவு அரசின் விவகாரங்களில் தலையீடு செய்யவும் ஜனநாயகம் மற்றும் சமூக முன்னேற்றத்துக்கான போராட்டத்தை முன்னெடுப்பதில் மக்களை அணிதிரட்டவும் சில வாய்ப்புகளை அது தருகிறது.''

முதலாளித்துவத்தின் கீழ் நாடாளுமன்ற அராஜகம் என்பது தவிர்க்க முடியாதது; குறிப்பாக பல்வேறு சாதி, மத, இன, மொழி, பிராந்திய நலன்களைக் கொண்ட இந்தியா போன்ற நாடுகளில் நாடாளுமன்ற அராஜகம் தலைவிரித்தாடுவது இயல்புதான். மேலும் முதலாளித்துவத்தின் கீழ் அரசு என்பது தனிவகை சாதியாக வளர்க்கப்படுகிறது. ஆளும் வர்க்கங்களின் பல்வேறு பிரிவுகளும் அரசு அமைப்பின் பலன்களைக் கைப்பற்றிக் கொள்வதற்காக நடத்தும் நாய்ச் சண்டையின் காரணமாக தனிவகை சாதியான அரசு எந்திரம் ஊதிப் பெருக்கப்படுவதும், அராஜகமும் அதிகரித்துக் கொண்டே போகும். நாடாளுமன்ற ஜனநாயக முறை இப்போக்கை விரைவுபடுத்தவே செய்கிறது. ஆளும் வர்க்கங்களுக்கான அரசியல் நெருக்கடி முற்றமுற்ற, நாடாளுமன்ற ஜனநாயகம், தேர்ந்தெடுக்கப்படும் அதிபர் ஆட்சிமுறை போன்ற ஜனநாயக முகத்திரைகளைக் கிழித்துக் கொண்டு அப்பட்டமான அதிகாரவெறி பிடித்த ஆட்சிமுறைகளை நிறுவிக் கொண்டு ஆளும் வர்க்கங்கள் தமது ஆதிக்கத்தைத் தக்கவைத்துக் கொள்ள முயலுகின்றன. இராணுவ சர்வாதிகாரம், பாசிசம், நாசிசம் போன்றவை அத்தகைய வடிவங்களில் சில. இத்தகைய போக்கின் மூலம் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் தாக்கித் தகர்க்க வேண்டிய தனிப்பெரும் எதிரி சக்தியாக ஆளும் வர்க்க சர்வாதிகார அரசு அமைப்பு தன்னை முன்நிறுத்திக் கொள்கிறது.

பாட்டாளிவர்க்கத்தின் முன்னணிப் படையாகிய உண்மையான கம்யூனிஸ்டுக் கட்சியின் கடமை, இத்தகைய சந்தர்ப்பத்திற்காக காத்திருப்பதும், தக்க சந்தர்ப்பம் வாய்க்கும்போது புரட்சிகர வன்முறைத் தாக்குதல் தொடுப்பதும்தான். ஆனால் போலி கம்யூனிஸ்டு சி.பி.(எம்) கட்சியோ ஆளும் வர்க்கங்கள் தமது ஜனநாயக முகத்திரையைத் தாமே கிழித்துக் கொள்ளும் வகையில் அரசியல் நெருக்கடிகள் முற்றுவதைத் தடுப்பது, தகர்ப்பது என்கிற புனித



படிப்பகம்

www.padippakam.com

மான கடமையை மேற்கொண்டுள்ளது. இதற்கு, நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு - பாட்டாளி வர்க்க நலன்களைப் பாதுகாத்துக் கொள்வது. அரசு விவகாரங்களில் தலையீடு செய்வது, ஜனநாயகம் மற்றும் சமூக முன்னேற்றத்துக்கான போராட்டத்தை முன் தள்ளுவது ஆகியவற்றுக்கான வாய்ப்புகளைத் தருகிறது என்று காரணம் கூறுகிறது. நாடாளுமன்ற ஜனநாயகம் மட்டுமல்ல; அப்பட்டமான பாசிச ஆட்சி முறையிலும் கூட உழைக்கும் மக்களுக்கு சில்லரை சீர்திருத்தங்களுக்கான வாய்ப்புகள் தரப்படுகிறது. இந்திராவின் அவசரநிலை ஆட்சிக் காலத்தில் 20 அம்சத் திட்டம் என்கிற பெயரில் சலுகைகள் அறிவிக்கப்பட்டு ஏமாற்றப்படவில்லையா? இந்த சலுகைகளைக் காட்டி சி.பி.ஐ. கட்சி இந்திராவின் பாசிச ஆட்சியை ஆதரிக்கவில்லையா?

அதேபோல, நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையைப் பாதுகாத்து, ஆளும் வர்க்கங்களின் அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காணுவது பாட்டாளி வர்க்கத்தின் கடமையென்று திட்டம் வகுத்துக் கொண்டு சி.பி.(எம்) கட்சி செயல்படுகிறது.

''உழைக்கும் மக்கள் மற்றும் அவர்களின் நலன்களை பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகளிடமிருந்து நாடாளுமன்ற அமைப்புக்கும், ஜனநாயகத்துக்கும் அச்சுறுத்தல் வரவில்லை. சுரண்டும் வர்க்கங்களிடம் இருந்து ஆபத்து வருகிறது. தங்கள் குறுகிய நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஒரு கருவியாக ஆக்கிக் கொள்வதன் மூலம் நாடாளுமன்ற அமைப்பு முறைக்கு உள்ளேயும், வெளியேயும் இருந்து அதைச் சிறுமைப்படுத்துகிறது. தங்கள் நலனுக்காக நாடாளுமன்ற நிறுவனங்களை மக்கள் பயன்படுத்திக் கொண்டு பெருமுதலாளிகள் - நிலப்பிரபுக்களின் செல்வாக்கில் இருந்து விலகிச் செல்லும்போது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசாங்கங்களைப் பல தடவைகள் கலைத்ததைப் போன்று நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் காலில் போட்டு இந்த வர்க்கங்கள் மிதிப்பதற்கும் தயங்குவதில்லை'' என்று கூறும் சி.பி.(எம்) கட்சி, மேற்கு வங்கம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் ''அரை - பாசிச'' பயங்கரம் ஏவிவிடப்பட்டதைச்சான்று காட்டுகிறது. நாடாளுமன்ற ஆட்சி முறையை மாற்றி அதிபர் ஆட்சிமுறை கொண்டு வருவதற்கான முயற்சியை இன்னொரு சான்றாகக் காட்டுகிறது. இதுவும் சர்வதேச மூலதனத்தின் நிர்ப்பந்தம் மற்றும் தாராளமய ஆதிக்கத்தின் விளைவாகிய அதிகாரத்துவக் குறியீடு என்பதாக சித்தரிக்கிறது. ஆனால், அதிபர் ஆட்சிமுறை என்பது உள்நாட்டு நாடாளுமன்ற அராஜகத்துக்கான தீர்வாக ஒரு சிலரால் முன் வைக்கப்பட்டது என்பதை மூடி மறைக்கிறது. நூற்றுக்கும் மேற்பட்ட தடவை மாநில அரசாங்கங்களைக் கலைப்பதும், அரசியல் நெருக்கடி காரணமாக பலமுறை பல மாநிலங்களில் ''அரை - பாசிச'' ஒடுக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பினும், தமது கட்சி ஆளும் இரு மாநிலங்களை மட்டுமே சான்று கூறுகிறது.

இப்படிப்பட்ட வாதங்களை முன் வைத்து தற்போதைய நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறையைப் பாதுகாக்கும் திருப்பணியை சி.பி.(எம்) கட்சி மேற்கொண்டுள்ளது.

''மக்கள் நலன்களுக்காக வேண்டி இம்மாதிரியான அச்சுறுத்தல்களுக்கு எதிராக நாடாளுமன்றம் மற்றும் ஜனநாயக நிறுவனங்களைப் பாதுகாப்பதும் நாடாளுமன்றத்துக்கு வெளியிலான நடவடிக்கைகளுடன் இணைத்து அம்மாதிரியான நிறுவனங்களை திறமையாகப் பயன்படுத்துவதும் அதிமுக்கியமானதாகும்.'' (மேற்படி, பக்:30 பாரா: 5:23)



**தேர்தல் பாதையில் புரட்சி செய்யப் புறப்பட்டுள்ள இடது, வலது போலி கம்யூனிஸ்டு தலைவர்களான சுர்ஜித்தும் பரதனும்.**

ஓட்டுக் கட்சிகளின் பிழைப்புவாதம், நாடாளுமன்ற அரசியல் அராஜகம், அதிகாரவர்க்க அரசு இயந்திரத்தின் பயங்கரவாதம் ஆகியவை காரணமாக நாட்டின் நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறை மற்றும் அரசு மீதான நம்பிக்கை இழந்து மக்களே அவற்றை எதிர்த்து - வெறுத்து ஒதுக்கித் தள்ளுகின்றனர். இந்நிலையில் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீது பிரமைகளை ஏற்படுத்திக் கட்டிக் காக்கும் கடமையை போலி கம்யூனிஸ்டுகள் ஏற்றுள்ளனர்.

இதற்குக் காரணம் கீழிருந்து புரட்சியின் மூலம் தற்போதைய அரசு எந்திரத்தைத் தகர்த்து ஒரு புதிய மக்கள் ஜனநாயக அரசை நிறுவுவது சி.பி.(எம்) கட்சியின் புரட்சிகர வழிமுறையாக இல்லை. சட்டமன்றம் நாடாளுமன்றத் தேர்தல்கள் மூலம் மாநில - மத்திய அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றுவதையே சி.பி.(எம்) கட்சி தனது திட்டமாகக் கொண்டுள்ளது.

''வெகு விரைவாக மாறி வரும் அரசியல் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு பல்வேறு இடைக்கால முழக்கங்களைக் கட்சி வகுத்துக் கொள்ள வேண்டும். தற்போதைய ஆளும் வர்க்கங்களை இறக்கிவிட்டு, பாட்டாளி வர்க்கம் - விவசாயிகளின் உறுதியான கூட்டின் அடிப்படையில் ஒரு புதிய ஜனநாயக அரசையும் அரசாங்கத்தையும் நிறுவும் பணியை மக்களின் கவனத்தில் வைத்திருக்கும் அதேசமயம், கட்சிதாமாகவே வரும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, மக்களுக்கு நிவாரணம் தரும் ஒரு திட்டத்தை அமல்படுத்துமாறு வாக்குறுதி கொடுக்கும் அரசாங்கங்களைக் கட்சி அமைக்கும். அதன் மூலம் தற்போதைய வரம்புகளுக்குள்ளாகவே மாற்றுக் கொள்கைகளை முன்னிறுத்தி அமலாக்கும். இம்மாதிரியான அரசாங்கங்களை நிறுவுவது உழைக்கும் மக்களின் புரட்சிகர இயக்கத்தைப் பலப்படுத்தும்; இவ்வாறு செய்வது மக்கள் ஜனநாயக முன்னணியைக் கட்டும் நிகழ்ச்சிப் போக்கிற்கு உதவும். இது எவ்வாறாயினும் நாட்டின் பொருளாதார, அரசியல் பிரச்சினைகளை அடிப்படையில் தீர்க்காது. எனவே பெரு முதலாளிகள் தலைமை தாங்கும் தற்போதைய முதலாளிய நிலப்பிரபு அரசையும் அரசாங்கத்தையும் மாற்ற வேண்டியதன் அவசியத்தைப் பரந்துபட்ட மக்கள் திரளுக்குப் போதனை செய்வதைத் தொடரும். அதேசமயம், பருண்மையான நிலைமைக்கேற்ப மாநிலங்களிலோ, மத்தியிலோ இம்மாதிரியான அரசாங்கங்களை நிறுவுவதற்கான வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளும். இவ்வாறு மக்கள்திரள் இயக்கத்தைப் பலப்படுத்தும்'' (மேற்படி, பக்: 44-45, பாரா: 7-17)

இதுதான் சி.பி.(எம்) கட்சியின் வழிமுறையும் நடைமுறையுமாக உள்ளது. இதற்காகத்தான் சோனியா, முலயம், லல்லு, ஜெயலலிதா, சந்திரபாபு, தேவேகவுடா, கருணாநிதி என்று மாறி மாறி அல்லும் பகலும் அரசியல் தூதுபோய்க் கொண்டிருக்கிறார் சி.பி.(எம்) கட்சியின் பொதுச் செயலாளர் சுர்ஜித் சிங்.

**(தொடரும்)**


படிப்பகம்

www.padippakam.com

# அடிப்படைக் கல்வியுரிமை கானல் நீரா?

அன்று ஏப்ரல் 9-ஆம் நாள். மத்திய பிரதேசத் தலைநகர் போபாலில் மாநில முதல்வரின் மாளிகை அருகே நூற்றுக் கணக்கான குழந்தைகள் கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் அணிதிரண்டார்கள். அவர்கள் கையிலே காலியான தட்டு; காலியான வ்யிற்றுடன் அவர்கள் உரிமைக் குரலெழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அன்று போபால் மட்டுமின்றி மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பள்ளிக்கூடங்கள் காலியாகிக் கிடந்தன. ஆரம்பப் பள்ளி, பாலவாடி - அங்கன்வாடி குழந்தைகள் கையிலே தட்டுடன் திரண்டு போராட்டம் நடத்தினார்கள்.

ஏன் இந்தப் போராட்டம்? அக்குழந்தைகளுக்குப் பள்ளிகளிலே அளிக்கப்பட்டு வந்த மதிய உணவு கடந்த ஆண்டில் நிறுத்தப்பட்டு விட்டது. குழந்தைகளைப் பட்டினியால் வதைக்கும் இக்கொடுஞ் செயலை எதிர்த்து பல சமூக நல அமைப்புகள் உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டதைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு செப்டம்பரில் உச்ச நீதிமன்றம் ஒரு உத்தரவை வழங்கியது. இதன்படி எல்லா மாநில அரசுகளும் இவ்வாண்டு பிப்ரவரிக்குள் மாநிலத்தின் பாதியளவு மாவட்டங்களிலாவது குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியது. ஆனாலும் மார்ச் மாதம் வரை பல மாநிலங்களில் மதிய உணவுத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை; அல்லது பெயரளவுக்கே தொடங்கப்பட்டன. இந்த அநீதியை எதிர்த்துத்தான் குழந்தைகள் ''உணவு கொடு!'' என்று உரிமைப் போராட்டத்தை நடத்தியுள்ளனர். ம.பி. மட்டுமின்றி நாட்டின் 9 மாநிலங்களில் ஆங்காங்கே சிறியதும் பெரியதுமாக இப்போராட்டம் நடந்துள்ளது.

நாட்டின் உணவு தானியக் கிடங்குகளில் 6 கோடி டன் அரிசியும் கோதுமையும் நிரம்பி வழிந்து கெட்டழுகுகிறது. ஆனால் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவளிக்க சாத்தியமில்லை என்று நிதிநிலைமையைக் காரணம் காட்டுகின்றன மாநில அரசுகள். உணவு தானியங்களைப் பள்ளிக்குக் கொண்டு வர ஆகும் போக்குவரத்துச் செலவு, சமையல் செலவு, பராமரிப்புச் செலவு ஆகியவற்றுக்குப் போதிய நிதியில்லை என்கின்றன. மதிய உணவுத் திட்டத்தால் ஆசிரியர்களின் நேரம் வீணாகிறது; பள்ளி நடவடிக்கைகளில் இடையூறு ஏற்படுகிறது; பள்ளியின் தூய்மை கெடுகிறது என்று சில மாநில அரசுகள் கூறுகின்றன. மணிப்பூர் மாநில அரசோ, குழந்தைகள் மதிய நேரத்தில் சாப்பிட விரும்புவதில்லை; இதனால் சமைத்த உணவு வீணாகிறது என்று கூசாமல் புளுகுகிறது.

ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வந்த மதிய உணவுத் திட்டம் என்பதே மோசடித்தனமானது. இத்திட்டத்தின் கீழ் ஒரு மாதத்துக்கு ஒரு குழந்தைக்கு 3 கிலோ அளவுக்குத்தான் கோதுமை அல்லது அரிசி ஒதுக்கப்பட்டது. இது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஒதுக்கீடு செய்யப்பட்டு சத்துணவுக் கூடங்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று விதிமுறைகள் இருந்தாலும், எந்த இடத்திலும் முறையாக உணவு தானியங்கள் வழங்கப்பட்டதே கிடையாது. வழங்கப்பட்ட அரிசியும் கோதுமையும் சமைப்பதற்கு ஏற்றதாக - தரமானதாக இருந்ததேயில்லை. கெட்டுப்போன, புழுத்துப்போன அரிசியும் கோதுமையும்தான் வழக்கமாக வழங்கப்பட்டன. அதைச் சமைத்துச் சாப்பிடவே முடியாது. அந்த உணவைத்தான் ஏழைக் குழந்தைகள் இத்தனை காலமும் மதிய உணவாகச் சாப்பிட்டு வந்தார்கள். இப்போது அந்த உணவிலும் மாநில அரசுகள் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டன.

உணவு உற்பத்தியைக் குறை; மேலை நாடுகளிடமிருந்து உணவு தானியங்களை இறக்குமதி செய்; மானியங்களை நிறுத்து; இலாபமில்லாத சேவைத் துறைகளை மூடு! - என்று உத்திரவிடுகிறது உலக வங்கி. எஜமான் கோலெடுத்தால் குரங்காக ஆடும் இந்திய ஆட்சியாளர்கள், மதிய உணவுத் திட்டத்தால் வீண் செலவாகிறது; அரசிடம் நிதியில்லை என்கிறார்கள். உலக வங்கியின் உத்தரவுக்கு நியாயவாதங்களை அடுக்குகிறார்கள். உச்ச நீதிமன்ற உத்தரவைவிட உலக வங்கியின் உத்தரவுதான் முக்கியமானது என்று மதிய உணவுத் திட்டத்தையே மூடுகிறார்கள்.

மதிய உணவுக்காக குழந்தைகள் ஆர்ப்பாட்டம் செய்த விவகாரம் வெளியே அம்பலமானால் அது தேசிய அவமானமாகி விடும் என்பதால், மக்கள் விரோத ஆட்சியாளர்கள் இப்போது இன்னுமொரு புதிய சதியில் இறங்கி வருகிறார்கள். பள்ளிக்கூடம் என்று இருந்தால் அங்கு குழந்தைகள் கல்வி கற்கவும் மதிய உணவு பெறவும் அரசு ஏற்பாடு செய்தாக வேண்டும். பள்ளிக்கூடத்தையே மூடிவிட்டால்?...

மார்ச் 29-ஆம் நாள். திருவனந்தபுரம் அருகே விதுரா என்னுமிடத்திலுள்ள

''மதிய உணவு கொடு!'' - ம.பி. முதல்வர் மாளிகை அருகே கையிலே தட்டேந்தி குழந்தைகளின் ஆர்ப்பாட்டம்.




படிப்பகம்

ஆரம்பப் பள்ளிக்கு வந்த குழந்தைகள், அன்று பள்ளிக்கூடம் திறக்கப்படாததால் விளையாடிக் கொண்டிருந்தார்கள். நண்பகலை நெருங்கியபோதும் பள்ளிக்கூடம் திறக்கப்படவில்லை. மணியடிக்கப்படவில்லை. ஆசிரியர்கள் வரவில்லை. மதிய உணவாகத் தரப்படும் கஞ்சியும் பயிறும் சமைக்கப்படவுமில்லை. விவரம் புரியாமல் பட்டினியோடு குழந்தைகள் வீடு திரும்பினார்கள். இனிமேல் இந்தப் பள்ளிக்கூடமே திறக்கப்படாது என்று அவர்களுக்குத் தெரியாது.

கேரளத்தை ஆளும் காங்கிரசு கூட்டணி அரசு, செலவுகளைக் குறைப்பது என்ற பெயரில் 'சாத்தியமற்ற' 2650 பள்ளிக்கூடங்களை மூடிவிட அண்மையில் முடிவு செய்துள்ளது. ஒரு பள்ளியில் மாணவர்களின் வருகை 25%-க்கும் குறைவாக இருந்தால் அப்பள்ளியைத் தொடர்ந்து நடத்த சாத்தியமில்லை என்று கேரள கல்வித் துறை விதிமுறைகளை வகுத்துக் கொண்டுள்ளது. இப்படி 'சாத்தியமற்ற' பள்ளிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக கணக்குக் காட்டும் கேரள ஆட்சியாளர்கள், இத்தகைய பள்ளிக்கு அரசு நிதியையும், மானியங்களையும் ஒதுக்குவது வீண் விரயம்; கஜானா காலியாக உள்ள நிலையில் இத்தகைய பள்ளிகளை மூடிவிடுவதுதான் புத்திசாலித்தனமான சிக்கன நடவடிக்கை என்று தமது செயலுக்கு நியாயம் கற்பிக்கின்றனர்.

இதிலே கொடுமை என்னவென்றால், மூடப்பட்ட பள்ளிகளில் பெரும்பாலானவை தாழ்த்தப்பட்ட - பழங்குடி மாணவர்கள் படிக்கும் ஆரம்பப் பள்ளிகளாகும். இத்தகைய பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள், தொடர்ந்து கல்வி கற்க முடியாமல் பாதியிலேயே விட்டுச் செல்வது அதிகரித்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம், தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்களைக் கவ்வியுள்ள வறுமை. அதிலும் குறிப்பாக, புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் தனியார்மயமும், தாராளமயமும், உலகமயமும் திணிக்கப்பட்ட பிறகு, கூலி - ஏழை விவசாயிகளான தாழ்த்தப்பட்ட - பழங்குடியினர் பிழைக்க வழியின்றி குடும்பத்தோடு பெருநகரங்களை நோக்கி ஓடுவதும் அல்லது எஸ்டேட்டுகள் - கல்குவாரி, செங்கற்சூளைகளில் குடும்பத்தோடு கொத்தடிமைகளாக உழல்வதும் தீவிரமாகி விட்டது. இதனால் தாழ்த்தப்பட்ட - பழங்குடியினக் குழந்தைகள் படிப்பைக் கைவிடுவது தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

மேலும், போக்குவரத்து - சாலை வசதிகள் இல்லாத பின்தங்கிய பகுதிகளிலிருந்து காடுகளையும் ஆறுகளையும் கடந்து இக்குழந்தைகள் பள்ளிக்கு வரவேண்டியுள்ளது. மழைக்காலங்களில் பாலமில்லாத ஆறுகளைக் கடந்து இக்குழந்தைகள் பள்ளிக்கு வர சாத்தியமே இல்லை. அடிப்படை வசதிகளைக்கூட செய்து தராத ஆட்சியாளர்கள், மாணவர்களின் வருகை குறைந்து விட்டதாகக் கணக்குக் காட்டி ஆரம்பப் பள்ளிகளை மூடுவது எந்த வகையில் நியாயமாகும் என்று குமுறுகிறார்கள் தாழ்த்தப்பட்ட - பழங்குடி அமைப்புகளின் தலைவர்கள். பதனம்திட்டா மாவட்டத்திலுள்ள ஒரு ஆரம்பப் பள்ளியில் 150க்கும் மேற்பட்ட மாணவர்கள் சராசரியாக வருகை தந்தபோதிலும் அப்பள்ளியை மூட உத்திரவிட்டுள்ளது, அரசு. ஏனெனில் விதிமுறைகளின்படி, சரியாக 25% க்கு மேலான மாணவர்களின் வருகை இல்லாமல், ஓரிரு மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால்கூட ஏற்க முடியாது என்கிறது, அரசு. இப்படி ஓரிரு மாணவர்களின் எண்ணிக்கைக் குறைவு காரணமாக இம்மாவட்டத்தில் 20-க்கும் மேற்பட்ட ஆரம்பப் பள்ளிகள் மூடப்பட்டு விட்டன.



**கேரளத்தின் தாலத்தக்காவு கிராமத்தில் மூடப்பட்ட பழங்குடியின ஆரம்பப்பள்ளி: உலக வங்கி உத்தரவுப்படி நிரந்தர விடுமுறை.**

நாட்டிலேயே முழுமையாகக் கல்வியறிவு பெற்ற முதல் மாநிலமாக (ஏறத்தாழ 90% பேர்) கேரளா பெருமைப்பட்டுக் கொண்டாலும், அம்மாநிலத்தில் தாழ்த்தப்பட்டோரில் 69.2% பேரும், பழங்குடியினரில் 48.6% பேரும்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். இப்போது ஆரம்பப் பள்ளிகளையும் மூடிவிடும் நடவடிக்கையால், இனிவரும் ஆண்டுகளில் இந்த விகிதம் மேலும் சரிந்து கொண்டே போய் பீகார், உ.பி., இராசஸ்தான் மாநிலங்களைப் போல மிகவும் பின்தங்கிய நிலைக்குக் கேரளா தள்ளப்படும் என்று கல்வியாளர்கள் எச்சரிக்கின்றனர். ஆனாலும் மாநிலத்தின் எதிர்காலம் பற்றியோ, மக்கள் நலனைப் பற்றியோ மயிரளவுக்குக் கூட அக்கறையில்லாத ஆட்சியாளர்கள் உலக வங்கி உத்தரவுப்படி 'சாத்தியமற்ற' பள்ளிகளை மூடுவதிலேயே முனைப்பாக நிற்கிறார்கள்.

பிற மாநிலங்கள் ஏழைக் குழந்தைகளின் கல்வியுரிமையைப் பறிக்கும்போது, நாங்கள் அதற்குச் சற்றும் சளைத்தவர்கள் அல்ல என்கிறது தமிழகம். ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகளை நடத்த நிதியில்லை என்று அவற்றைத் தனியாரிடம் கையளிக்க தமிழக அரசு அண்மையில் முடிவு செய்துள்ளது. 1017 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளையும் 243 பழங்குடியினருக்கான பள்ளிகளையும் ஆதிதிராவிடர் நலத் துறையிடமிருந்து பிடுங்கி கல்வித் துறையிடம் ஒப்படைக்கவும் திட்டமிட்டுள்ளது. உலக வங்கியின் கட்டளைப்படி தாழ்த்தப்பட்டோருக்கான நிதி ஒதுக்கீட்டை வெட்டி, இந்த தடாலடி முடிவை தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுதவிர, அரசு கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மானியத்தைக் குறைத்து, கல்லூரிகள் கல்விக் கட்டணத்தை உயர்த்திக் கொள்ள தாராள அனுமதியை பாசிச ஜெயா கும்பல் வழங்கியுள்ளது. இதுவும் போதாதென்று மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட தொழிற் படிப்புகளில் கிராமப்புற மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த இடஒதுக்கீடு சலுகையையும் உயர்நீதி மன்றம் பறித்துவிட்டது. இவையனைத்தும் ஏழைகள் - தாழ்த்தப்பட்டோரின் கல்விபெறும் உரிமையைப் பறிப்பதோடு, கல்வி நிலையங்களை வியாபாரக் கூடங்களாக்குவதை மேலும் தீவிரப்படுத்தவே செய்யும்.

பெரும்பான்மை உழைக்கும் மக்களுக்குக் கல்வி கிடையாது என்பதைத்தான் பார்ப்பனிய இந்துமதம் ஈராயிரம் ஆண்டுகளாகப் பின்பற்றி வருகிறது. பார்ப்பனர்களால் ஆராதனை செய்யப்படும் 'மனு', தனது தர்மத்தில் பார்ப்பனரல்லாதோர் வேதத்தைக் காதால் கேட்டாலே காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்று; உச்சரித்தால் நாக்கை வெட்டு என்று கல்வி மறுப்பிற்காகப் பெரும் தண்டனைப் பட்டியலையே உருவாக்கியிருந்தான்.

இன்றும் அதே மனுதர்மம்தான் புதிய வடிவில் கோலோச்சுகிறது. மனுவுக்குப் பதிலாக அமெரிக்காவின் ஆதிக்கக் கருவியான உலக வங்கி; மனு தர்மத்துக்குப் பதிலாக இந்திய அரசின் கொள்கைகள்!

● குமார்

**Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.**

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



இது ஏதோ பத்தோடு பதினொன்றாக ஒரு பங்களா அல்ல. தலைநகர் டெல்லியின் மையப் பகுதியில் அமைந்துள்ள பிரம்மாண்டமான அரண்மனை. கண்ணைப் பறிக்கும் சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்ட 2 கி.மீ நீள தாழ்வாரம்; 345 அறைகள்; வரவேற்பு மண்டபம், விருந்து மண்டபம், ஆலோசனை மண்டபம் என 37 பெரும் கூடங்கள்; ஒவ்வொன்றிலும் பளிங்குக் கற்கள், வண்ணச் சர விளக்குகள், உயரிய கலைநயமிக்க சிற்பங்கள்; அரண்மனையைச் சுற்றி பிரம்மாண்டமான தோட்டங்கள், தடாகங்கள்.

இவை தவிர நவீன கோல்ஃப் மைதானம், நீச்சல் குளம், ஸ்குவாஷ் - டென்னிஸ் விளையாட்டரங்குகள், திரையரங்குகள், ஏவல்களைச் செய்ய 2000 பணியாளர்கள். இவையனைத்தும் இந்திய அரசுத் தலைவர் (ஜனாதிபதி) என்ற ஒரு நபர் குடும்பம் நமது வரிப்பணத்தில் அனுபவிக்கும் ஆடம்பர வாழ்க்கைக்கான ஏற்பாடுகள்!

இந்த ஆடம்பர தர்பாரில் அரசுத் தலைவரின் அன்றாட வேலை என்ன? ஒரு சில கோப்புகளைப் பார்ப்பார். ஏறத்தாழ 50 பிரமுகர்களைச் சந்திப்பார். வெளிநாடுகளிலிருந்து தலைவர்கள், அதிகாரிகள் வந்தால் வரவேற்று உபசரித்து தடபுடலான விருந்தளிப்பார். இந்த வேலைகளைச் செய்து அலுத்துக் களைத்த அரண்மனை நாயகன் புத்துணர்ச்சி பெற, அரண்மனைப் பூங்காவில் உலா வருவார். கோடையில் இளைப்பாற சிம்லா - டேராடூனிலுள்ள உல்லாச மாளிகையில் ஓய்வெடுப்பார். ஆங்கிலேய எஜமானர்கள் உருவாக்கிய இந்தச் சொர்க்கபுரியை காலனிய பாரம்பரியத்துடன் கட்டிக் காக்க இந்திய அரசு செலவிடும் தொகை ஆண்டுக்கு 9 கோடி ரூபாய். அதாவது, ஒரு நாளைக்கு 2.5 இலட்ச ரூபாய். இந்த ஆடம்பர வாழ்வை அனுபவித்து வரும் ஆளும் வர்க்கங்களின் தலையாட்டி பொம்மையான அரசுத் தலைவர் நாராயணனின் பதவிக்காலம் முடிய உள்ளதால், அடுத்த தலையாட்டி பொம்மையைத் தேர்வு செய்ய ஓட்டுக் கட்சிகள் இப்போது பேரங்கள், பேச்சு வார்த்தைகளில் பரபரப்பாக இறங்கி விட்டன.



இதோ, இது ஏதோ அடுக்கி வைக்கப்பட்ட சரக்கு மூட்டைகளல்ல. பழைய டெல்லியின் இரயில் நிலையமருகே உள்ள புழுதிபடிந்த நடைபாதை - அதுதான் ஆயிரக்கணக்கான அடையாளமற்ற, வீடற்ற உழைப்பாளி மக்களின் இரவு நேரப் புகலிடம். தலைநகர் டெல்லியில் துப்புரவுப் பணிபுரிவோர், சலவை செய்வோர், மூட்டைத் தூக்குவோர், ரிக்ஷா இழுப்போர் என உழைப்பாளர்களில் வீடற்றோரின் எண்ணிக்கை ஒரு லட்சத்துக்கும் மேல். பழைய டெல்லியில் மட்டும் முப்பதாயிரத்துக்கும் மேற்பட்டோர் பழைமையான குறுகிய சந்துகளிலும் நொறுங்கிய நடைபாதைகளிலும் கண்களைக் கூசச் செய்யும் தெரு விளக்குகள், வாகனப் புகை - தூசுகளுக்கு மத்தியில் இரவில் சில மணி நேரம் நிம்மதியற்ற உறக்கத்தைத் தழுவுகின்றனர். சில நேரங்களில் குடிகார மேட்டுக்குடியினர் வேகமாக வாகனங்களைத் தாறுமாறாக ஓட்டி இவர்களின் உயிரைப் பறிப்பதும் நடக்கும். தலைநகர் டெல்லியின் சாலையோரங்களிலும் நடைபாதைகளிலும் உழைப்பாளிகள் படுத்துறங்குவது பல்லாண்டுகளாகத் தொடர்கிறது. தனியார்மய - தாராளமயக் கொள்கை தீவிரமாக்கப்பட்டதிலிருந்து பிழைப்புக்காக பெருநகரங்களில் குவியும் வீடற்ற உழைப்பாளர்களின் எண்ணிக்கையும் பெருகிக் கொண்டே போகிறது. இவர்களுக்கான இரவுப் புகலிடம் என்ற பெயரில், பெரிய அளவில் பாலிதீன் கூடாரம் அமைத்து கட்டணக் கொள்ளையில் ஈடுபடுகிறது, டெல்லி மாநகராட்சி. போலீசுத் தொல்லையிலிருந்து மீள இத்தகைய கொட்டகைகளை விட்டால் வேறு வழியில்லை என்ற நிலையில், மழை - குளிர் காலங்களில் உழைப்பாளிகள் இதனுள் நெருக்கியடித்து முடங்கிக் கிடந்து இரவுப் பொழுதைக் கழிப்பார்கள்.

நாட்டின் முதல் குடிமகன் என்ற கௌரவப் பதவியிலுள்ள அரசுத் தலைவர் இல்லை என்றாலும் அரசாங்க வேலைகள் எப்போதும் போல் நடக்கும். ஆயினும், அதிகாரம் ஏதுமற்ற அலங்கார பொம்மையான அரசுத் தலைவருக்கு அரண்மனை வாசம்; ஆடம்பர வாழ்வு. அவர் கையெழுத்திடுவதோ ''பொடா'' போன்ற கருப்புச் சட்டங்களில்! ஆனால் வீடற்ற இந்த உழைப்பாளிகள் இல்லையென்றால் துப்புரவுப் பணிகள் பாதிக்கப்பட்டு டெல்லி மாநகரமே நாறிப் போய்விடும். அன்றாட தேவைக்கான பொருட்களும் அங்காடிக்கு வந்து சேராது. இப்படி அத்தியாவசியப் பணிகளைச் செய்யும் வீடற்ற உழைப்பாளிகள் இரவில் உறங்குவதோ தெருவோரங்களில். இந்திய அரசின் இந்த வக்கிரத்தையும் பாரபட்சத்தையும் இனியும் நாம் சகித்துக் கொள்ளத்தான் முடியுமா?